அரச ஈட்டு முதலீட்டு வங்கி

ஆண்டறிக்கை 2020

நிலையான வளர்ச்சியை வலுவாதாரமாக்கல்





உள்ளடக்கம்

நிதிசார் முக்கிய குறிப்புகள் 04 | நிதி மீளாய்வு 06 | தலைவரின் செய்தி 11 | பொது முகாமையாளரின் மீள்பார்வை 13 |
பணிப்பாளர் சபை 16 | கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் 19 | கூட்டிணைந்த ஆளுகை 21 |
சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 65 | சபையின் பரிந்துரைக் குழுவின் அறிக்கை 67 |
சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை 68 | சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை 69 |
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் 73 | மனித வள முகாமைத்துவம் 85 |
கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு 87 | எங்கள் பண்டங்களும் சேவைகளும் 88 |

நிதியியல் தகவல்கள்

பணிப்பாளர்களின் அறிக்கை 90 | நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை 94 |
வங்கியின் உள்ளக் கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 96 |
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு 98 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 100 |
நிதி நிலமைக் கூற்று 104 | இலாபம் அல்லது நட்டக் கூற்று 105 | உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று 106 |
காசுபாய்ச்சல் கூற்று 107 | நிதியியல் கூற்றுகள் 108 | நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் 126 |
பெறுமதி கூட்டப்பட்ட கூற்று 163 | பத்து வருட புள்ளிவிபரவியல் சுருக்கம் 164 |

நிலையான வளர்ச்சியை வலுவாதாரமாக்கல்

உலகளாவிய தொற்றுநோய் அதன் அழிப்புப் பாதையில் தொடர்கின்றது, வியாபாரங்களும் உலகளாவிய பொருளாதாரமும் தடுமாறுகின்றன, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, எங்கள் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் தனது செயலாற்றுகையை பேணுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும், அதன் போக்கை மாற்றுவதற்காக விரைவானதும் மற்றும் தைரியமானதுமான நகர்வுகளை மேற்கொண்டது.

கடந்த ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட முன்னெப்போதும் இல்லாத சவால்கள் எங்கள் உறுதிப்பாட்டையும் தொலைநோக்குப் பார்வையையும் பரிசோதித்ததுடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான பொறுமதிகளை வழங்குவதற்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியது.

பொருளாதார நிலமைகளில் கடுமையான நெருக்கடிகள் இருந்தபோதிலும், எங்கள் வங்கி ஒரு நிலையான வளர்ச்சியை நிலை நிறுத்தியது மற்றும் எங்கள் இலாப எல்லை வரம்பை அதிகரிப்பதற்காக, வங்கியின் வர்த்தக நாமமான அரசுக்கு சொந்தமான வங்கிய என்ற வகையில் பட்டயப்படுத்தப்படாத எல்லைகளை பல்வகைப்படுத்துதல் மற்றும் மூலதனமாக்குதல் மூலம் எங்கள் செயலாற்றுகைகள் மேம்படுத்தப்பட்டது.

பாரம்பரியமாக வீட்டு நிதி மற்றும் விவசாயம் சார்ந்த வங்கியாக இருந்த நாம், எங்கள் பரிமாணங்களை வியாபரக் கடன்களின் புதிய பிரிவுக்கான சேவை என விரிவுபடுத்தினோம். எங்கள் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்திற்கு ஆதரவாக “சௌபாக்கியா” திட்டத்தின் கீழ் வங்கி கடன் தவணைக்கான தடைக்காலம் மற்றும் கடனுக்கான சலுகைகள் என்பவற்றை வழங்கியது.

எங்கள் புதிய அணுகுமுறையான, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பல்வேறுபட்ட வருமானக் குழுக்களுக்கான தேவைகளை பூர்த்திசெய்வத்கான நிதியியல் சேவைகளை வழங்குதலை நாங்கள் தொடர்ந்வோம் மற்றும் அண்மைய எதிர்காலத்தில் வங்கிக்கான மேம்படுத்தப்பட்ட, சமச்சீரான பண்ட போர்ட்போலியோவை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.



தொலை நோக்கு

பாவனையாளர் நிதி சந்தையில் தலைமை தாங்குபவர்களாக இருப்பதுடன், அபிவிருத்தி வங்கியியலில் தேசத்தின் பெறுமதிமிக்க பங்காளராக இருப்பதும்.

செயற் பணி

தேசத்திற்கான முன்னணி வீடமைப்பு வங்கியாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொடர்ந்தும் இருப்பதுடன், அபிவிருத்தி வங்கியியலில் பெறுமதிமிக்க பங்காளராகவும் இருப்பது.

வாடிக்கையாளர் : அதி உயர்வான வாடிக்கையாளர் சேவை, புத்தாக்கம், தரம், மற்றும் காலத்திற்கேற்றதொழில் நுட்பம் என்பவை ஊடாக, எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அவர்களின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதி தேவைகளுக்கு பொருத்தமான, கவர்ச்சிகரமான நிதியியல் தீர்வுகளை வழங்கும் கடப்பாடுடையவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.

வர்த்தக பங்காளர்கள் : முதலீடுகளுக்கு உறுதியான பாதுகாப்பும் மற்றும் நெகிழ்ச்சியும் உள்ள சிறந்த வருவாய்களை நாங்கள் வழங்குகின்றோம்.

பணியாட் தொகுதியினர் : நியாயமான மதிப்பீட்டுக் குழுக் கலாச்சாரத்துடன் கூடிய ஆரோக்கியமானதும், உற்பத்தியாற்றல் மிக்கதுமான பணிச் சுற்றாடல் ஒன்றை உருவாக்கும் அதே நேரத்தில். எமது பணியாளர்கள், தம்மை முழுமையான ஆற்றலுடையவர்களாக வளர்த்துக் கொள்வதற்கும், தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கும் தேவையான வாய்ப்புகளையும் நாங்கள் வழங்குகின்றோம்.

பங்குடமையாளர்கள் : பங்குடமையாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் அதே நேரத்தில், இலாபமீட்டும் வளர்ச்சியினூடாக பங்குடமையாளர்களின் பெறுமதியை விருத்தி செய்யும் கடப்பாடுள்ளவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.

தொழில்நுட்பம் : துரிதமான செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருப்பது, தரம் மற்றும் வசதிகள் ஆகியவை, தானாகவே இயங்கக் கூடிய தன்மை மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றை பிரயோகிப்பதன் ஊடாக, பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வெளியக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் கட்டுப்பட்டிருக்கின்றோம். தீர்மானம் எடுக்கும் செயன் முறையில் திறமையையும். பயனுறுதியையும் விருத்தி செய்வதற்கு துரிதமானதும், மிகச் சரியானதுமான தகவல்களையும் உள்ளக வாடிக்கையார்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.

சமுதாயம் : தேசிய அபிவிருத்தியில் நாங்கள் ஒரு பங்காளராக இருப்பதானால், எமது சமூகத்தின் வாழ்க்கை முறையை விருத்தி செய்வதற்கு நாங்கள் பணியாற்ற வேண்டியவர்களாக இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

கூட்டிணைந்த பெறுமதிகள்

நாங்கள் நிலை நிறுத்துபவை

- நாங்கள் நேர்மையாக செயற்படுவதுடன், மரியாதை காண்பிப்பவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் செய்கின்றவை அனைத்திலும் தொழிற்சார் திறமைகளையும், அதி உயர்வான சிறப்புகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதுடன், எமது செயற்பாடுகளுக்கான பொறுப்பு கூறுதலையும் பொறுப்பேற்கின்றோம்.
- நாங்கள் வெளிப்படைத் தன்மையை காட்சிப்படுத்துவதுடன் குழுவாக பணியாற்றுவதற்கும் முயற்சிக்கின்றோம்.
- நாங்கள் புத்தாக்கமுள்ள கருத்துக்களையும் தீர்வுகளையும் எடுப்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றோம்.
- நாங்கள் கற்றுக் கொள்வதற்கான அவாவையும். வங்கியுடன் இணைந்து வளருவதற்கான ஆர்வத்தையும் கொண்டிருக்கின்றோம்.

நிதிசார் முக்கிய குறிப்புகள்

நிதிசார் கூற்றுகளின் பகுப்பாய்வு	2020 ரூபா மில்.	2019 ரூபா மில்.	மாற்றம் %
வட்டி வருமானம்	6,077	5,982	1.58
வட்டிச் செலவினம்	(3,960)	(3,951)	0.23
தேறிய வட்டி வருமானம்	2,116	2,030	2.92
வரிக்கு முந்திய இலாபம்	572	500	17.51
வரிவிதிப்பு	216	81	187.28
வரிக்கு பிந்திய இலாபம்	356	419	(15.52)
அரசாங்க பிணையங்களில் முதலீடு	2,415	2,549	5.20
கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள தேறிய	36,857	35,561	3.64
மொத்தச் சொத்துக்கள்	52,802	46,980	12.39
வாடிக்கையாளர் வைப்புக்கள்	45,388	38,872	16.76
கடன் பெறுகைகள்	348	1,612	(78.41)
பங்குதாரர்களின் நிதி	6,020	5,659	6.37
விகிதப் பகுப்பாய்வு			
இலாப மட்டம்	%	%	
நிகர வட்டி எல்லை	4.24	4.52	(6.19)
பங்குகளின் வருமானம் (ROE)	6.09	7.73	(21.22)
சொத்துக்களின் வருமானம் (ROA)	1.15	1.11	3.60
மூலதனப் போதுமை			
உரிமைப் பங்கு/மொத்த சொத்து	11.41	12.04	(5.23)
உரிமைப் பங்கு/கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	16.34	15.91	2.70
	Basel (III)	Basel (III)	
அடுக்கு 1	20.17	21.04	4.13
அடுக்கு 1 & 11	20.90	21.77	(4.00)
திரவத் தன்மை			
திரவத்தன்மையான சொத்துக்களின் விகிதம்	37.29	25.09	48.62
கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் / வைப்புகள	81.20	91.48	11.23
கடன் பெறுகைகள்/கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	0.94	4.5	79.11
தரப்படுத்தல்			
சொத்தின் தரம்			
செயற்படாத கடன்கள்/கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	22.94	21.21	8.16
மொத்த சொத்தில் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்	72	77.47	7.06

ரூ. 12.4 பில்லியன்

கடன் விடுவிப்புகள்


ரூ. 12.04
பில்லியன்
ரூ. 6.6
பில்லியன்
ரூ. 2.6
பில்லியன்
ரூ. 1.84
பில்லியன்

நிதி மீளாய்வு

2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்ப்பரவல் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சியினால் நிதி நிறுவனங்களின் விரிவாற்றல் தொடர்ந்தும் மந்தநிலையில் காணப்பட்டது. கோவிட்-19 நோய்ப்பரவல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொது சுகாதாரப் பிரச்சினைகள் உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் வியாபாரத்தில் கணிசமான இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன. மாகாண எல்லைகளைத் தாண்டுவதற்கான பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார முடக்கங்கள் போன்றன நாட்டின் கூட்டிணைந்த நிறுவனங்கள் மற்றும் வீட்டுத்துறையின் வருமானத்தை குறிப்பிட்டளவு சரிவடையச் செய்வதற்கு வழிவகுத்தன, அத்தகைய சூழ்நிலையின் விளைவு நிதி நிறுவனங்களின் சொத்துத் தரம் மற்றும் இலாபம் ஆகியவற்றில் சரிவினை ஏற்படுத்தியது. பேரினப் பொருளாதாரச் சூழலில் எதிர்மறையான கண்ணோட்டம் இருந்தபோதிலும், வங்கியானது மீள்தன்மையுடனும் மிதமான செயல்திறனுடனும் இருக்க நிர்வகிக்கப்பட்டுள்ளது, வரிக்கு முந்தைய இலாபம் 2020ஆம் ஆண்டில் ரூபா 572.மில்லியனாக இருந்தது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14% அதிகரிப்பைக் குறிக்கின்றது.

வட்டிச் செலவில் ஈர்க்கக்கூடிய பெருக்கத்தின் தாக்கம் மற்றும் நிகர வட்டி வரம்பில் ஏற்பட்ட மாற்றத்தால் வணிக அளவுகளில் ஒரு பாரிய அதிகரிப்பாக ஈடுசெய்யப்பட்டது. இதையடுத்து, வட்டி வருமானம் ரூ.6076.77 மில்லியனாக அதிகரித்தது, இது 1.59% வீதமாவதுடன் சொத்து அடிப்படை ரூ.52,802 மில்லியனாக மாறியது, இது மற்றொரு சாதனையாகும், இது அதன் கடன் பட்டியலின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் சிறந்த சொத்துத் தரத்தைக் குறிக்கின்றது.

2019 உடன் ஒப்பிடும்போது வட்டி வருமானம் 1.58% வீதத்தினால் அதிகரித்துள்ளது. வட்டி வருமானத்தின் அதிகரிப்பு முக்கியமாக கடன், அதிக மிகை திரவத்தன்மை மற்றும் ஏனைய வங்கிகளுடனான வைப்பு ஆகியவற்றிலிருந்து எழுந்ததாகும். கடன்கள் மற்றும் முன்தொகை மீதான வட்டி வருமானம் மற்றும் கடன்கள் மற்றும் பிற கருவிகளின் வட்டி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சற்று வீழ்ச்சியடைந்த போதிலும் வங்கியில் முதலிடுதலில் இருந்தான வட்டி வருமானமானது 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.42% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது

தேறிய வட்டி வருமானம்

2020 ஆம் ஆண்டிற்கான வருமானக் கூற்றில் தேறிய வட்டி வருமானம் ரூபாய். 2,116 மில்லியன் ஆவதுடன் 2019 ஐ விட 4.24% வீதம் அதிகமாகும், இதற்கு கூட்டு ஒப்பந்தங்கள், பிற வட்டி சம்பாதிக்கும் சொத்துக்கள் மற்றும் வங்கிகளுடனான வைப்புகளில் காணப்பட்ட அதிக வட்டி விகிதங்களின் தாக்கம் காரணமாக வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதிபலிக்கின்றது. வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஏனைய வட்டியைத் தாங்கும் பொறுப்புகளின் மீதான உயர் வட்டி வீதத்தின் தாக்கத்தின் காரணமாக வருடத்தின் பிற்பகுதியில் சில்லறை வைப்புகளின் அடிப்படை அதிகரிப்பிலிருந்து பெறப்பட்ட மிகை திரவத்தன்மை காரணமாக உயர் வட்டிச் செலவு பகுதியளவில் ஈடுகட்டப்பட்டது.

வட்டியல்லா வருமானம்

வட்டி அல்லாத வருமானம் என்பது கட்டணம் மற்றும் தரகு நிதி முதலீடுகளிலிருந்து தேறிய இலாபம்/ இழப்பு மற்றும் பிற இயக்க வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கியது. கட்டணம் மற்றும் தரகு வருமானம் வட்டி அல்லாத வருமானத்தின் முக்கிய பகுதிகளாகும், இதில் கடன் வழங்குவதில் இருந்து அறவிடப்படும் கட்டணங்களும் அடங்கும். 2020 ஆம் ஆண்டில் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் முந்தைய ஆண்டை விட 30.70% அதிகரித்துள்ளதுடன், 2019இல் பெறப்பட்ட ரூபா 113.33 மில்லியனுக்கு எதிராக 2020 இல் ரூபா 148.12. மில்லியன் பெறப்பட்டது. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான மதிப்பில் உள்ள நிதி சொத்துக்கள் 2020 இல் ரூபா. 1.87 மில்லியனை அடைந்தது. மேலும் பங்குலாபம் மற்றும் நானாவித வருமானங்களை உள்ளடக்கிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் ரூபா 33.85 மில்லியன் ஆகும்.

மொத்த தொழிற்பாட்டு வருமானம்


ஆண்டிற்கான கட்டணம் மற்றும் தரகு வருமானம் சற்று மாற்றப்பட்டாலும், தேறிய வட்டி வருமானம் மற்றும் பிற தொழிற்பாட்டு வருமானத்தின் அதிகரிப்பானது மொத்த தொழிற்பாட்டு வருமானத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூபாய். 2,300.08 மில்லியனை முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 45.82% வீத குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை வெளிப்படுத்துகின்றது.

வருமானக் கூற்றின் பகுப்பாய்வு

வருமானக் கூற்றின் சுருக்கம்

	2020	2019	மாற்றம்
	ரூ.(மில்)	ரூ.(மில்)	%
வட்டி வருமானம்	6,076.77	5,981.51	1.59%
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	2,300.08	2,173.66	5.82%
வரிக்கு முன்னரான இலாபம்/ நட்டம்	572.07	499.65	14.49%


நிதி மீளாய்வு தொடர்ச்சி



இலாபம்

2020 ஆம் ஆண்டிற்கான வரிக்குப் முந்தைய இலாபம் ரூபா. 572.07 மில்லியனாக உள்ளது, இது 2019 உடன் ஒப்பிடும்போது 14% அதிகரித்து காணப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட கட்டாய பணப்புழக்கம் மற்றும் மூலதன போதுமான விகிதங்களை பராமரித்துள்ளோம் என்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

ROE என்பது நிதி மதிப்பு உருவாக்கத்தில் ஒரு முக்கிய மூலோபாய விளைவு. இது முகாமைத்துவ அணுகுமுறையின் செயல்திறனின் குறிகாட்டியாக செயல்படுகிறது. ஒப்பீட்டளவில் 6.09% என்ற கவர்ச்சிகரமான ROE ஐ வங்கி பராமரிக்கிறது, இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.50% அதிகரித்துள்ளதுடன், மேலும் வங்கியின் சொத்துக்களின் வருமான விகிதம் (ROA) 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 1.15% அளவைக் காட்டுகிறது.



தேசத்திற்கான பங்களிப்பு

இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட தேவையான திரவத்தன்மை மற்றும் மூலதன போதுமை விகிதங்களை பராமரிக்கின்ற அதேவேளையில் வரி மற்றும் தீர்வைகள் தவிர, கருவூலத்திற்கு விசேட கட்டணம், பங்கிலாபங்களை வழங்குவதுடன தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்குவதன் ஊடாக சிறப்பு கட்டணத்தின் மூலம் தேசத்தின் வளர்ச்சிக்கு தேசத்தின் மிகப் பழைமை வாய்ந்த வங்கியாக தனது பங்களிப்பைத் தொடர்கிறது.

வங்கி ரூ.305.81 மில்லியனை பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி போன்ற வரிகளினூடாக அரசாங்கத்திற்கு 2020ஆம் ஆண்டில் ரூ.305.81 மில்லியனை செலுத்தியுள்ளது.

	ரூ.(மில்)
பெறுமதி சேர் வரி	184.65
வருமான வரி	121.16
மொத்தம்	305.81

நிதிநிலைமை பகுப்பாய்வு

சொத்துக்கள்

மொத்தமாக விவரிக்கப்பட்ட அடிப்படைச் சொத்துக்கள் ரூபாய் 52,801,920,648 ஆகும். இது 2019 உடன் ஒப்பிடும்போது 3.64% வீதம் அதிகமாகும். சொத்து வளர்ச்சியிலும், முக்கிய வணிக நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் வலிமையிலும், வட்டி சம்பாதிக்கும் கடன் இலாகா மற்றும் நிதி முதலீடுகள் மொத்த சொத்து தளத்தை கணக்கிடுதலிலும் இலக்கை தொடர்ந்ததால் எங்கள் இருப்புநிலைக்குறிப்பு பலத்தை நாங்கள் பராமரித்துள்ளோம்.

கடன்களும் முற்பணங்களும்

விவரிக்கப்பட்ட அடிப்படையில் தேறிய கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் ரூபா 36,856.88 மில்லியனாக அதிகரித்துள்ளது, இது முந்தைய ஆண்டு 2019 உடன் ஒப்பிடும்போது 3.64% வீத மாற்றமாகும், வீட்டுக் கடன்கள், தனிநபர் கடன்கள் மற்றும் மறுநிதியளிப்பு கடன்கள் மற்றும் பிற கடன்கள் போன்ற சில்லறை கடன் வரிசையில் அதிகரித்த கடன் தேவையால் இது முற்றிலும் ஆதரிக்கப்படுகிறது. வேளாண்மை, சுற்றுலா, SME மற்றும் நுன் நிதி மற்றும் வீட்டு நிதித் துறைகளை மையமாகக் கொண்ட பல தொழில் துறைகளில் கடன்கள் மற்றும் பெறத்தக்க இலாகா பன்முகப்படுத்தப்பட்டது

நிதி மீளாய்வு தொடர்ச்சி

மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்

	2020	2019	மாற்றம்
	ரூபா	ரூபா	%
பண்டங்களின் வகை			
ஈடு வைத்தல்	9,942,813,267	9,460,622,900	5.10%
EPF	7,685,291,335	8,282,816,696	-7.21%
வாகனம்	485,400	5,799,377	-91.63%
ஊழியர் கடன்கள்	1,367,929,889	1,234,564,642	10.80%
தனிப்பட்ட கடன்கள்	18,232,060,924	16,648,653,558	9.51%
ஏனையவை	1,136,699,561	1,096,396,335	3.68%
மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்	38,365,280,376	36,728,853,508	4.46%

பொறுப்புகள்


2020 ஆம் ஆண்டில் மொத்த கடன்கள் ரூபா 46,782 மில்லியன் ஆகவும், 2019 இல் ரூபா 41,321 மில்லியனாகவும் பதிவுசெய்யப்பட்டது. இது முந்தைய ஆண்டு 2019 உடன் ஒப்பிடும்போது 13.22% அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கு வாடிக்கையாளர் வைப்புத்தொகை ரூபா 45,388 மில்லியனாக அதிகரித்தமை காரணமாகியதுடன், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 16.76% அதிகரிப்பை பிரதிபலிக்கிறது, ஏனெனில் நாங்கள் புதிய வாடிக்கையாளர் கட்டளைகளை வென்றோம் மற்றும் கடன் பிணையங்கள் பூஜ்ஜியமாக இருந்த வேளையில், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுடன் நிறுவன வைப்பு மீதி அதிகரிக்கப்பட்டது.

வைப்புத் தளம்

முக்கிய சந்தையில் அதிக போட்டி மற்றும் ஏற்ற இறக்கமான பொருளாதாரம் (கோவிட்-19 நோய்ப்பரவல்) சேமிப்பு வைப்பு, நிலையான வைப்பு மற்றும் பிற வைப்பு (திட்டங்கள்) ஆகியவற்றில் அங்கு வங்கியின் மொத்த வைப்புத் தளம் ரூபாய் 45,388 மில்லியன் வரை அதிகரித்துள்ளது, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க 16.76% அதிகரிப்பை எட்டியுள்ளது, வாடிக்கையாளர் வைப்புத் தக்கவைப்பு மற்றும் புதிய வாடிக்கையாளர் கையகப்படுத்துதல்களைப் பிரதிபலிக்கும் பயனுள்ள நிர்வாகக் கொள்கைகள் மூலம் எடுக்கப்பட்ட விவேகமான மேலாண்மை நடைமுறைகளை இது பிரதிபலிக்கிறது.

திரவத்தன்மை பாதுகாப்பு

Basel III ற்கு இணங்க, 30 நாட்காட்டி-நாள் திரவத்தன்மை அழுத்த சூழ்நிலையில் ஒரு வங்கியின் திரவத் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான கணக்கிடப்படாத உயர்தர திரவ சொத்துக்கள் இருப்பதை திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் உறுதி செய்கிறது. HQLA ஆனது பணம் அல்லது சொத்துக்களை உள்ளடக்கியது, அவை சிறிதளவு அல்லது பெறுமதி இழப்பில் பணமாக மாற்றப்படலாம், வங்கிகளின் திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் 2020 ஆம் ஆண்டின் முடிவில் 116% ஆக இருந்தது, இது சட்டரீதியாக குறைந்தபட்சம் 100% ஐ விட அதிகமாகும். CBSL மற்றும் தேறிய நிலையான நிதி விகிதம் (NSFR) பரிந்துரைத்த வரையறைகளின் படி நிலையான நிதியுதவியை வங்கி வலுவாக ஆதரித்தது, குறைந்தபட்ச தேவை 100% ற்கு எதிராக 31 டிசம்பர் 2019 நிலவரப்படி 138% ஆக இருந்தது.





நிலைத்திருப்பு

தலைவரின் செய்தி	11
பொது முகாமையாளரின் மீள்பார்வை	13
பணிப்பாளர் சபை	16
கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம்	19
கூட்டிணைந்த ஆளுமை	21



“இந்த நிதி ஆண்டில் சாதகமான செயலாற்றுகையினை அரச ஈட்டு முதலீட்டு வங்கி இனங்கண்டுள்ளது. வரிக்கு முன்னரான இலாபம் (PBT) மூலம் முந்தைய ஆண்டு பெற்ற 499.65 மில்லியன் ரூபாவினை விட இந்த ஆண்டு 572.07 மில்லியன் ரூபாவினை பெற்றதுடன் 14.49% ஆல் இலாபத்தினை அடைந்துள்ளது. எங்களுடைய மொத்த சொத்துத் தளம் 12.39% வீதத்தினால் அதிகரித்து ரூபா 52.80 பில்லியனாகியது.”

தலைவரின் செய்தி

நான் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2020 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் பணிப்பாளர் சபையின் சார்பாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைவதுடன் இந்த ஆண்டு வங்கியானது நாடளாவிய ரீதியிலான கோவிட் 19 தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சூழலில் இயங்கிய போதும் சார்பான முன்னேற்றகரமானதும் முழுமையுமானதுமான செயற்பாடுடன் நிறைவு செய்துள்ளது என்று அறிவிப்பதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொருளாதாரம்

உலக பொருளாதாரத்திலும் நிதிச் சந்தைகளிலும் கோவிட் 19 தொற்றின் எதிர் அலை ஏற்படுத்திய எதிர்பாராத நிச்சயமற்ற தன்மையினால் உலகளாவிய இயக்கத்தில் பின்னடைவினை ஏற்படுத்தியதுடன் உலக மட்டத்திலான வெளியீடு 3.5% ஆக குறைவடைந்ததுடன் இதன் காரணமாக உள்நாட்டு பொருளாதாரம் பாதிப்படைந்தது. இதன் விளைவாக தேறிய உள்நாட்டு உற்பத்தி (GDP) 1.3% ஆக குறைந்ததுடன் கடன் வளர்ச்சி 3.4% ஆக குறைந்தது. இவ்வருடத்தில் கோவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட பேரண்ட பொருளாதார நிச்சயமற்ற தன்மையால் தோன்றிய குழப்ப நிலை உள்நாட்டு நிதித்துறையினை பாதித்தது. பொருளாதாரத்தினை ஒழுங்கமைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு துண்டுகோள்களையும் உதவி நடவடிக்கைகளையும் சார்பான நிதிக் கொள்கைகளையும் அறிமுகப்படுத்தியதுடன் பொருளாதாரத்தினை ஊக்குவிக்கும் முகமாக கொள்கை வீதங்களை குறைத்தனால், குறைந்த வட்டி வீதம் கடன் நிவாரண நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள், தொழில்கள் ஆகியவற்றுக்கான சலுகைக் கடன் திட்டங்கள் என்பனவற்றால் தொழில் வளர்ச்சி பெற தொடங்கியது.

பொருளாதார மீள் எழுச்சிக்கான பங்களிப்பினை அரச ஈட்டு முதலீட்டு வங்கி உடனடியாக அடையாளம் கண்டதுடன் பாதிக்கப்பட்ட தொழில்கள், தனிநபர்களின் கொடுப்பனவுகளை தள்ளி வைத்தல், "சௌபாக்யா" இன் சலுகை கடன் திட்டங்கள் இயங்காத நிலையில் உள்ள தொழில்கள் மீதான வழக்குகளை கைவிடுதல், மீள் கையகப்படுத்தலை கைவிடுதல் போன்ற அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆதரவு அளித்தோம்.

வங்கியின் செயலாற்றுகை

இந்த நிதி ஆண்டில் சாதகமான செயலாற்றுகையினை அரச ஈட்டு முதலீட்டு வங்கி இனங்கண்டுள்ளது. வரிக்கு முன்னரான இலாபம் (PBT) மூலம் முந்தைய ஆண்டு பெற்ற 499.65 மில்லியன் ரூபாவினை விட இந்த ஆண்டு 572.07 மில்லியன் ரூபாவினை பெற்றதுடன் 14.49% ஆல் இலாபத்தினை அடைந்துள்ளது. எங்களுடைய மொத்த சொத்துத் தளம் 12.39% வீதத்தினால் அதிகரித்து ரூபா 52.80 பில்லியனாகியது. இது 12.39% வளர்ச்சி ஆகும். முந்தைய ஆண்டில் கடைபிடிக்கப்பட்ட கடன் பொறிமுறை கண்காணிப்பு முறைமை, திரவச் சொத்துக்களின் தரம் ஆகிய மூலோபாய முயற்சிகளில் வங்கி இந்த ஆண்டிலும் ஈடுபட்டது. சேமிப்பு கணக்குகள், நிலையான வைப்புகள் போன்றவற்றில் இருந்து 16.76% வைப்பு வளர்ச்சி உருவாகியது. அவை அரச வங்கி என்ற பெயரின் பலம் மற்றும் வைப்பீட்டாளரின் நம்பிக்கை என்பனவற்றால் உருவாகியது. மொத்த NLP விகிதமானது ஊழியர் சேம இலாப நதி தவிர்ந்த நிலையில் முந்தைய ஆண்டில் 7.73% ஆக இருந்தது 2020.12.31 இல் 10.72% ஆன வளர்ச்சியினை எடுத்து காட்டியது.

அரசாங்க கொள்கைகளுடன் ஒன்றிணைந்ததுடன் இலாபத் தொகையினை அதிகரிப்பதற்கு நாங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமான விசேட வங்கிப்பெயரினை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தினோம். நாங்கள் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சட்டத்துக்கு அமைய அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பன்முகப்படுத்துவதற்கான சாத்தியமான நிலைமைகளில் ஈடுபட்டோம். வீடமைப்பு, விவசாயம் ஆகியவற்றுக்கு நிதி வழங்குவது போன்ற மிக குறுகிய பிரிவுகளில் வங்கி ஈடுபட்டிருப்பதால் தொழில் கடன் பிரிவில் வாடிக்கையாளர்களின் அடித்தளத்தினை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தோம் அத்துடன் சந்தைகளில் விற்பனை செய்வதற்கான விவசாய, கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது தயார் செய்தல் போன்ற இதுவரை நாம் ஈடுபடாத பகுதிகளில் விஸ்தரிக்க முடியுமா எனவும் நாம் ஆராய்ந்தோம். நாங்கள் நகர, கிராம புறங்களில் காணப்படும் பல்வேறு விதமான வருமானம் உடைய பிரிவுகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு நிதி வழங்குவதன் மூலம் சமநிலையில் உள்ள உற்பத்தி முறைமையினை வங்கிக்கு உருவாக்குவதுடன் வருடத்திற்கு குறைந்தது ஒரு உற்பத்தி பொருளையாவது விருத்தி செய்யும் முகமாக நிதி வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கூட்டிணைந்த ஆளுகை

வங்கியின் நீண்ட கால வெற்றியினை உறுதி செய்வதற்கு கூட்டிணைந்த ஆளுமை சிறப்பு நிலையை ஈடுபாட்டுடன் நிலை நிறுத்தவும் கூட்டிணைந்த ஆளுமை மிக உயர்ந்த தாக்கத்தினை வைத்திருக்கவும் உறுதி கொண்டுள்ளோம். நமது பணிப்பாளர் சபையும் சபைக்கணக்காய்வுக் குழுவும் ஒன்றிணைந்து எதிர்ப்பு முகாமைத்துவ சபைக்கான குழு மனித வள சபைக்கான குழு ஆகிய மூன்று குழுக்களும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் சிறந்த நிறுவன ஆட்சி முறைக்கான அடிப்படையினை அமைக்கின்றன. வங்கியின் முறையான சட்டங்கள், விதி முறைகள், ஆட்சி சபைகள், வங்கியின் உள்ளக கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் நல்ல முகாமைத்துவத்தினை நடாத்துவதற்கு உதவுகின்றன.

சவால்கள்

வங்கியின் மட்டுப்படுத்தப்பட்ட கிளை வலை அமைப்பு வாடிக்கையாளர்களுக்கு ஒப்பீட்டு அளவில் பாதகமாக அமைகின்றது.

வங்கியின் சொத்து, பொறுப்புக்கூறல் முதிர்ச்சியானது (ALM) தொடர்ந்து எதிர்மறையான பொறுத்தமின்மையினை ஓராண்டிற்குள் காட்டுகின்றது. ஏனெனில் நீண்ட காலக் கடன் வழங்கும் சொத்துக்களை விட ஒப்பீட்டு அளவில் பெரும்பான்மையாக குறுகிய கால கடன் பெறும் முறையினை காட்டுகின்றது. ஏனெனில் அடிப்படையில் வங்கியின் மட்டுப்படுத்தப்பட்ட கொள்வனவு உரிமையினை மட்டுப்படுத்தப்படுகின்றது. மேலும் இந்த வங்கி பெருமளவு போட்டியால் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பக் கடன் பொருட்கள், முன்னேற்றமான தொழில்நுட்பம், கோவிட் 19 என்பனவற்றால் உருவாகிய வாடிக்கையாளர்களை மையப்படுத்திய உற்பத்தி பொருட்களை உருவாக்குதலை மேம்படுத்தியது. இது முக்கியமாக அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மீது பெருந்தாக்கத்தினனை ஏற்படுத்தியது.

தலைவரின் செய்தி தொடர்ச்சி

முன்னோக்கிய பாதை

முன்னோக்கி செல்கையில் வாடிக்கையாளருக்கு பயன்தரும் முறையில் மதிப்பீட்டை வழங்குவதில் இந்த வங்கிக்கு உள்ள ஈடுபாடு, நிலை நிற்கும் திறன், விரிவாக்கம், தொழில் நுட்பத்தினை கையாளுதல் போன்றவற்றால் நிலையான முன்னேற்றத்தினை அடைவோம் என்ற தன்னம்பிக்கை ஏற்படுகின்றது. நமது முறைகளையும் நடைமுறைகளையும் தொழிநுட்ப மயப்படுத்துதல் மூலம் தொழிலில் புதிதாக தோன்றும் போக்குகளை எதிர் நோக்குவதற்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கியினை தயார் செய்து அபிவிருத்திக்கான சரியான தளத்தினை உருவாக்க முயல்வதுடன் கடன் வழங்கும் முறையினை பன்முகப்படுத்துதலில் கவனம் செலுத்துகின்றோம். இதன் பயனாக வங்கியின் சந்தைப்பங்கை அதிகரித்தலும் அதன் மூலம் சொத்துக்களின் வருமானத்தை அதிகரித்தலும் (ROA) வங்கிப் பங்குகளின் பெறுமானம் (ROE) மூலம் வர்த்தக சராசரியுடன் சமநிலையில் பேண முடியும்.

மேலும் குறுகிய கால தொகையான வைப்புகளுக்கு கவனம் செலுத்தல், முதிர்ச்சி பொருந்தாமை என்பனவற்றினைக் குறைப்பதற்கு நீண்ட கால நிதிகளை தேடிக் கொண்டிருக்கின்றோம். 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடியும் முன் மிகக் குறைந்த தொகையான ரூபா 7.5 பில்லியன்களை விதிமுறையான முதலீட்டினை நிறைவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இயங்கா நிலைக் கடன் வீதமாக குறைப்பதில் (ஊழியர் சேம இலாப நிதி தவிர்ந்த) 2021 இல் நாங்கள் கவனம் செலுத்துவோம் என்பதுடன் தொழில் சராசரியினை சமனாக பராமரிப்பதுடன் வரவு செலவு விகிதத்தை 2021 இல் 51% இருந்து 50% ஆக குறைப்பதுடன் தொடர்ந்த வருடங்களில் மூன்று வீதமாக குறைப்பதுடன் தொடர்ந்து வரும் வருடங்களிலும் குறைக்கவுள்ளோம்.

நன்றி கூறல்

இச்சந்தர்ப்பத்தில் சபையின் உறுப்பினர்கள் வழங்கிய ஆதரவு அறிவுரை என்பவற்றிற்காக நன்றி கூறுவதற்கு கடமைப் பட்டுள்ளேன். அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பொது நோக்கினை நடைமுறைப்படுத்த அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பொது முகாமையாளர் சிரேஷ்ட முகாமைத்துவ சபையின் பணியாளர்கள் சகலரும் சோர்வடையாது உழைத்தனர். இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி கோத்தபாய இராஜபக்ஷ, மாண்புமிகு பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான மகிந்த இராஜபக்ஷ, நிதி முதலீட்டுகள் மற்றும் அரச தொழில் சீர்திருத்த இராஜாங்க அமைச்சர், திறை சேரிச் செயலாளர் மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் சட்டமா அதிபர் திணைக்களம், கணக்காய்வு திணைக்களம் சட்ட ரீதியான சபைகளின் தலைவர்கள் ஆகிய சகலருக்கும் அவர்கள் இந்த நிதி ஆண்டு முழுவதும் வழங்கிய வழிகாட்டல், ஆதரவுக்கு எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



கலாநிதி உதயசிறி காரயவசம்
தலைவர்

பொது முகாமையாளரின் மீள்பார்வை

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினை உங்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். வலிமையான பிரதான செயற்பாடுகள் தொழில் திறன் ஆகியவற்றின் உதவியால் வியக்கத்தக்க செயற்பாடுகள் அடையப்பட்டன என்பதனை அறியத்தருகின்றேன். நாம் செயல்படும் சூழலில் முன் எப்போதும் எதிர் நோக்காத இடர்பாடுகள் உள்ள இந்த காலகட்டத்தில் நமது சிறந்த சேவைக்கான ஈடுபாடு, வலுவான குழு செயற்பாடு என்பவற்றால் தாங்குதிறன் தன்னம்பிக்கை என்பனவற்றுடன் நெருக்கடிக்கு எதிரான நிலையில் இருந்து நமது சகல பங்குதாரர்களுக்கும் மதிப்பினை உருவாக்கி செயற்படுத்தினோம்.

பேரண்ட பொருளியல் அபிவிருத்திகள்

நாம் மீள்பார்வையிடும் ஆண்டானது வரலாற்றிலேயே மிகவும் கடினமானதாக இருந்தது. ஏனெனில் கோவிட் 19 தொற்றாலும் பயணத்தடைகளாலும் முழு உலகமே இயங்கா நிலையினை அடைந்துள்ளது. இதன் விளைவாக உலகளாவிய பொருளாதாரம் 3.5% ஆக சுருங்கியதுடன் அதன் தாக்கம் உலகம் முழுவதும் உள்ள நாடுகளை பாதித்தது. உள்நாட்டு பொருளாதாரம் 3.6% ஆக குறைந்ததுடன் கட்டிட நிர்மாணம், புடவை, ஆடைத் தொழில், சுற்றுலா, தங்குமிட வசதி உணவு குடிவகைகள், போக்குவரத்து சேவை ஆகிய தொழில் துறைகள் இக்காலப்பகுதியில் வளர்ச்சிப் போக்கில் கீழ் நிலை அடைந்தன. கோவிட் 19 தொற்றினால் மார்ச் மாதம் நடுப்பகுதி முதல் மே மாதம் நடுப்புகுதி வரை விதிக்கப்பட்டிருந்த பயணத்தடைகள் காரணமாக தொழிற்படையின் பங்குபற்றல் விகிதம் (LFPR) குறைந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் மிக அதிகமான வேலை இல்லா பிரச்சனை தோன்றியது. வேலை இல்லாத்திண்டாட்டம், வருமானம் இன்மை என்பனவற்றின் காரணமாக தனியார் நுகர்வைக் குறைத்ததுடன் பொருளாதார நிச்சயமற்ற தன்மை என்பவை முதலீடுகளைத் தடை செய்தன. குறைக்கப்பட்ட கேள்வி நிலைகள் நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பணவீக்க நிலை, அடிக்கடி ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை இருந்த போதும் 2020 ஆம் ஆண்டில் 4-6% ஆக நிலை நிறுத்த முடிந்தது.

கோவிட் 19 இன் முதலாவது அலையினை வெற்றிகரமான கட்டுப்பாடுகள் மூலம் கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்களின் பயனாக மூன்றாவது காலாண்டில் உள்நாட்டு பொருளாதாரம் மீட்சி பெற தொடங்கியதுடன் அதே வேகத்தில் பொருளாதாரம் நான்காவது காலாண்டில் கோவிட் தொற்றின் இரண்டாவது அலை தாக்கிய போதும் விரிவாக திறந்தே இருந்தது. இலங்கை அரசாங்கமும் மத்திய வங்கியும் நிலைமையினை கட்டுப்படுத்த முன்மாதிரியான நிவாரண நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியும் பெருமளவு கொள்கைத் துண்டுகோள்களை ஏற்படுத்தியதாலும் கோவிட் 19 ஆல் மோசமாக கடுமையாக பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் தொழில்கள் என்பனவற்றுக்கு நன் முறையில் உதவ முடிந்தது. கோவிட் 19 தொற்றின் காரணமாக பொருளாதாரம் திடீரென மாற்றம் அடையும் நிலை இருந்த போதும் நிதிப்பிரிவின் செயற்பாடு வெளிப்படையாகும் தாங்கி நிற்கும் திறன் உள்ளதாகவும் அமைந்தது. நடைமுறையில் இருந்த சவாலான பொருளாதார சூழலில் இருந்து ஆபத்துக்கள் உருவாகிய போதும் வங்கிப்பிரிவு நியாயமான வளர்ச்சியினை காட்டியது. ஆயினும் கோவிட் 19 இன் காரணமாக வரவு தரக்குறைவும் வெளிநாட்டு செலாவணியின் வருகைக் குறைவும் வங்கிப்பிரிவின் நடவடிக்கைகளுக்கு பெரும் பிரச்சனைகளுக்கு காரணமாக இருந்தது.

இந்த வருடத்தில் சொத்து தளம், கடன் வைப்பீடுகள், இலாபம் என்பவை குறைந்து செல்லல், கோவிட் 19 தொற்றினால் ஏற்பட்ட தடைகளால் செயற்பாடு அற்ற கடன்கள் (NPLS) ஆகியவை அதிகரித்தமை போன்றவற்றால் மக்களின் நம்பிக்கை குறைந்தமை போன்றவை இந்த பிரிவுக்கு பிரச்சனைகளாக அமைந்தன. இந்த எதிர்மறையான பாதிப்புக்களை சமாளிப்பதற்கு மத்திய வங்கி கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கும் பொறுமையான கொள்கை நடைமுறைகளை நடைமுறைபடுத்த மேற்குறித்த நடவடிக்கைகளை எடுத்தது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் செயலாற்றுகை

நிதி, நடைமுறைப்பகுதி ஆகியவற்றில் தளம்பாத நிலையினை பேணிவந்ததுடன் இந்த ஆண்டில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி விசேட செயலாற்றுகையினை காட்டியது. சொத்துக்களின் வருமானம் (ROA) பங்குகளின் வருமானம் (ROE) ஆகியவற்றை முறையாக 1.15%, 6.09% எனும் முறையில் நிலை நிறுத்தினோம். இது ஒப்பீட்டு அளவில் முந்தைய வருடத்தினை விட கூடிய வளர்ச்சியினை காட்டியது. நமது தேறிய நிலையான நிதி வழங்கும் விகிதம் (NSFR) ஆகக் குறைந்த 100%க்கு எதிராக 137% (வருடாந்த சராசரி) நிலை நின்றது. இது நமது நிலையான நிதி வழங்கும் நிலையினை தோற்றத்தினை காட்டியதுடன் பணமாற்று வகித்தினை (LCR) குறைந்த அளவு தேவையான 90% விட 113.8% இல் நிலைநிறுத்தி காட்டியது. இது உயர்தர பணமாற்று வீதத்தில் தளம்பாத சேமிப்பினை காட்டியது.

முந்திய ஆண்டில் 5.9 பில்லியன் ரூபாவாக இருந்த வட்டி வருமானத்தினை 1.59% ஆக அதிகரித்து 6 பில்லியன் ரூபாவினை பெருவதில் வெற்றி பெற்றோம். 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் வட்டிக்கு முந்திய தேறிய இலாபம் 14% வட்டியால் 572 மில்லியன் ரூபாவினை காட்டியது. அதே போன்று கடன்கள் முற்பணங்கள் ஆகியன முற்போக்கான வளர்ச்சியினை காட்டியதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 36.85 பில்லியன் ரூபாவினை காட்டியது. இதன் பயானக வங்கியின் மொத்த சொத்துக்கள் 52.8 பில்லியன் ரூபாவாக உயர்ந்தது இது 12.39% அதிகரிப்பாகும்.

31.12.2020 இல் தேறிய இயங்கா நிலைக்கடன்கள் ஊழியர் சேமஇலாப நிதி தவர்த்து 10.72% காட்டியமையினை தொழிலின் சராசரிக்கு மேலான முந்தைய ஆண்டின் 7.73% எதிராக இயங்கா நிலைக்கடன்கள் மேல் நோக்கி செல்வதனை வங்கி அவதானித்தது.

பொது முகாமையாளரின் மீள்பார்வை தொடர்ச்சி

நமது வாய்ப்புக்களை விரிவு படுத்துவதற்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கி SME க்கும் தொழில்களுக்கும் கடன் திட்டங்களை உள்நாட்டு உற்பத்தி கம்பனிகளுக்கும் நிதி வழங்கும் யோசனையினை ஆராய்ந்தது. மேற்குறித்த பிரிவுகளுக்கு வங்கி கடன் வழங்கியதால் கடந்த ஆண்டினை விட இந்த ஆண்டு 156% அதிகரித்தன. மேலும் கோவிட் 19 தொற்று காலத்தில் மத்திய வங்கிடன் பிரதானமாக பணியாற்றிய வங்கியான இலங்கை வங்கியின் நிதிக்கடன் உதவித் திட்டங்களுக்கு அமைய அரச ஈட்டு முதலீட்டு வங்கி கோவிட் 19 இனால் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தது இக்காலத்தில் எதிர் நோக்கிய சவால்களான தனிப்பட்ட உத்தரவாத கடன்கள் பிரச்சனையான தேறிய NPL விகிதம் குறைவடைதல் மற்றும் சொத்துத் தரம் குறைதல் என்பன ஏற்பட்டன. நாம் கடன் மீளப்பெறுதலை உறுதியாக்கியதுடன் ஆபத்துக்களை முகாமைதுவப்படுத்தும் செயல்பாட்டின் காரணமாக இந்த சவால்களை முறியடித்தோம்.

பிரதான அடைவுகள்

கோவிட் 19 பாதகமான பாதிப்பு இருந்த போதும் நாங்கள் சில முக்கியமான சாதனைகளை பதிவு செய்ய முடிந்தது. பெருமளவு நமது சொத்து தளத்தில் 12.39% அதிகரிப்பும் ஆண்டிற்கான கடன் வழங்குதலில் 12.5 பில்லியன் ரூபா அதிகரிப்பும் இக்காலப்பகுதியில் தொழிலில் மிகக் குறைவான கடன் அதிகரிப்பு காணப்பட்டதும் நிகழ்ந்த முக்கிய சாதனையாகும். வங்கித்தளத்தின் சில்லறை வைப்பு 6.2 பில்லியன் ரூபாவாக உயர்ந்ததுடன் மொத்தமாக வரவு செலவு திட்ட இலக்குகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட 106% சாதனை ஆகும். மேலும் இலங்கை மத்திய வங்கியின் கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் கடன் தள்ளி வைப்பு வழிகாட்டலின் படி நாங்கள் 27865 வாடிக்கையாளர்களுக்கு கடன் தள்ளுபடி சலுகையினை வழங்கினோம்.

எதிர்காலம்

நாங்கள் கோவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட சூழலில் வளர்ச்சியை நிலை நிறுத்ததுவதற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை அறிந்திருந்தோம். சவாலான தொழில் சூழலுக்கு ஏற்ப நிலைமையினை ஏற்றுக் கொள்ளுதல், வங்கியின் நிலையான முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துதல் போன்ற மூலோபாயங்களை தொடர்ந்து மீளாய்வு செய்வதில் நாம் முன்னோக்கிச் செல்வோம்.

நமது சேவை தரங்களை தொடர்ந்து அதிகரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டளவில் நமது முழு கிளை வலைப்பின்னலை புதிய மூலாதார வங்கித் தீர்வு என்ற அமைப்புடன் ஒன்றிணைப்பதில் தொடர்ந்து ஈடுபட்டோம். மேலும் இணைய தளத்தின் அடிப்படையிலான அறிவினை பகிர்ந்து கொள்ளும் முறை என்பதனை விருத்தி செய்தல், இற்றைப்படுத்துதல் என்பனவற்றில் கவனம் செலுத்துதல், தமது அலுவலக கட்டிடத்தினை வேறு இடத்துக்கு மாற்றுதல், வங்கியின் உள்ளக மற்றும் வெளியக தோற்றப்பாட்டினை விருத்தி செய்யும் அதே நேரத்தில் 2022 டிசம்பர் முடியும் முன்னர் குறைந்தளவு விதி முறையிலான 7.5 பில்லியன் ரூபா முதலீட்டினை நிறைவு செய்வதில் கவனம் செலுத்துவோம்.

நன்றிச் செய்தி

தலைவர், பணிப்பாளர் சபை ஆகியோர் வங்கியினை நிலையான வளர்ச்சி நோக்கி இட்டுச் செல்வதில் அளித்த ஆதரவு உள்நோக்கு, சிறந்த வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்காக எனது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நமது சிரேஷ்ட முகாமையாளர்களின் சேவைக்குழு அர்ப்பணிப்புக்கும் ஈடுபாட்டிற்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கை மத்திய வங்கி மற்றும் அது தொடர்பான அமைச்சு, அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முக்கிய பங்குதாரிகள் ஆகியோர் அளித்த ஆதரவு வழிகாட்டல்கள் என்பனவற்றிற்காக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். தங்களுடைய வீடமைப்புக்கான நிதித் தேவைகளுகக்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மீது வைத்திருந்த நம்பிக்கைக்காக விசுவாசம் உள்ள வாடிக்கையாளருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.



திரு. எல். ஐ. ரணசிங்க
பிரதி பொது முகாமையாளர்/CEO



“எங்களால் வெற்றிகரமாக வரலாற்றில் முதல் தடவையாக எங்கள் வட்டி வருமானத்தை ரூபா 6 பில்லியன் எனும் மைல்கல்லைக் கடந்து செல்ல முடிந்தது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வரிக்கு முன்னாரான இலாபம் 14% வீதத்தினால் அதிகரித்து ரூபா 572 மில்லியனைப் பிரதிபலித்தது.”

பணிப்பாளர் சபை



1



2



3

01. கலாநிதி. கே. டபிள்யூ. ஏ. யு. காரியவசம்

தலைவர்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தலைவராக 2020 ஜனவரி 13 ஆம் திகதி நியமிக்கப்பட்ட கலாநிதி உதயசிறி காரியவசம் அவர்கள் இற்றை வரை பணி புரிகின்றார்.

கலாநிதி காரியவசம் அவர்கள் வணிக முகாமைத்துவ கலாநிதிப் பட்டத்தினை ஆஸ்திரேலியாவின் நியூ காசல் பல்கலைக்கழகத்திலும் மெல்போணில் அமைந்துள்ள RMIT பல்கலைக்கழகத்தில் வணிக கணக்கியல் முதுமாணிப் பட்டத்தினையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்தவ விஞ்ஞான இளமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

கலாநிதி காரியவசம் அவர்கள் ஆஸ்திரேலியாவின் சி பி ஏ (CPA) இல் உறுப்பினர் என்பதுடன் அமெரிக்காவின் சான்றளிக்கப்பட்ட மோசடி ஆய்வாளர்களின் சங்கத்திலும் உறுப்பினர் ஆவார். அவர் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CFE) ஓர் உறுப்பினர் ஆவார் என்பதுடன் இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட கம்பனிச் செயலாளர் ஆவார். கலாநிதி காரியவசம் அவர்கள் இலங்கையின் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் (SAT) மூத்த உறுப்பினர் என்பதுடன் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினதும் (FCA) ஓர் உறுப்பினர் ஆவார்.

கலாநிதி காரியவசம் அவர்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB), தொழில் அபிவிருத்தி சபை, இலங்கை பாதுகாப்பு பத்திரங்கள் மற்றும் நாணயமாற்று ஆணைக்குழு, இலங்கை காப்புறுதிச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை வங்கி, இலங்கை மேர்சன்ற் வங்கி, இலங்கை மேர்சன்ற் கிரடிட் இலங்கை வங்கியின் போக்குவரத்து தனியார் நிறுவனம், 1963 வரையறுக்கப்பட்ட கொழும்பு ஹோட்டல் நிறுவனம், சேலீஸ் வரையறுக்கப்பட்ட நிறுவனம், சொத்து அபிவிருத்தி நிருவாக தனியார் நிறுவனம் ஆகியற்றின் தலைவராகப் பணிபுரிந்துள்ளார். அவர் அரச தோட்ட கூட்டுத்தாபனத்தின் பதில் தலைவராகவும் லங்கா வைத்தியசாலை கூட்டுத்தாபனத்தின் பிரதித் தலைவராகவும் செயலாற்றியுள்ளார். இவர் தரநிர்ணய அங்கீகார நிலையியல் குழுவின் (SCAQA) உறுப்பினராவதுடன் உயர்கல்வி மற்றும் பொருளாதார கொள்கை அமைச்சின் பொருளாதார வளர்ச்சிக்கான தேசியக்குழுவின் (NCED) உறுப்பினரும் ஆவார்.

02. திரு. எஸ். கே. ஏ. கலப்பதி

சுயாதீன நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்

திரு. சமன் கலப்பதி காலி மகிந்த கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியை பூர்த்தி செய்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு விசேட தரத்தில் பட்டதாரி ஆனார். 1964 ஆம் ஆண்டில் வழக்கறிஞராக பதிவுசெய்து கொண்டார். ஜனாதிபதி

பணிப்பாளர் சபை தொடர்ச்சி



4



5

சட்டத்தரணியும் முன்னால் சட்டமா அதிபராகவும் இலங்கை உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும் கடமையாற்றிய திரு மொஹான் பீரிஸ் அவர்களின் கீழ் தனது சட்டத்தொழிலை ஆரம்பித்தார். பல ஆண்டுகள் தனிப்பட்ட வழக்கறிஞராக இயங்கிய பின்னர் மெர்கன்றைல் முதலீட்டு பி எல் சி இல் இணைந்து கொண்டதுடன் சட்டப் பணிப்பாளராகவும் இயங்கினார். நிதி அமைப்புக்களின் சங்கத்தின் தலைவராக 2007 ஆம் ஆண்டில் இருந்து இரண்டு வருடங்கள் கடமையாற்றியுள்ளார். 2010 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளராக இவர் கடமையாற்றினார் என்பதுடன் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையில் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார். அவர் வணிகச்சட்டம், கம்பனிச்சட்டம், மாவட்ட நீதிமன்ற இணைப்பாளர், வணிக உயர் நீதி மன்றம் இசிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றிலும் கடமையாற்றியதுடன் சட்ட மனுக்கள், நிருவாகச் சட்டம், மேல்முறையீட்டு நீதிமன்ற அடிப்படை உரிமைகள், உச்ச நீதி மன்றம் ஆகியவற்றில் வினைத்திறனுடன் 25 வருட காலம் சேவை புரிந்துள்ளார்.

திரு. சமன் கலப்பதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்களின் ஒருவராகவும் கொழும்பு சட்ட மன்றத்தின் உறுப்பினராகவும் உள்ளதுடன் தொழில் வாண்மையாளர் சங்கத்தின் சிறந்த ஓர் உறுப்பினராகவும் கடமை யாற்றியுள்ளார்.

03. திருமதி. டபிள்யூ. சி. என். கூரே
சுயாதீன நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்

திருமதி சமிளா கூரே தொழில் ரீதியாக ஓர் பட்டய கணக்காளர் ஆவார். அவர் 2020 ஜனவரி 02 ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இற்றைவரை கடமை புரிகின்றார்.

திருமதி சமிளா கூரே இலங்கை பட்டய கணக்காளர் சங்கத்தின் ஆட்சி சபையில் உறுப்பினராக கடந்த 60 ஆண்டு கால பட்டைய கணக்காளர் வரலாற்றில் பெறுநிறுவனத்துறையில் இருந்து (தொழிலில் ஈடுபடாத) தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண்மணி ஆவார். இவர் அண்மையில் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் ஆட்சி சபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் உயர் தொழில் நுட்பக்கல்வி, உயர் கல்வி தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு ஆகியவற்றின் உறுப்பினராக இயங்குகின்றார். 2021 ஆம் ஆண்டில் அவர் இரண்டாவது முறையாக இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) தேச வலையமைப்புக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிக நிருவாகத்தின் முதுமாணிக் கற்கை நெறியின் பழைய மாணவர் சங்கத்தின் உதவிப் பொருளாளராகவும் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் கணக்கியல் சங்கத்தின் பழைய மாணவர் சங்க நிறைவேற்று உறுப்பினராவும் இயங்குகின்றார். பெண்கள் தொழில் பெறுதல் தொடர்பாக அவர் அர்ப்பணிப்புடன் இயங்குதல்

பணிப்பாளர் சபை தொடர்ச்சி

சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்களின் (CMA) தலைமைத்துவ முன்னெடுப்புக்கள் ஆகியவற்றுக்கு தலைமை தாங்குவதற்கும் SAFA பெண்கள் குழுவில் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு ஏற்றதாக பட்டய கணக்காளர் (CA) பெண்களின் தொழில் பெறுதல், தலைமைத்துவ விருத்தி என்பனவற்றின் உறுப்பினராக நியமனம் பெறவும் வைத்தது.

திருமதி சமிளா கூரே தற்போது WNS குளோபல் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தில் பொது முகாமையாளராகக் கடமை புரிகிறார்.

கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான திருமதி சமிளா கூரே அவரது தொழிலை KPMG இல் ஆரம்பித்ததுடன் பல்வேறுபட்ட தொழில் துறைகளில் 20 வருடத்திற்கு மேலாக F&A இல் பல்வேறுவிதமான உயர் பதவிகளை வகித்துள்ளார். அவர் 2009 -2010 காலப்பகுதியில் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப பணிப்பாளராக கடமையாற்றியதுடன் சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகளை (IFRS) ஒன்றிணைக்கும் செயற்பாட்டினை முன்னின்று நடத்தினார். இந்த காலப்பகுதியில் இலங்கையின் முதலாவது பட்டயக்கணக்காளர் ஆனார். அத்துடன் ஆஸ்திரேலிய உதவித்திட்டத்தின் கீழ் முழுமையான கல்வி ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஈடுபட முடிந்தது.

திருமதி சமிளா கூரே இலங்கையின் பட்டயக்கணக்காளர்களின் (FCA) ஒருவராகவும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கணக்கியலாளர்களின் நிருவாக உறுப்பினராகவும் (CGMA-UK) ஆஸ்ரேலியாவின் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்ளின் (CPA-Ausraliya) முழுமையான உறுப்பினராகவும் இலங்கையில் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (FCMA) உறுப்பினராகவும் சான்றளிக்ப்பட்ட முகாமைத்துவ கணக்கீட்டு நிறுவனத்தின் முழு நேர அங்கத்தவராகவும் (FCMA) இலங்கை கணக்கீட்டு தொழில் நுட்ப வியலாளர் கழகத்தின் உறுப்பினராகவும் விளங்குகின்றார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணி (கணக்கியல்) விசேடபட்டத்தினைப் பெற்றுள்ளார். தற்போது இலங்கை பல்கலைக்கழகத்தில் வணிக நிருவாக முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

04. திரு. எச்.சி.டி.எல் சில்வா
நிர்வாக கடமையற்ற சுயாதீனப் பணிப்பாளர்

தற்போது நிதி அமைச்சின் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக கடமைபுரியும் எச். சி.டி.எல் சில்வா அவர்கள் 2020 ஜனவரி 11 ஆம் திகதியன்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்களின் சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இற்றை வரை கடமையாற்றுகின்றார்.

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் இருந்து செயல்திட்ட நிருவாகத்தில் பொது நிருவாகம் தொடர்பான முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அரச பொது நிருவாக விசேட விஞ்ஞான இளங் கலைமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளதுடன் லண்டன் பொது நிதி கணக்கியல் பட்டய நிறுவனத்தின் அங்கத்துவராக இருப்பதுடன் இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் மூலம் நடைபெற்ற பட்டய தொழில் வாண்மை பகுதி 1 (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் தகுதி பெற்றதுடன் 1992 முதல் இலங்கை கணக்காளர் சேவையில் கணக்காளராக 28 வருடங்களுக்கு மேலான அனுபவம் உடையவர் ஆவார். பொது நிதி முகாமைத்துவம் பொது கடன் முகாமைத்துவ கணக்காய்வு, கணக்கீட்டு மற்றும் பொதுப் பெறுகை முகாமைத்துவம் ஆகிய பல்வேறு துறைகளில் மூலோபாய அதிகாரியாகவும் இருந்துள்ளார்.

05. திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர். சேனக பண்டார
பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் குழுவின் பணிப்பாளராக 2020 ஜனவரி 02ஆம் திகதி நியமிக்கப்பட்ட திருஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.சேனக பண்டார அவர்கள் இற்றை வரை பணி புரிகின்றார்.

தொழில் ரீதியாக திரு சேனக பண்டார ஒரு வழக்கறிஞர் ஆவார். அவர் வழக்கறிஞர் இறுதிப்பரீட்சையில் இரண்டாம் தர விசேட பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன் டிசம்பர் 2010 இல் தொழில் புரியத் தொடங்கியுள்ளார். இவர் சிவில் மற்றும் குற்றவியல் துறைகளில் சிறந்த அனுபவத்தினைப் பெற்றுள்ளார். மேலும் இவர் தனியார் சங்கங்களின் சார்பாக முறையான நீதிமன்றங்கள் மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் ஆகியவற்றில் வாதாடியுள்ளார்.

இவர் இலங்கை வங்கி, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆகிய அரச நிறுவனங்களின் சார்பாக நீதி மன்றங்களில் கடமையாற்றியுள்ளார்.

நீதித் துறையில் கடமையாற்றுவதற்கு முன்னர் சான்றளிக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பராமரிப்பு திணைக்களத்தில் அதிபராக கடமையாற்றியுள்ளதுடன் குற்றவியல் துறையில் இரண்டாம் தரத்திலான விசேட பட்டம் பெற்றுள்ளார். அவர் மின்னணு ஊடகத்தில் பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார். திரு சேனக பணடார இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் (OUSL) சட்டத்துறையில் முதுமாணிப் பட்டத்திற்கான கற்கை நெறியில் ஈடுபட்டுள்ளார்.

கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம்



01



02



03



04



05



06



07



08



09



10



11

01 **திரு. எல். ஐ. ரணசிங்க**
பிரதி பொது முகாமையாளர் (கடன்)
MBA (Fin), B. Sc. Mkt. Mgt, AIB, ACIM

02 **திரு. டீ. எம். ஜே. விக்ரமசேகர**
உதவிப் பொது முகாமையாளர் (கடன் - EPF/Estate/SME & Micro)
B. Com (Special), PGD in BF

03 **திரு. கே. எல். என். ஏ. பெரேரா**
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)
MBA (Fin), FCA, B. Com. (Sp), SAT, HNDA, Dip. in RM

04 **திருமதி. நிஷானி. கே. லொக்குகே**
உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்/ பணிப்பாளர்கள் சபை செயலாளர்)
LLB, Attorney-at-Law, Notary Public and Commissioner for Oaths, Company Secretary

05 **திரு. பீ. எம். டி. பிரியங்க பி பஸ்நாயக்க**
உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)
MSc (Mgt & IT), B. Sc. (MIS), MBCS UK

06 **திரு. கே. கே. கபில கீரவெல**
உதவிப் பொது முகாமையாளர் (மீட்பு)
B.Com (Sp) Hons (USJ), PG.EX.Dip. in Bank Mgt (IBSL)

07 **திருமதி. அஷ்மி. எஸ். கே. அமரசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஏற்பாட்டியல்)
MBA, PQHRM, Dip in Psychology, AMCIPM

08 **திருமதி. என். ஏ. ர. நிரோஷனி த சில்வா**
பிரதான உள்ளக கணக்காய்வாளர்
FCA, B. Sc. (Acc) Sp. (Hons.)

கூட்டிணைந்த மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சி



12



13



14



15



16



17



18

09 **திரு. எல். டபில்யூ. சமரவிக்ரம**
பதில். உதவிப் பொது முகாமையாளர் (கடன்/பிரதான முகாமையாளர் (கடன்)
B. Sc. (Sp) Estate Management & Valuation, AIV, ACBF - (IBSL)

10 **திரு. டி. எம். ஆர். திசாநாயக்க**
பிரதான முகாமையாளர் (Estate/EPF/SME மற்றும் நுண்கடன்)
MA, B. Sc. -EMV (Sp) Hons, DBF, Dip in MC, Dip in CE, AIV, AIB

11 **திரு. எஸ். விக்ரமசிங்க**
பிரதான முகாமையாளர் (கடன்)
B. Sc. EMV (Sp) Hons., AIV

12 **திருமதி. டபில்யூ. கே. பெரேரா**
பிரதான முகாமையாளர் (சட்டம்)
LLB, Attorney - at - Law, Company Secretary

13 **திருமதி. டபில்யூ. ஜீ. எஸ். எஸ். கே. அபேவிக்ரம**
உ (இணக்கம்)
Attorney at Law and Notary of Public, Commissioner for Oaths

14 **திரு. டி. பி. பிரசாத் வில்லாராச்சி**
உள்ளக கணக்காய்வாளர்
MBS, P.G. Dip. In Business & Finance, B.Com. (Sp), CBA, MAAT

15 **திரு. ஆர். எம். யு. டி. பண்டார**
பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஏற்பாட்டியல்)
MHRM, B. Sc. BA (Sp), NDHRM. , AMCIPM

16 **திரு. எஸ். ஏ. கே. ஏ. கே. சூரியாராச்சி**
பிரதான முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)
MA Econ ,, PGD-App. Stat, BA Econ, ACCA - UK (part)

17 **திரு. ஐ. எதிரிசூரிய**
பிரதான முகாமையாளர் (மதிப்பீடு)
M. Sc. (REMV), B. Sc. (EMV) (Sp) Hons. MRICS (UK), AIV

18 **திரு. எம். எம். லக்ஷ்மன் பெரெரா**
தகவல் தொழில்நுட்ப ஆலோசனையாளர் (பிரதான வங்கியியல் தீர்வுகள்)
M. Sc. (CS), MBA, B. Sc., BCS, FCS

நிழல்படத்திற்கு சமூகமளிக்கவில்லை
திரு. ஐ. கே. காமினி
பிரதான முகாமையாளர் (கடன்)

கூட்டிணைந்த ஆளுகை

பொதுவாக, கூட்டிணைந்த ஆளுகை நிறைவேற்று முகாமைத்துவத்தின் செயலாற்றுகை மற்றும் உபாயமார்க்க பணிப்புரைகளின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்கான அடிப்படைக் கொள்கையின் முக்கியத்துவத்தையும் மற்றும் பங்குதாரர்களுக்கான பொறுப்புக்கூறலையும் முனைப்புறுத்துகின்றது.

உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாக, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது, அதன் எதிர்கால வளர்ச்சி மற்றும் கூட்டிணைந்த செயலாற்றுகைக்கு ஒரு அடிப்படையை வழங்கும் கூட்டிணைந்த ஆளுகையின் முக்கியத்துவம் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றது.

மிக உயர்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் உடைய அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் குழுவானது செயற்பாடுகள் மற்றும் வங்கியின் நிதித் திறனுக்கான ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் வைப்பாளர்கள், கடன் வழங்குநர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் நலன்களை உறுதிசெய்யும் பொறுப்பை சந்திக்கின்றது

வங்கியின் பணியாளர்கள் குழுவானது வங்கி, நிதி, பொருளாதாரம், வணிக மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சட்டம், சந்தைப்படுத்தல் போன்றவற்றில் நடைமுறை அனுபவமுள்ள நிபுணர்களை கொண்டுள்ளது. அவர்களுக்கு உபாயமார்க்கம், செயலாற்றுகை மற்றும் வளங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற மற்றும் தீர்மானத்தை எடுப்பதற்கு போதியளவு திறன்களும் அனுபவங்களும் உள்ளன. நிறுவனத்தின் மூலோபாய நோக்கங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான தலைமைத்துவத்தை வழங்குதல், வணிகத்தின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பங்குதாரர்களை அவர்களின் சொத்து மேற்பார்வையை அறிக்கையிடுதல் போன்ற நிறுவனத்தின் விவகாரங்கள் தொடர்பான மேற்பார்வை பொறுப்புகளை வாரியம் தொடர்ந்து வலுப்படுத்தியது,

வங்கியின் ஆளுமை அடிப்படைக் கொள்கைகள் மற்றும் கட்டமைப்பானது திறமையான முடிவெடுப்பு, பாரிய வெளிப்படைத்தன்மைக்கான வசதி மற்றும் வியாபாரத்தின் அனைத்து அம்சங்களிலும் பொறுப்புணர்வை ஊக்குவித்தல் என்பவற்றை அடித்தளமாக கொண்டுள்ளது. வங்கியானது நாட்டின் மற்றும் ஆளுகை அதிகாரிகளின் சட்டங்கள் மற்றும் வங்கியின் உள்ளக் கொள்கைகள் ஒழுங்குமுறைகளின் கட்டமைப்பினுள் இருப்பதையும் விவேகத்துடன் நிர்வகிக்கப்படுவதையும் உறுதி செய்கிறது.

வங்கியின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் என்பன தலைவரின் மீளாய்வு/ செய்தி மற்றும் பொது முகாமையாளரின் / பிரதான நிறைவேற்று அலுவலரின் மீளாய்வில் விபரமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது எனினும், பொறுப்புக்கூறல், நேர்மை, நியாயம், ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள், சட்ட/ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்கம், வெளிப்படைத்தன்மை, வெளிப்படுத்தல் மற்றும் மிகச் சிறந்த திறமை போன்ற மிக முக்கியமான தரங்கள் மற்றும் பண்புகளை அடிப்படையாகக் கொள்ளுதல் முக்கியமானதுடன் இது வரை அதன் வங்கியின் வியாபார நடவடிக்கைகளை ஒழுக்கநெறிமுறைக்கு உட்பட்டே மேம்படுத்துகின்றது.

பொறுப்புக்கூறல்

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கான முக்கிய கற்களில் ஒன்று பொறுப்புக்கூறல் மிக்க கலாச்சாரத்தை வளர்த்தல் ஆகும், அந்த நிகழ்பாட்டை நன்கு புரிந்து கொண்ட வங்கி அதன் நடவடிக்கைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளது.

பொறுப்புக்கூறல் எனும் கோட்பாடு சிறந்த ஆளுகையின் மூலங்களில் ஒன்றென விளங்கிக்கொள்ளல், பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழுவின் விதப்புரையின் மீது, வங்கியின் வருடாந்த மற்றும் இடைக்கால நிதிக் கூற்றுகளை சபை மீளாய்வு செய்வதுடன் அதனை அங்கீகரிக்கின்றதுடன் வங்கியின் பங்குதாரர்களுக்கும் பொது மக்களுக்கும் நிதியியல் கூற்று மீதான தகவல்கள் அறிக்கையிடப்படல் வேண்டும் என்பதுடன் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என நம்புகின்றது.

நிதிக்கூற்றுகள் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் வங்கி காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை பத்திரிகையில் வெளியிடுகின்றதுடன், இது வங்கியின் கொள்கைகள் மற்றும் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை நம்பகத்தன்மையை அதிகரித்து அதன் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்துகின்றது.

வங்கி அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினாலும் அமுல்படுத்தப்படும் வங்கி வியாபாரத்திற்கு பொருத்தமான விடயங்களுடனான தேவைப்பாடுகளுடன் ஒழுகுகின்றது.

நியாயத்தன்மை

வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தில் உள்ளவர்கள் போன்ற எவரையும் காயப்படுத்தாது வியாபாரத்தின் தேவைகளை பாதுகாப்பதற்கு சிறந்த தீர்மானங்களை எடுத்தல் நிறுவனத்தின் ஓர் இலக்காகும் என்பதை வியாபாரத்தின் சூழலில் விளங்கிக்கொள்ள முடியும்.

வங்கி, தேசத்தின் ஒரு வீடமைப்பு வங்கியாக அதன் அனைத்து தரப்பினரையும் அது சரியானது அல்லது நியாயமானது எனும் அடிப்படையில் அவர்களைக் கவனிக்கும். வங்கி கடன் வசதிகளை வழங்கும் பொழுது மாதாந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான வாடிக்கையாளர்களின் மீளக்கொடுப்பனவு இயலளவை மதிப்பீடு செய்கின்றது. வங்கி கடன் நிலுவையைப் பெற்றுக்கொள்வதற்கு தனது கடைசி நடவடிக்கையாக மட்டுமே சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றதுடன் வங்கி வாடிக்கையாளர்கள் எதிர்பாராத துன்பங்களுக்கு உள்ளாகும் போது எப்பொதும் வாடிக்கையாளர்களுடனேயே நிற்கின்றதுடன் அதனால் வங்கியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி காரணமாக வங்கித்துறையில் கடுமையான போட்டியை எதிர்கொள்கின்றது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல் என்பன கூட்டிணைந்த ஆளுகை சட்டத்தின் மிக முக்கியமான கூறுகளாகும், ஏனெனில் பங்குதாரர்கள், நலன்விரும்பிகள் மற்றும் உத்தேச முதலீட்டாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மூலதன ஒதுக்கீடு, கூட்டிணைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதியியல் செயலாற்றுகையைக் கண்காணிப்பதற்கும் அடிப்படையாக தகவல்கள் அமைகின்றன. அதற்கமைவாக, நிதியியல் பிரச்சினைகள் தோன்றுவதற்கு நேரடிக் காரணமாக அமைவது நிதியில் வெளிப்படுத்துகை பற்றாக்குறை மற்றும் போதியளவில் ஆளுகையினை பின்பற்றப்படாமை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

வெளிப்படைத்தன்மை என்பது கூட்டிணைந்த ஆளுகைக்கான ஒரு பிரதான படியாகும் மற்றும் அவர்கள் கண்காணிக்கப்படுகின்றார்கள் என்பதனால் முகாமைத்துவம் முறைசாரா நடவடிக்கைகளில் அல்லது சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பது உறுதிசெய்யப்படுகின்றது. வெளிப்படைத்தன்மையை அடைவதற்கு, சரியாக கணக்கியல் முறைகள், வங்கியின் சரியானதும் முழுமையானதுமான தகவல்களை வெளியிடுதல் மற்றும் பணிப்பாளர்கள் அல்லது கட்டுப்படுத்தும் பங்குதாரர்களின் முரண்பட்ட விருப்பங்களினை வெளிப்படுத்தல் என்பற்றை பின்பற்றல் வேண்டும் என வங்கி பலமாக நம்புகின்றது. அதற்கமைவாக, வங்கி மூலதனப் போதுமை, பிரதான செயலாற்றுகை காட்டிகள், வியாபார ஒரு முகச்சிந்தனைகள், கூட்டிணைந்த ஆளுமைக் கூற்றுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுகள் என்பவற்றை வருடாந்த அறிக்கை ஊடாக அதன் செயற்பாடுகளை முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் வெளிப்படுத்தியது.

மேலும் வங்கி காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் அறிக்கைகளை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் Basel III ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு அமைவாகவும் SLFRS நியமங்களுக்கு அமைவாகவும் தயாரித்து வெளியிடுகின்றது. இது பொது மக்களின் தேவைகள் வங்கி விவகாரங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

வங்கி அதன் பிரதான விடயங்கள் மீதான வெளிப்படுத்துகையில் அதன் இடர் வெளிப்படுத்தல் மற்றும் இடர் முகாமைத்துவ உபாயமார்க்கங்கள் அதன் அவசியமான இரகசியத்தன்மையை மீறவில்லை என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும், அத்துடன் வழமையான அறிக்கைகள் உரிய அதிகாரசபைகளினாலும் பங்குதாரர்களினாலும் கோரப்படும் சட்டத்திற்குட்பட்ட அறிக்கைகள் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

2020ஆம் ஆண்டில். வங்கயில் எந்தவாரு தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடப்படவில்லை.

பணிப்பாளர்கள் சபை

வங்கியின் பணிப்பாளர் சபை, 1975ஆம் ஆண்டு 30ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சு மற்றும் பொது தொழில் முயற்சிகள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒன்பது உரிய வகையில் சுயாதீனமான மற்றும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. வங்கியின் நோக்கமான விவசாய, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதலை நிறைவேற்றும் வகையிலும் மற்றும் சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அமைச்சு, வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சு மற்றும் நீர்ப்பாசன மற்றும் கமநல அமைச்சுகளின் சார்பில் மூன்று அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். சபையின் கலவையானது, சபையின் தீர்மானம் எடுப்பதற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்கு போதியளவு சக்தியைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

அதற்கமைவாக, கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவின் ஊடாக தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்கும் நிறைவேற்று அதிகாரியான பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு அதி உயர் மட்ட உபாயமார்க்க வழிகாட்டலையும் அதனை அமுல்படுத்துவதற்கான அதிகாரத்தையும் வழங்கி அரச சபையை ஒரு குழுவாக இயங்குவதற்கு அனுமதிக்கின்றது.

பணிப்பாளர் சபை, அவர்களுடைய தீர்மானங்கள், அனுபவம் மற்றும் நிபுணத்துவம் என்பவற்றைக் கொண்டு வங்கியின் உபாயமார்க்க முன்னுரிமைகளுக்கு இணங்கும் வகையிலான முன்செயற்படும் இடர் முகாமைத்துவ பொறிமுறை மற்றும் வினைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள், வளங்களின் வினைத்திறனான பயன்பாடு என்பவற்றுக்கு கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கு பலமான வழிகாட்டலை வழங்குகினறனர்.

பணிப்பாளர்கள் குழு, அவர்களின் தீர்ப்பு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்துவம், வளங்களின் திறமையான பயன்பாடு, பயனுள்ள உள் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் ஒரு செயல்திறன் மிக்க மூலோபாய முன்னுரிமைகள் வழியாக இடர் மேலாண்மை பொறிமுறையை உறுதிப்படுத்த பெறுநிறுவன நிர்வாகத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டுதலின் ஆதாரமாக செயல்படுகிறது.

தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் குழு தங்கள் வலுவான அர்பணிப்பு மற்றும் தொலைநோக்கு வழிகாட்டுதலுடன், வங்கியை முன்னோக்கி நிர்வகிக்கின்றது

பணிப்பாளர்கள் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுகின்றார்கள், 2020ஆம் ஆண்டு 11 முறை கூட்டம் நடைபெற்றது.

பொது முகாமையாளர் அனைத்துக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டுள்ளார். உபாயமார்க்க இலக்குகள், நிதி, சமூக மற்றும் சுற்றாடல் செயலாற்றுகைகள், தொழிற்பாட்டு சூழலினால் முன்மொழியப்பட்ட மாற்றங்கள் மற்றும் சவால்கள், கொள்கைச் சட்டக விதப்புரைகள் மற்றும் நிறைவேற்றுத்தர ஆளுகை கட்டமைப்புகள் என்பவற்றின் முன்னேற்றத்தை அமுல்படுத்தல் உட்பட ஏனைய நிறைவேற்றுனர்களின் பிரசன்னம் அவசியமாகிய பொழுது அவர்கள் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

வங்கியைக் காப்பாற்றும் கூட்டிணைந்த திட்டம், வங்கியின் தொலைநோக்கு, செயற்பணி, வியாபாரக் குறிக்கோள் மற்றும் உபாயமார்க்கம் என்பவற்றை உருவாக்கும் செயற்பாட்டுத் திட்டம், வியாபார சந்தர்ப்பங்களை கவனத்தில் கொள்ளல் மற்றும் பிரதான இடர்கள் என்பவற்றை சபை காலந்தோறும் மீளாய்வு, மதிப்பீடு செய்து அங்கீகாரத்தினை வழங்குகின்றது. உபாயமார்க்கத் திட்டம் போன்றவற்றுக்கான திருத்தங்களுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்னர் அது பொருத்தமானதா எனக் கருதுவதற்கு முன்மொழிவுகளை சபை முன்மொழிகின்றது. முகாமைத்துவமானது உபாயமார்க்கங்களை அமுல்படுத்தி, முன்னேற்ற அறிக்கைகளை சபைக்கு சமர்ப்பிக்கின்றது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

பணிப்பாளர்களின் பெயர்

பணிப்பாளர்களின் பெயர்	நியமனத் திகதி	பணிப்பாளர் ஒய்வுபெற்ற அல்லது நீக்கப்பட்ட திகதி	பணிப்பாளரின் வகுதி
டாக்டர். திரு. கே.டபில்யூ.ஏ.யு. காரியவசம்	13.01.2020		சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
திரு. எஸ்.கே.ஏ. கலபதி	02.01.2020		சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	02.01.2020		சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
திருமதி. டபில்யூ.சி.என். குரே	02.01.2020		சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்
திரு. எச்.சீ.டி.எல். சில்வா	11.01.2020		சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர் (திறைசேரி பிரதிநிதி)
டாக்டர். பீ.பி. முனிகே	23.09.2020	29.01.2020	சுயாதீன நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர

2020ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களுக்கு பங்குபற்றிய பணிப்பாளர்களின் வருகை வருடாந்த அறிக்கையில் பணிப்பாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலரின் பணிகள்

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் வங்கியில் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர் ஆவார். குழுவானது வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலரை நியமிக்கிறது. கூட்டிணைந்த நிர்வாகக்குழு மற்றும் வங்கியின் அனைத்து முகாமைத்துவக் குழுக்களுக்கும் தலைமை தாங்கும் பொது முகாமையாளருக்கு வங்கியின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது முகாமையாளரின் பணிகள் வங்கியின் தொழிற்பாட்டு மற்றும் வியாபார நடவடிக்கைகளின் நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் நிறைவேற்றுனராகவும் இருத்தலாகும். உயர்மட்ட நிர்வாக தீர்மானங்களை எடுப்பதற்கான வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் அவர் பொறுப்புவாய்ந்தவராக திகழ்கின்றார். பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலரினால் நேரடியாக அறிக்கையிடப்படும், மேலும் வங்கியின் செயல்திறனுக்காக பணிப்பாளர்கள் குழுவிற்கு பொறுப்புக் கூற வேண்டும். வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கு மேலதிகமாக, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் பங்குதாரர்களின் மதிப்பை அதிகரிக்கும் நோக்கில் நீண்டகால உத்திகளை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் தலைமை தாங்குகிறார்.

சபை அழைக்காவிடின் அல்லாது சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் பொது முகாமையாளர் சமூகமளித்து பங்குபற்றுவார், ஆனால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

அதனால், வங்கியின் அனைத்து மட்டங்களிலும் நடைபெறும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆழமான அறிவினைக் கொண்ட நபராக பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றதனால், இந்தப் பொறுப்புக்குரிய பதவிக்கு வங்கித்துறையில் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு துறைகளிலும் பணியாற்றிய அனுபவம் கோரப்படுகின்றது. வங்கியின் செயற்பாட்டுத் தலைவராக இருப்பதனால், வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் மேற்பார்வை செய்வது அவரது கடமையாக உள்ளதனால் அதனை அவர் கடுமையாக வங்கியின் பணிகளை பின்பற்றுவார்.

இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கு அமைவாக தலைவர் மற்றும் பொது முகாமையாளர் இருவருக்கிடையிலான பொறுப்புகள் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது

சபையின் உப குழுக்கள்

பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் கீழ்வரும் நான்கு உப குழுக்களை வங்கி நிறுவியுள்ளது. பொதுவாக சபையின் உப குழுக்கள் ஒருவருக்கொருவர் சுயாதீனமாக செயல்படுகின்றன, மேலும் அவை முழுமையாக சபைக்கு உதவும் வகையில் போதுமான அதிகாரம், வளங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் வழங்கப்படுகின்றன

இந்தக் குழுக்கள் பின்வருவனவாகும்

- சபையின் கணக்காய்வுக் குழு (BAC)
- சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC)
- சபையின் பரிந்துரைக் குழு (BNC)
- சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC).

வருடாந்த அறிக்கையில் உப குழுக்கள் அறிக்கையின் கீழ் சபையின் உப குழுக்களின் நோக்கங்கள் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் அந்தத்துறையில் நிபுணத்துவம் கொண்ட நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளரின் கீழ் தலைமை தாங்கப்படுகின்றது.

சபையின் கணக்காய்வுக் குழு நிதியில் அறிக்கையிடல் செயன்முறை, கணக்காய்வு செயன்முறை, வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல்களுடன் இணக்கம் என்பற்றுக்கான மேற்பார்வையினை வழங்குகின்றது. நிதியியல் கூற்றுகளின் மீது உத்தேச தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு அண்மைய நிபுணத்துவ மற்றும்

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

ஒழுங்குபடுத்தல் அறிவிப்புகள் மற்றும் கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்க முடியும். அறிக்கைகள் முழுமையானவை மற்றும் செம்மையானவை என மதிப்பிடுவதற்கு எவ்வாறு முகாமைத்துவம் உள்ளக இடைக்கால நிதியியல் தகவல்களை அபிவிருத்தி செய்துள்ளது என விளங்கிக்கொள்ளல் அவசியமானது.

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயிக்கின்றதுடன், காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஊதியம், நன்மைகள் மற்றும் செயலாற்றுகை மீதான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மீளாய்வு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கான செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றது. வங்கியின் சார்பாக மனித வள முகாமைத்துவ உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்து மற்றும் மீளாய்வு செய்வதுடன் ஏனைய உப குழுக்களுடனும் தொழிற்பாட்டுக் குழுக்களுடனும் அனைத்து ஊழியர் சார்பான அனைத்து மனிதவளப் பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை வகிபாகத்தை பேணுதல் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவிற்கு சாட்டப்பட்டுள்ள பிரதான பொறுப்புகளாகும்.

சபையின் பரிந்துரைக் குழுவானது பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுத்தல்/ நியமித்தலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களை நியமிப்பற்கு அல்லது பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகளை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. அதற்கமைவாக குழு வங்கியின் கூட்டிணைந்த ஆளுகையின் ஒரு அங்கமாக செயற்படும். குழுவானது பணிப்பாளர் சபையின் அதன் உரிய நிறுவனத்தை மதிப்பீடு செய்வதுடன் சபை அபேட்சகருக்கு தேவையான திறன்கள் மற்றும் பண்புகளை பரிசீலிக்கும்.

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு பொருத்தமான இடர் காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல் மூலம் வங்கிக்கான கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்கம் போன்ற அனைத்து இடர்களையும் மதிப்பீடு செய்யும். குழுவானது, அந்த குழுக்களினால் குறித்துரைக்கப்பட்ட அளவு மற்றும் தர வரையறைக்குட்பட்டு இந்த இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காகவும் குறித்துரைக்கப்பட்ட இடர்களைத் தீர்ப்பதற்காகவும் கடன் குழு மற்றும் சொத்து பொறுப்பு குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களினதும் போதுமை மற்றும் வினைத்திறன் தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்ள முடியும். குழுவினால் வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் மட்டங்களுக்கு அப்பால் குறித்துரைக்கப்பட்ட இடர்களின் தாக்கத்தை இல்லாது செய்வதற்கு சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

வங்கியின் கூட்டிணைந்த ஆளுகை மற்றும் இடர் காரணிகள் மற்றும் கைத்தொழிற்துறையின் பிரதான இடர் குணகங்கள், அவர்களுடைய ஒருங்கிணைப்பு மற்றும் நிதித் தகவல்களை மீளாய்வு செய்வதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் சபையின் கணக்காய்வு சபை மற்றும் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு என்பன சபைக்கு உதவுகின்றன. சபை சில சிக்கலான பரப்புக்களை தொழிற்பாட்டு மட்டத்திற்கு மாற்றாது, கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளுக்கு அமைவாக தன்னுடனேயே வைத்துக்கொண்டுள்ளது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சிறந்த இடர் முகாமைத்துவ காட்டிகள் குறைந்து இடர்களுடன் தொடர்புடைய நபர்களுக்கிடையில் குறைந்த விருப்ப முரண்பாடுகளையும் காட்டுகின்றது. சிறந்த இடர் முகாமைத்துவத்தின் இந்த சிறப்புகளின் அமுல்படுத்தல் வங்கியின் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகைக்கு கொண்டு செல்கின்றது.

முகாமைத்துவக் குழுக்கள்

பாஸல் வழிகாட்டி வரிசைக்கு அமைவாக சபையானது நாளாந்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் கூடாது ஆனால் நியாயமான முகாமைத்துவத்திற்கான போதியளவு தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியினால் பிரதான முகாமைத்துவ நபர்கள் தலைமை தாங்கப்படுவதுடன், வியாபார தொழிற்பாடுகள் வங்கியினால் சாட்டப்பட்டுள்ளதுடன் வங்கிப் பணிப்பாளர்கள் வங்கியின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றனர். இந்தக் குழுக்கள் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகள் பாதுகாப்பாகவும் பிரதான முகாமைத்துவ நபர்களினால் சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த சபைப் பணிப்பாளர்களுக்கு குறிப்பறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன் கீழ் பணிப்பாளர் சபையினால் சபையின் உப குழுக்களுக்கு மேலதிகமாக கீழ்வரும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது.

- நிறைவேறறுக் கடன் குழு (ECC)
- சொத்துக்கள் - பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு (ALCO)
- சந்தைப்படுத்தல் குழு (MC)
- பண்ட அபிவருத்திக் குழு (PDC)
- மீட்புக் குழு (RC)
- நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (EIRMC)

சபையின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் சிரேஸ்ட முகாமைத்துவம் வியாபார உபாயமார்க்கம், இடர் சகிப்புத்தன்மை, ஊதியம் மற்றும் ஏனைய கொள்கைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணங்கி வங்கியின் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முகாமைத்துவம் செய்யவும் வேண்டும், அதன்படி, மேற்குறிப்பிட்ட முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் வியாபாரத்தை முகாமைத்தவம் செய்யவும் அவர்களின் கீழ் உள்ளவர்களை மேற்பார்வை செய்யவும் அவர்களுக்கு வழமையான பயிற்சிகளை அணுகுவதற்கு வழமையான பயிற்சியை பராமரித்தல் மற்றும் அவர்களுடைய இயலுமையை அவர்களின் விடயப்பரப்பில் இற்றைப்படுத்துதல் வேண்டும். கிளை முகாமையாளர்கள் மாதாத்திற்கு ஒரு முறை சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றுகின்றன.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. BAN/F/SMIB/CG/2020/1 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 13 December 2021

தலைவர்,

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை பணிப்புரையின் தேவைப்பாட்டுக்கு இணங்குவது மீதான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் விடயம் தொடர்பான முடிவுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 31 மார்கழி 2020

இலங்கை மத்திய வங்கியினால் (இமவ) வெளியிடப்பட்ட கூட்டு நிர்வாக வழிகாட்டலின் தேவைப்பாட்டு அனுமதி மற்றும் சந்திப்பதற்கு முன்வைக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் ஆளுகை அறிக்கை பற்றிய வகையில் என்னால் இந்த அறிக்கையின் பிற்சேர்க்கை தொடர்பாக கணக்கிடப்பட்ட செயன்முறைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கைகள் இணங்கி செயன்முறைகள் பற்றி பொருத்தமான 4400 இலங்கை நியமம் தொடர்பான சேவைகளின் (SLSRS 4400) கொள்கைகளுக்கேற்ப செயற்படுத்தப்பட்டுள்ளது

இந்த அறிக்கையில் இணைக்கப்பட்ட இணைப்பு-1 இல் எனது அவதானிப்புகளை தெரிவிக்கிறேன்.

மேற்கண்ட நடைமுறைகள் இலங்கை கணக்காய்வு தரநிலைகள் அல்லது பகுப்பாய்வு தொடர்பான இலங்கை தரநிலைகளுக்கு ஏற்ப செய்யப்பட்ட கணக்காய்வு அல்லது பகுப்பாய்வு அல்ல என்பதால், CBSL வழங்கிய பெருநிறுவன ஆளுகை உத்தரவுகளுக்கு இணங்குவது குறித்து நான் எந்த உத்தரவாதத்தையும் தெரிவிக்கவில்லை

நான் மேலதிக நடைமுறைகளைச் செய்திருந்தால் அல்லது இலங்கை கணக்காய்வு தரநிலைகள் அல்லது பகுப்பாய்வு தொடர்பான இலங்கை தரநிலைகளுக்கு இணங்க ஆளுகை அறிக்கையின் கணக்காய்வு அல்லது பகுப்பாய்வு செய்திருந்தால், பிற விடயங்கள் தொடர்பாக உங்களிடம் என்னால் அறிக்கை வெளியிட்டிருக்க முடிந்திருக்கும்.

எனது அறிக்கை இந்த அறிக்கையின் முதல் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காகவும் உங்கள் தகவலுக்காகவும் மட்டுமே உள்ளது, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்லது வேறு எந்த தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுவதற்கோ பயன்படுத்தக்கூடாது.

இந்த அறிக்கையின் மேலுள்ள விடயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன் தொடர்புடையதுடன் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதிக் கூற்றுகளுக்கும் முழுமையாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

வங்கியின் இணக்க அலுவலர்களுக்கான கேள்விக்கொத்து

குறிப்பு: இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட 2007ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கட்டளையின் 3ஆம் பிரிவுடன் ஒத்துப்போக கீழ்வரும் இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன, இந்த ஆவணத்திற்கு பிரிவு 1 மற்றும் 2 பொருத்தமானதல்ல,

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பிடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1	பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்					
3.1.i	வங்கியின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன					
3.1.i.ஆ	வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்களின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டன.	இணங்கியது			30.04.2020ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 20/01/68 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் கீழ் 2020 – 2024 வரையிலான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.	இணங்கியது. 30.04.2020ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 20/01/68 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் கீழ் 2020 – 2024 வரையிலான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது என்பது பரீட்சிக்கப்பட்டது.
	வங்கியின் செயற்பாட்டின் ஊடாக வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை பிரமாணங்கள் உரிய முறையில் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			உபாயமார்க்க நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த பெறுமதிகள் தொடர்பாக 2020ஆம் ஆண்டு நடைபெற்ற சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.	இணங்கியது. இணங்கியது. 06 ஜூலை 2020 அன்று நடைபெற்ற கிளை முகாமையாளர் கூட்டம் பரீட்சிக்கப்பட்டது.
3.1.i.ஆ	வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயங்கள் தொடர்பான சபையின் அங்கீகாரம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயமார்க்கத் (கூட்டிணைந்த தொலை நோக்கு, செயற்பணி மற்றும் இலக்கு) திட்டங்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இது 30.04.2020ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது. 30.04.2020ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 20/01/68 ஆம் இலக்க சபைப் பத்திரத்தின் கீழ் வங்கியின் ஒட்டு மொத்த வியாபாரத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
	ஒட்டு மொத்த இடர் தொடர்பான கொள்கைகள், இடர் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமை என்பன வங்கியின் ஒட்டு மொத்த வியாபார உபாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனவா எனவும் பரீட்சிக்கப்பட்டன.	இணங்கியது			முழுமையான இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகளை உள்ளடக்கிய முழுமையான வியாபார உபாயமார்க்கத்தை வங்கி ஆவணப்படுத்தியுள்ளது.	இணங்கியது. கூட்டிணைந்த திட்டத்தின் பக்கம் 28 – 37 வரை வாசிக்கவும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பிடு	கணக்காய்வு அவதானிப்புகள்
	குறைந்தது எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான அளவிடக் கூடிய இலக்குகளை ஒட்டுமொத்த வியாபார உபாயம் கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியது			2020 – 2024ஆம் ஆண்டுக்கான அளவிடக்கூடிய இலக்குகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணங்கியது. கூட்டிணைந்த திட்டத்தின் பக்கம் 38 – 53 வரை வாசிக்கவும்.
3.1.i.இ	பணிப்பாளர் சபையினால் அடையாளம் காணப்பட்ட இடர்களை முகாமை செய்வதற்கு உரிய புத்திசாதுர்யமான முறையிலும் பொருத்தமான முறையிலும் அவற்றை முகாமை செய்தல் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.		இணங்கவில்லை		சபையினால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக செயற்படுகின்றது. ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அடையாளம் காணப்பட்ட பிரதான பரப்புகளையும் ஒருங்கிணைப்பட்ட இடர் முகாமைத்துவ வரைச்சட்டம், இடர் மதிப்பீட்டு வரைச்சட்டம் மற்றும் இடர் நாட்டம் என்பவற்றின் மீளாய்வு/ அங்கீகாரத்திற்காக காலத்திற்கு காலம் சந்திப்பினை மேற்கொள்ளுகின்றது. பிரதான இடர்களை அளவீடு செய்வதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு முறைமைகளை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அமுல்படுத்துகின்றது. ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, இடர்களைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பிரதான இடர் காட்டிகள் மற்றும் அழுத்தப் பரிசோதனை பெறுபேற்று அறிக்கைகளை சபைக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்காக சமர்ப்பிக்கின்றது. பிரதான இடர் காட்டிகள் மற்றும் இடர் நாட்டம் என்பன சபையினால் தீர்மானிக்கப்படுகின்றது.	இணங்கவில்லை 25 ஒகஸ்ட் 2020, 24 செப்டெம்பர் 2020, 22 ஒக்டோபர் 2020, 11 டிசம்பர் 2020 ஆம் திகதிகளில் நான்கு ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் சொத்துத் தரம், திரவத்தன்மை இடர், பட்டியல் இடர் மூலதனப் போதுமை, இடர் உழைப்பு மற்றும் இலாப இடர் மற்றும் தொழிற்பாட்டு இடர் பரப்புகள் தொடர்பாக கலந்துரையாடல். 2020 ஆம் ஆண்டுக்கு வங்கி BCPDR செயற்படுத்தவில்லை என்பதை நாங்கள் அவதானித்தோம். 2020இல் பிரதான இடர் காட்டியின் நடத்தை தொடர்பான மூன்று அறிக்கைகள் பார்வையிடப்பட்டது. நாங்கள் 2020இல் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் முழுமையற்ற ஆவணப்படுத்தல் கூட்ட அறிக்கையை அவதானித்தோம். இது எதிர்காலத்தில் வலுப்பெறும். அத்துடன், சபை உபாயமார்க்க தீர்மானத்தின் மதிப்பீட்டு இடரை அடையாளம் காண்பதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தியிருந்ததுடன் இது உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பிடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.i.ஈ	வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்களை உள்ளடக்கிய சகல அக்கறை காட்டுனர்கள் தொடர்பில் பணிப்பாளர் சபையானது தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்து அமுல்படுத்தி உள்ளதா என பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியது			வங்கிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணுவதற்கு வாடிக்கையாளர் பட்டயம் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன், அரசாங்கம் வங்கியின் 100% வீத உரிமையைக் கொண்டுள்ளதுடன் அனைத்துப் பணிப்பாளர்களும் பொது தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் நிதி அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கிப்படுகின்றனர். அதனால் அரசாங்கம்/ பங்குதாரர்கள் மற்றும் வங்கிக்கிடையில் வினைத்திறனான தொடர்பாடல் பேணப்படுகின்றது. காலாண்டு நிதிநிலை அறிக்கைகள் செய்தித்தாள்களில் வெளியிடப்படுகின்றன. தகவல்தொடர்பாடல்	இணங்கியது பணிப்பாளர் சபையானது டிசம்பர் 2015 சபை குறிப்பு இலக்கம் 15.11.155.01 மற்றும் சபைப் பத்திரம் 15.11.08இன் ஊடாக தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது.
3.1.i.உ	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத் தகவல் முறைமையின் ஒருமைப்பாடு மற்றும் நிறைவுத் தன்மையினை சபை மீளாய்வு செய்துள்ளமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது.		இணங்கவில்லை		சபையின் கணக்காய்வுக் குழுவினால் உள்ளகக் கட்டுப்பாட்டின் போதுமை மற்றும் ஒருமைப்பாடு மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை மீளாய்வு செய்யப்படுகின்றது. சபை சபையின் கணக்காய்வுக் குழுவினதும் BIRMCயினதும் குறிப்புகளை மீளாய்வு செய்கின்றது. சபையின் கணக்காய்வுக் குழு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையின் போதுமை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு சபைக்கு உதவுகின்றது. இதனை உள்ளக கணக்காய்வுப் பிரிவு தொடர்ச்சியாக கணக்காணிப்பு செய்கின்றது.	இணங்கவில்லை. தற்போது வங்கி அவர்களுடைய MIS முறைமையாக AS 400ஐப் பயன்படுத்துகின்றது. இது தகவல்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்கல் தொடர்பான நியதிகளின் கீழ் கைத்தொழிற்துறையின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யவில்லை. அதனால் வங்கி போதுமைக்கும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையின் ஒருங்கிணைப்பிற்கும் துணை வங்கியியல் தீர்வுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.i.ஊ	இலங்கை கணக்கீட்டு நியமங்களில் வரையறுத்த பிரகாரம், முக்கிய முகாமைத்துவப் பதவியினர் அடையாளம் காணப்பட்டு பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் (i) முக்கியமான கொள்கைகள் தொடர்பாக செல்வாக்கு செலுத்துபவர்களாகவும் (ii) செயற்பாடுகளை நெறிப்படுத்து பவர்களாகவும் (iii) வியாபாரச் செயற்பாடுகள், தொழிற்பாடுகள் மற்றும் முகாமை இடர் தொடர்பான கட்டுப்பாடுகளை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனரா எனப் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியது			இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு (LKAS 24) அமைவாக பொது முகாமையாளர் உள்ளடங்கலாக சபையின் பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை அலுவலர்கள் BNC சபையினால் விதப்புரை செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது. பணிப்பாளர் சபைக்கும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கு LKAS 24 இனை வங்கி பிரயோகிக்கின்றது.
3.1.i.எ	பணிப்பாளர் சபையின் கொள்கையுடன் நிலையான தன்மையினைப் பேணுகின்ற பிரதான முகாமைத்துவ பதவியினர்களால் வங்கி அலுவல்கள் உரிய முறையில் மேற்பார்வை செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி பணிப்பாளர் சபையால் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியது			சபை வங்கியின் உபாயமார்க்க வியாபாரத் திட்டம் மற்றும் நிதியியல் அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் அந்தந்த சபைக்கு சாட்டப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பாக சபையின் உப குழுக்களிடமிருந்து கிடைக்கப் பெறும் அறிக்கைகளையும் செயலாற்றுகையையும் மீளாய்வு செய்கின்றது. மேலும் பிரதான முகாமைத்துவ நபர்கள் தங்களின் விடயப்பரப்புகளின் கீழ்வருவன தொடர்பாக தொடர்ச்சியான காட்சிப்படுத்தலை மேற்கொள்வார்கள்.	இணங்கியது. 2020இற்கான சபையின் கணக்காய்வுக் குழுவின் கூட்டக் குறிப்புகள் மற்றும் சபையின் கணக்காய்வு குழுவின் அறிக்கைகள் பரீட்சிக்கப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டுக்கான கூட்டக் குறிப்புகள் பரீட்சிக்கப்பட்டன.
3.1.i.ஏ	பணிப்பாளர் சபை பணிப்பாளர்கள் தங்களுக்கும் மற்றும் பிரதான முகாமை பதவினர்களுக்குமான வரையறுக்கப்பட்ட விடயம் பரப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			இணங்கியது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி சட்டத்தின் 1975 இன் 13 ஆம் இலக்கத்தின் 07 ஆவது பிரிவின்படி, பணிப்பாளர் சபையினால் உப குழுக்களுக்கான பணிப்பாளர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு குழுக்களுக்குமான பட்டயம் பொறுப்புகளை வரையறுத்துள்ளது. தொழில் விபரிப்பில் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் பட்டியலிடப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் பணிபாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பிரதான பொறுப்புகள் அதிகாரப் பரப்புகள் BHRRC இனால் கலந்துரையாடப்பட்டது.	இணங்கியது BAC இன் சாசனங்கள், மற்றும் BIRMC மற்றும் BNC இன் TOR என்பன சரிபார்க்கப்பட்டன.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.i.ஐ	பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மற்றும் பணிப்பாளர்களின் சொந்த ஆளுமைச் செயன்முறைகள் கால அடிப்படையில் பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்துள்ளமையினை பரீட்சித்துள்ளதுடன் அவை கீழ் வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன: (i) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைப் பதவியினர்களின் தெரிவு, பெயர் குறிப்பிடல் மற்றும் வாக்கெடுப்பு, (ii) முகாமை ஆளணியினரின் ஈடுபாடுகளின் முரன்பாடுகள் மற்றும் ஆர்வங்கள் மற்றும் (iii) பலவீனங்கள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்தல்.	இணங்கியது			1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அமைச்சரினால் பணிப்பாளர் நியமனத் தேர்வு, பரிந்துரை, மற்றும் தேர்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதன் சுய ஆளுகை நடைமுறைகளின் வருடாந்த மதிப்பீடு அவர்களின் சுய மதிப்பிட்டுப் படிவங்களின் ஊடாக பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்துகின்றன. சபையின் தீர்மானங்களின் அமுல்படுத்தலை ஆய்வு செய்வதற்கு சபை தீர்மானித்துள்ளது. வினாக்கொத்துக்களின் ஊடாக பணிப்பாளர் சபையின் வினைத்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது.	இணங்கியது 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்கு அமைவாக அமைச்சரினால் பணிப்பாளர் சபைக்கான தேர்வுகள், பரிந்துரைப்புகள் மற்றும் தேர்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் 2020ஆம் ஆண்டுக்கான சுய மதிப்பீட்டுப் படிவங்கள் பார்வையிடப்பட்டன.
3.1.i.ஒ.	பிரதான முகாமைப் பதவியினர்கள் தொடர்பாக உள்ளீர்ப்புத் திட்டமொன்றை பணிப்பாளர் சபை கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது	இணங்கியது			2017ஆம் ஆண்டுக்கான பிரதான முகாமைத்துவ நபரை உள்வாங்குவதற்கான திட்டம் கிடைக்கப்பெறுகின்றது. 28.04.2017ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் உள்ள குறிப்புகளில் 17.04.52.04 (சபைப் பத்திர இல 17.04.21) இல் காணப்படுகின்றது. பணிப்பாளர் சபை பதவியணியையும் SOR இனையும் மீள்திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொண்டது.	இணங்கியது 28.04.2017ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் சபைப் பத்திர இல 17.04.21 இல் 2017ஆம் ஆண்டுக்கான பிரதான முகாமைத்துவ நபரை உள்வாங்குவதற்கான திட்டம் கிடைக்கப்பெறுகின்றது என்பது பார்வையிடப்பட்டது.
3.1.i.ஓ.	கொள்கைகளின் மீளாய்வு, தொடர்பாடல் மார்க்கங்களின் உருவாக்கம் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களின் செயலாற்றுகையினை கண்காணித்தல் போன்ற பணிகள் தொடர்பாக பிரதான முகாமைப் பதவியினர்களுடன் வழமையான கூட்டங்களை பணிப்பாளர் சபையானது நிரற்படுத்தியுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	இணங்கியது			ஒவ்வொரு கூட்டங்களின் போதும், கூட்டங்களுக்கு வருகை தருமாறு சபை பொது முகாமையாளருக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், இதன் மூலம் நிறுவன நோக்கங்கள் குறித்த முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கும் தொடர்பாடலை நிறுவுவதற்கும் சபை ஏற்பாடுகளை செய்துள்ளது. மேலும் பிரதான முகாமைத்துவ நபர்கள் தங்களின் விடயப்பரப்புகளின் கீழ்வருவன தொடர்பாக தொடர்ச்சியான காட்சிப்படுத்தலை மேற்கொள்வார்கள். மேலும் கூட்டிணைந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றிணைந்து பணிபுரிதலை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவ குழுக் கூட்டங்களையும் சிரேஸ்ட முகாமைத்துவக் கூட்டங்களையும் நடாத்துமாறு சபை பணிப்புரை வழங்கியுள்ளது.	இணங்கியது. சபையின் கூட்டக் குறிப்புகள் பரீசீலிக்கப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டுக்கான பொது முகாமையாளரின் வருகை உறுதிசெய்யப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.i.ஒள	ஒழுங்கு முறைப்படுத்தல் சூழலினை புரிந்து கொள்வதற்கான செயற்பாடுகள் மற்றும் செயன் முறைகளை பணிப்பாளர் சபை எடுத்துள்ளமை பற்றியும் அவ் ஒழுங்கு முறைகளுடன் வங்கி ஒரு பிணைப்பினைப் பேணுகின்றமை பற்றியும் செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.		இணங்க வில்லை		இணக்க அலுவலர் ஊடாக ஒழுங்குபடுத்துனர்களுடனான சிறந்த உறவுமுறையை வங்கி பாரமரிக்கின்றது. அவர் ஒழுங்குபடுத்துனர்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளை பராமரிக்கின்றார். அனைத்து பணிப்பாளர் சபை மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்கள் மீதான ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்து மதிப்பிடுகின்றார். ஒழுங்குமுறைச் சுற்றுச் சூழலுக்கான அனைத்து மாற்றங்களும் தொடர்புடைய ஒழுங்குமுறைப் படுத்துனர்களினால் தெரிவிக்கப்பட்டவுடன், அறிவிக்கப்படும். மேலும் இணக்க அலுவலர் மற்றும் இடர் தலைவர் இணக்கத் தேவைப்பாடு தொடர்பான நிலை அறிக்கையை பருவகாலத்தில் அறிக்கையிடுவார்.	இணங்கவில்லை. ஒழுங்குமுறைப் படுத்துனர்களுடன் உறவுமுறையைப் பராமரிப்பதற்கும் சீரான தொழிற்பாட்டுக்கும் வங்கி ஒரு தனிப்பட்ட இணக்கப் பிரிவினைக் கொண்டுள்ளது. எனினும் உரிய ஒழுங்குபடுத்துனர்களுடன் உரிய திகதியில் அறிக்கையிடலை அடைவதற்கு ஒழுங்குபடுத்துனர்களுடனான உறவுமுறையை வங்கி பலப்படுத்தல் வேண்டும். உதா: வருடாந்த அறிக்கை
3.1.i.ஃ	வெளியக கணக்காய்வாளர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான செயன்முறையொன்றினை பணிப்பாளர் சபை மேற்கொண்டிருக்கின்றமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.			பொருத்த மானதல்ல	1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக கணக்காளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு யாப்பின் 154 ஆவது சரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்காளர் நாயகமே வங்கியின் வெளிவாரிக் கணக்காளர் ஆவார்.	பொருத்தமானதல்ல. 1975ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக கணக்காளர் நாயகமே வெளிவாரிக் கணக்காளர் ஆவார்.
3.1.ii	பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினை (பி.நி.அ) நியமித்துள்ளமை பரீடச்சிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டல்களின் 3 (5) ஆம் பிரிவுகளுக்கு இணைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			1975ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 14.1ஆம் பிரிவுக்கு அமைவாக, நிதி அமைச்சரினால் தலைவர் நியமிக்கப்படுகின்றார். பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி சபையினால் நியமிக்கப்படுகின்றார். மேற்குறிப்பிட்ட பணிப்புரைக்கு அமைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன.	இணங்கியது. 1975ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 14.1ஆம் பிரிவை உசாவவும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.iii	பணிப்பாளர் சபை அண்ணளவாக ஒரு வருடத்தின் போது மாதம் ஒரு முறை என்ற வகையில் உரிய தினங்களில் கூடி பணிப்பாளர் சபை கூட்டங்களை குறைந்தது பன்னிரண்டு முறையாவது நடாத்தியுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.		இணங்க வில்லை		தற்போதைய சபையின் அங்கத்தவர்கள் 2020 ஜனவரி மற்றும் பெப்பரவரி மாதங்களில் நியமிக்கப்பட்டனர். சபை 2020ஆம் ஆண்டு ஒரு மாத இடைவெளியில் 11 தடவைகள் சந்திப்பினை மேற்கொண்டுள்ளது. சபைக் குறிப்புகள் மற்றும் பணிப்பாளர்களின் வரவுப் பதிவேட்டில் அவை கிடைக்கப் பெறும்.	இணங்கவில்லை. சபைக் கூட்டங்கள் 2020 ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டு 11 தடவைகள் சந்தித்துள்ளனர்.
3.1.iv	வங்கியின் இடர் முகாமை மற்றும் வியாபார மேம்பாடு தொடர்பான விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் தேவைப்படுகின்ற சந்தரப்பங்களில் வழமையான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்குப் பணிப்பாளர்களை இயலச் செய்யும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது	இணங்கியது			கூட்டத்திற்கான கூட்ட அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் என்பன குறைந்தபட்சம் கூட்டத்திற்கு ஏழு நாட்களின் முன்னர் கற்கை செய்து முன்மொழிவுகளை வழங்குவதற்காக செயலாளரினால் அனைத்து பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். அதற்கமைவாக விடயங்களும் வியாபார முன்னேற்றம் தொடர்பான முன்மொழிவுகளும் வங்கியின் முகாமைத்துவ இடர்களும் சபைப் பணிப்பாளர்களினால் கலந்துரையாடப்படுகின்றன.	இணங்கியது. கூட்டத்திற்கு ஏழு நாட்களின் முன்னர் சபையின் செயலாளரினால் அனைத்து பணிப்பாளர்களுக்கும் கூட்டத்திற்கான அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் தொடர்பான மின்னஞ்சல் அனுப்பப்பட்டது பார்வையிடப்பட்டது
3.1.v	சகல பணிப்பாளர்களும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்காக வழமையான கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அறிவித்தல் விடப்படுகின்றமை மற்றும் ஏனைய சகல சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் விடப்பட்டுள்ளமை பற்றியும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	இணங்கியது			சபைத் தலைவரினால் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் கூட்டம் நடப்பதற்கு 7 நாட்களுக்கு முன்னதாக பணிப்பாளர்களுக்கு தபால் மூலம் அல்லது நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது. கூட்டத்திற்கு ஏழு நாட்களின் முன்னர் சபையின் செயலாளரினால் அனைத்து பணிப்பாளர்களுக்கும் கூட்டத்திற்கான அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் தொடர்பான மின்னஞ்சல் அனுப்பப்பட்டது பார்வையிடப்பட்டது.
3.1.vi	பணிப்பாளர்கள் ஒரு வருட காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட எண்ணிக்கையில் 2/3 கூட்டங்களுக்கு அல்லது தொடர்ச்சியாக நடைபெற்ற 3 கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக் கூட்டம் தொடர்பில் மாற்றுப் பணிப்பாளர் ஒருவரின் பங்குபற்றல் எவ்வாறாயினும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான சமுகமளித்தமை தொடர்பான எற்புடைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.	இணங்கியது			தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர்கள் கூட்டங்களுக்கு வருகை தந்தனர். எனவே, அவ்வாறான நடவடிக்கைகள் தேவைப்படவில்லை.	இணங்கியது வரவினை உறுதிப்படுத்தவுவதற்கு 2020ஆம் ஆண்டுக்கான வரவுப் பதிவேடு பரிசீலனை செய்யப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.vii	1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் தொடர்பில் செயலகச் சேவைகளை வழங்குதல் மற்றும் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் 43 ஆவது பிரிவுக்கு அமைவாக, சபையின் செயலாளர் நியமிக்கப்பட்டார். மேலும் சபை, சபைச் செயலாளருக்கு தனியொரு அலகை நிறுவியுள்ளது.	இணங்கியது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இல. வங்கிச் சட்டத்தின் 43 வது பிரிவு மற்றும் 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக, சபையின் செயலாளர் ஒரு சட்டத்தரணியாவார். நாங்கள் சட்டத்தரணி சான்றிதழைப் பார்வையிட்டோம்.
3.1.viii	கம்பனிச் செயலாளரின் சேவைகள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேச இயலுமையினை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			சபையின் செயலாளர் என்ற வகையில், கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் மற்றும், சேவைகளையும் பணிப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ளவதற்கான வசதியுள்ளது.	இணங்கியது சபையின் செயலாளர் என்ற வகையில், கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் மற்றும், சேவைகளையும் பணிப்பாளர்கள் அனைவரும் பெற்றுக் கொள்ள இயலும்.
3.1.ix	பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளை கம்பனிச் செயலாளர் பேணுவதுடன் அவ்வாறான கூட்ட அறிக்கைகளைப் பணிப்பாளர்கள் பரீட்சிப்பதற்கான செயன் முறையொன்று உள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டுள்ளது,	இணங்கியது			சபையின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் கிரமப்படி கோவையிட்டு சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டன. சபை கூட்டங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் எந்த நேரத்திலும் எந்த ஒரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும்.	இணங்கியது சபையின் கூட்ட அறிக்கைகள் அனைத்தும் கிரமப்படி கோவையிட்டு சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பது பார்வையிடப்பட்டது. சபை செயலாளரின் கூற்றுக்கு அமைவாக சபைக் கூட்டங்கள் தொடர்பான எவ்வித தகவல்களையும் எந்த நேரத்திலும் எந்த ஒரு பணிப்பாளரும் பெற்றுக்கொள்ள முடியும்.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.x	சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது அல்லது பின்வரும் விடயங்கள் மேல் ஆய்வு செய்துள்ளது என செவ்வை பார்க்கப்பட்டுள்ளது: (அ) பணிப்பாளர் சபையானது தனது கலந்துரையாடலின் போது சுருக்கத் தரவுகள் மற்றும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டமை. ஆ) பணிப்பாளர் சபையினால் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள். இ) உரிய கவனம் மற்றும் மதிநுட்பத்துடன் பணிப்பாளர் சபையானது தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்ததா என வெளிப்படுத்தக் கூடிய விலகல்கள் அல்லது உள்ளடக்கப் பிரச்சினை அல்லது உண்மை நிலவர கலந்துரையாடல்கள்: ஈ) குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகவும் பணிப்பாளர் சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணைவாகவும் விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. உ) எவ்வகையான இடர் தொடர்பாக வங்கி முகங் கொடுக்கின்றது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள இடர் முகாமைச் செயற்பாடுகளினை மீளாய்வு செய்வதற்கும், மற்றும் ஊ) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள்.				இப்பிரிவின் கீழ் தேவைப்படும் தகவல்கள் போதியளவில் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு சபையின் கூட்ட அறிக்கைகள் பரிசோதிக்கப்பட்டது. கீழ்வருவன சபைக் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.. i. முன்னைய கூட்ட அறிக்கையின் உறுதிப்படுத்தல் ii. முன்னைய கூட்டத்தின் கூட்ட அறிக்கை தொடர்பாக எழுந்த விடயங்கள் iii. முன்னைய கூட்டத்தில் காலம் தாழ்த்தப்பட்டவை iv. அறவீட்டு விடயங்கள் v. நிதி சார்ந்த விடயங்கள் vi. சந்தைப்படுத்தல் மற்றும் பிரசாரங்கள் குறித்த விடயங்கள் vii. நிர்வாகம் மற்றும் ஆளணி விடங்கள் viii. கடன் விடயங்கள் ix. இடர் விடயங்கள் x. சட்ட விடயங்கள் மற்றும் xi. ஏனைய வேறு விடயங்கள்	இணங்கியது. 20 ஜூன் 2020 சபையின் கூட்டக் குறிப்புகள் பரீட்சிக்கப்பட்டதுடன், அவை சரியான முறையில் அவசியமான விபரங்களுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3.1.xi	வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுதந்திரமான தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	இணங்கியது			சபையின் பணிப்பாளர்கள் அவசியமான போதெல்லாம் நிபுணத்துவ ஆலோசனைகளை வங்கியின் செலவில் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி சபைப்பத்திரம் வழங்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. பொதுவாக வங்கி அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகளை பின்பற்றுகின்றது.	இணங்கியது. வங்கி அமரசேகர கம்பனி மற்றும் ஏனர்ஸ்ட் யங் நிறுவனத்துடன் ஒப்பமிடப்பட்ட ஆலோசனைக் கடிதங்கள் பார்வையிடப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.xii	பிணக்குகள் தொடர்பான நிலைமைகள் அல்லது பிணக்குகள் ஏற்படுவதற்கான தோற்றப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் மற்றும் அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்குமான ஒழுங்கு முறைமை ஒன்று பிரயோகத்தில் உள்ளமை செவ்வை பார்க்கப்பட்டுள்ளது.	இணங்கியது			1975ஆம் ஆண்டின் 13 ஆம் இல. அரச ஈட்டு முதலீட்டு வங்கி சட்டத்தின் 28ஆம் பிரிவுக்கு அமைவாக, தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொள்கை சபையினால் 26.08.2016ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சபைப் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபைக் குறிப்பு இலக்கம் 16.08.95.02)	இணங்கியது தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான கொள்கை சபையினால் 26.08.2016ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சபைப் பத்திர இலக்கம் 16/08/35 மற்றும் சபைக் குறிப்பு இலக்கம் 16.08.95.02)
	பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் வாக்களிப்புக்கு விடப்படுகின்ற விடயம் தொடர்பில் அவர் / அவள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது அவ் விடயம் தொடர்பான முக்கியமான ஆர்வம் இருக்கின்ற பட்சத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் மிக முக்கியமாகும்.	இணங்கியது			2020ஆம் ஆண்டுக்கு அவ்வாறானதொரு நிலமை ஏற்படவில்லை.	இணங்கியது 2020ஆம் ஆண்டுக்கு அவ்வாறானதொரு நிலமை ஏற்படவில்லை.
	குறிப்பிட்ட கூட்டத்தின் கூட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கூட்ட நடப்பெண் தொடர்பில் அவரின் / அவளின் பெயர் கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்று செவ்வை பார்க்கப்பட்டது.			பொருத்த மற்றது	2020ஆம் ஆண்டுக்கு அவ்வாறானதொரு நிலமை ஏற்படவில்லை மற்றும் அதனால் இந்தப் பிரிவு பொருத்தமற்றது.	பொருத்த மற்றது
3.1.xiii.	வங்கியின் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான தீர்மானங்கள் தொடர்பாக வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேடவிடயங்களின் முறைசார் நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான அதிகாரம் தொடர்பாக வங்கி உறுதியாக இருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			சபை முறைசார் அட்டவணை விடயங்களைக் கொண்டுள்ளது, சபை அட்டவணைப்படுத்தப்பட்ட விடயங்களை விசேடமாக பராமரிப்பதுடன், இது வங்கியின் பணிப்புரை மற்றும் கட்டுப்பாட்டினை அடையாளம் காணும் வகையில் தீர்மானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இது சபைப் பத்திர இலக்கம் 16.10.40 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.10.122.02 இல் பார்வையிடப்பட்டது	இணங்கியது இவை 24 ஒக்டோபர் 2016ஆம் திகதியிடப்பட்ட சபைப் பத்திர இலக்கம் 16.10.40 மற்றும் சபை குறிப்பு இலக்கம் 16.10.122.02இன் ஊடாக சபைக்கான வழமையான அட்டவணைப்படுத்தும் விடயங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன.
3.1.xiv	வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அல்லது அது போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கின்ற நிலைமையில் அல்லது சொத்து இழப்புக்கள் ஏற்படுவதற்கான அண்மித்த நிலையில் இருக்கின்ற நிலைமையில் அல்லது வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன்காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்துவதற்கு அண்மித்த நிலையில் இருக்கின்ற போது அல்லது அவ்வாறான நிலைமைகளின் போது ஏதாவது தீர்மானம் அல்லது செயற்பாட்டினை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமை தொடர்பாக வங்கி மேற்பார்வை பணிப்பாளர்கள் முன்னோடியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.			பொருத்த மற்றது	அவ்வாறான நிகழ்வுகள் ஏதும் நிகழவில்லை.	பொருத்த மற்றது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.1.xv	நிதிச் சபை வேண்டியுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபையினால் வங்கி உரிய காலத்தில் மூலதனப்படுத்தி உள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			இணங்கியது இலங்கை மத்திய வங்கியின், குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன தேவைப்பாடான ரூபா 5 பில்லியன் வங்கியினால் 01.01.2018ஆம் ஆண்டு (இ.ம.வங்கியின் 12/07/2016ஆம் திகதி கடிதத்திற்கு அமைவாக) பூர்த்திசெய்யப்பட்டது. 31.12.2020 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்ட பணிப்புரையின் படி இத்தொகை ரூபா 7.5 பில்லியனாக மேம்படுத்தப்பட்டதுடன், 27 மார்ச் 2020ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கி ஆளுனரின் கடிதத்தின்படி 31.12.2022 வரை மேலும் இது நீடிக்கப்பட்டது. அதற்கமைவாக, 1975ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வியாபாரத்தை விரிவுபடுத்துவதன் ஊடாக நிறுவனத்தின் உள்ளே உருவாக்கப்பட்ட நிதியின் ஊடாக வங்கி ரூபா 7.5 பில்லியனுடன் இணங்குவதற்கு எதிர்பார்க்கின்றது. (குறிப்பு 38.5.1)	இணங்கியது நிதியியல் கூற்றின் 38.5.1ஆம் இலக்க குறிப்பினை உசாவவும்.
3.1.xvi	இந்த வழிகாட்டல்களின் 3 ஆம் வழிகாட்டலுக்கு இணைவாக வங்கியின் வருடாந்த அறிக்கை, வருடாந்த கூட்டாண்மை அறிக்கை போன்றவற்றை பணிப்பாளர் சபை வெளியிட்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			வருடாந்த கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையை வங்கியின் வருடாந்த அறிக்கையின் பணிப்புரைகளின் பணிப்புரை 3இற்கு அமைவாக சபை வெளியிட்டிருந்தது.	இணங்கியது
3.1.xvii	வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளர்களும் கடைப்பிடிக்க வேண்டிய சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றின் பின்பற்றல் மற்றும் அவ்வாறான மதிப்பீடுகளின் தரவுகள் பராமரிக்கப்படுகின்றமை பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			2020ஆம் ஆண்டுக்கு பணிப்பாளர் சபையினால் சுய மதிப்பீட்டு/மதிப்பீட்டு நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கியது 2020ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபையினரது சுய மதிப்பீட்டு படிவங்கள் பெறப்பட்டுள்ளமை பார்வையிடப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.2 பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்						
3.2.i	பணிப்பாளர் சபையானது 7 பேரைவிடக் குறையாததும் 13 பேரை விஞ்சாததுமான பணிப்பாளர்களைக் கொண்டுள்ளமை பரீட்சிக்கப்பட்டுள்ளது.			பொருத்த மற்றது	பணிப்பாளர் சபை ஐந்து பொருத்தமான நபர்களை உள்ளடக்கியுள்ளதுடன், பொருத்தமான நபர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.	பொருத்தமற்றது. 2020 டிசம்பர் 31 அன்று பணிப்பாளர் சபை 05 அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.
3.2.ii.அ	பிரதான நிறைவேற்று அலுவலர் தரப் பதவியொன்றை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களை விஞ்சுதல் கூடாது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை.	இணங்கியது எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை என்பது பார்வையிடப்பட்டது.
3.2.ii.ஆ	ஏதேனுமொரு பணிப்பாளர் 9 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருப்பாராயின், அவ்விடயம் தொடர்பில் நிலை மாற்று ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கவும்.			பொருத்த மற்றது	எந்த ஒரு பணிப்பாளரும் 9 ஆண்டுகளுக்கும் அதிகமாக பணிப்பாளர் பதவியில் இருக்கவில்லை.	பொருத்தமற்றது
3.2.iii.	பிரதான நிறைவேற்று அலுவலர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட சிரேட்ட நிறைவேற்றுத்தர அலுவலர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்க்கப்பட்டுள்ளது			பொருத்த மற்றது	1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அனைவரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களாவர்.	பொருத்தமற்றது
3.2.iv	குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் அல்லது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கினர் எது உயர்வானதோ அதனை சபை கொண்டிருப்பதை சரிபார்த்தது. நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் சுதந்திரமான அலுவலர்களாக கருதப்படுவார் களாயின், அவர் / அவள்:	இணங்கியது			1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அனைவரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களாவர்	இணங்கியது 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் அனைவரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களாவர்.
3.2.iv.அ	வங்கியின் 1 சதவிதத்திற்கு அதிகமான பங்கு முதலை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வைத்திருத்தல்			பொருத்த மற்றது	அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடைய வங்கியாக இருக்கின்றதால், வங்கியின் பணிப்பாளர்கள் எவரும் வங்கியின் குறித்தொதுக்கப்பட்ட பங்குடமையைபிரதிநிதித்துவப் படுத்தவில்லை.	பொருத்த மற்றது
3.2.iv.ஆ	3 (7) ஆம் அறிவுறுத்தலில் விளங்கப்படுத்திய பிரகாரம் வங்கியின் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில், நியமனம் பெற்றதன் பின்னர் தொடர்கின்ற இரண்டு வருட காலப் பகுதியின் போது அல்லது தற்பொழுது வங்கியின் ஒழுங்கு முறையான மூலதனத்தின் 10 சதவீதத்தினை விஞ்சுகின்ற பிரகாரம், ஒரு தொகை முதலை வைத்திருத்தல்.			பொருத்த மற்றது	2020ஆம் ஆண்டு அறிக்கையின் நிதிக்கூற்றின் 32ஆம் குறிப்புக்கு அமைவாக இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் நிகழவில்லை. அத்துடன் அவ்வறான கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை அல்லது அடையாளம் காணப்படவில்லை.	பொருத்த மற்றது
3.2.iv.இ	பணிப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியான இரண்டு வருட காலத்தில் வங்கியின் ஊழியராக இருந்திருத்தல்.			பொருத்த மற்றது	வங்கியில் பணிபுரியும் அவ்வாறான நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளர்கள் இல்லை.	பொருத்த மற்றது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.2.iv.ஈ	பணிப்பாளராக, பி.நி.அ, பிரதான முகாமை அங்கத்தவராக, இவ் வங்கியின் அல்லது வேறு வங்கி யொன்றின் பிரதான பங்குதாரருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல். (இவ் விடயம் தொடர்பில், நெருங்கிய தொடர்பு என்பதன் பொருள், துணை அல்லாத நிதி ரீதியாக தங்கியிருக்கின்ற பிள்ளை என்று பொருள்படும்)			பொருத்த மற்றது	வங்கிச் சட்டத்தின் 42ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்களினாலும் பிரதான முகாமைத்துவ நபர்களினாலும் வெளிப்படுத்தப்பட்ட சுய பிரகடனத்தில் எந்தவொரு நிறைவேற்றுத் தரமில்லாத பணிப்பாளரும் அவ்வாறான விடயத்தைக் கொண்டிருக்கவில்லை	பொருத்த மற்றது
3.2.iv.உ	வங்கியின் குறிப்பிட்டதொரு பங்குதாரரை பிரதிநிதித்துவப் படுத்தல்.			பொருத்த மற்றது	இந்த வங்கி அரசாங்கத்திற்கு முழுமையான உரித்துடையதாகும்.	பொருத்த மற்றது
3.2.iv.ஊ	கம்பனி ஒன்றின் அல்லது வியாபார நிறுவனம் ஒன்றின் ஊழியர் அல்லது ஒரு பணிப்பாளர் அல்லது முக்கியமான பங்குதாரராக இருத்தல்					
3.2.iv.ஊ.I	வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சுகின்ற அளவானதும், 3 (7) ஆம் அறிவுறுத்தலில் வரையறுத்த பிரகாரம் வங்கியுடன் தற்போது ஒரு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருத்தல். அல்லது			பொருத்த மற்றது	2020 ஆம் ஆண்டில் நேரடியாக அல்லது முறைமுகமாக பணிப்பாளர்கள் எவரும் அத்தகையை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவில்லை	பொருத்தமற்றது 2020 ஆம் ஆண்டில் நேரடியாக அல்லது முறைமுகமாக பணிப்பாளர்கள் எவரும் அத்தகையை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவில்லை.
3.2.iv.ஊ.II	வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுக்கு மத்தியில் எவரேனும் ஒருவர் அதன் ஊழியராக அல்லது பணிப்பாளராக இருத்தல் அல்லது அங்கு பங்குதாரராக நியமனம் பெறல், அல்லது			பொருத்த மற்றது	அவ்வாறன நிகழ்வுகள் எதுவும் எழவில்லை.	பொருத்த மற்றது
3.2.iv.f.III	இங்கு உள்ள அறிவுறுத்தல்களில் 3 (7) அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம், வங்கியுடன் அதன் செயற்பாட்டு மூலதனத்தின் 10 சதவீதத்தை விஞ்சும் வகையிலான கொடுக்கல் வாங்கல் ஒனறை வங்கியின் வேறு யாரேனும் ஒருவர் பணிப்பாளர் ஊடாக நடாத்துதல்.			பொருத்த மற்றது	அவ்வாறன நிகழ்வுகள் எதுவும் எழவில்லை.	பொருத்த மற்றது
3.2.v	சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், சுதந்திரமான பணிப்பாளர் ஒருவர் தொடர்பாக பிரயோகிக்கத் தக்க பிரமானங்களை அடையும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதா என்று பரீட்சிக்கப்பட்டது.			பொருத்த மற்றது	இவ்வருடத்தினுள் மாற்றீடாக பணிப்பாளர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை.	பொருத்த மற்றது
3.2.vi	வங்கி சுதந்திரமான பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக ஒரு முறைமையினைக் கொண்டிருக்கின்றதா என்று பரீட்சித்துப் பார்த்தல்.	இணங்கியது			1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.	இணங்கியது 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.2.vii	வங்கியின் கூட்ட நடப்பெண் 50% இனை விட அதிகமான பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றதா என்றும் அவ் நடப்பெண்ணில் 50% இலும் அதிகமான நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.	இணங்கியது அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.
3.2.viii.	வருடாந்த கூட்டாண்மை ஆட்சி அறிக்கையில் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்று தரம் இல்லாத பணிப்பாளர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளர்களின் வகையடிப்படையில் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளிப்படுத்துகின்றதா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியது			தலைவர் மற்றும் பணிப்பாளர்களின் பெயர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளியிட்டுள்ளது. அது வருடாந்த அறிக்கையில் நிறைவேற்றுத்தரமுள்ள பணிப்பாளர்கள், நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் என வகைப்படுத்தி வெளியிட்டுள்ளது	இணங்கியது 2020ஆம் ஆண்டுக்கான முன்வரைவு வருடாந்த அறிக்கையை உசாவவும்.
3.2.ix	பணிப்பாளர் சபைக்கான புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்கின்ற ஒழுங்கு விதிகள் செவ்வை பார்க்கப்பட்டுள்ளன.	இணங்கியது			1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.	இணங்கியது 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.
3.2.x	பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நியமிக்கப்படுவர் என்ற நிபந்தனையின் பிரகாரம் சகல பணிப்பாளர்களும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்சிக்கப்பட்டது.			பொருத்த மற்றது	1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.	பொருத்த மற்றது 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டனர்.
3.2.xi	பணிப்பாளர்கள் தங்களது அலுவலகம் அல்லது சபையிலிருந்து பதவி விலகியுள்ளனரா அல்லது நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரீட்சிக்கப்பட்டுள்ளது. சபை,					
3.2.xi.அ	வங்கியுடனான பணிப்பாளர்களின் உடன் பாடின்மை போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக வரையறுக்கப்படாது, பணிப்பாளர்களின் பதவி விலகல் அல்லது நீக்கம் மற்றும் அவ்வாறான பதவி விலகல் அல்லது நீக்கத்திற்கான காரணங்கள் உள்ளடங்கலாக அவ் விடயங்கள் அறிவிக்கப்படல். மற்றும்,	இணங்கியது			1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் உரிய அமைச்சர்களினால் நீக்கப்படுவார்கள்.	இணங்கியது 1975 இன் 13 ஆம் இல அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக பணிப்பாளர்கள் உரிய அமைச்சர்களினால் நீக்கப்படுவார்கள்.
3.2.xi.ஆ	பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் இருப்பின் அல்லது இல்லாது இருப்பினும், அது தொடர்பில் உறுதிப்படுத்திக் கூற்றொன்றை வெளியிடல்.			பொருத்த மற்றது		பொருத்த மற்றது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.7.v.அ	கணிசமான நலனை கொண்டுள்ள நபரொருவருக்கு அல்லது நபரொருவரின் நெருங்கிய உறவினர் அல்லது சம்பந்தப்பட்ட நபரொருவருக்காக வங்கியினால் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதாவது கடனுதவியொன்றுக்கு வங்கி செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்பதைப் பரீட்சித்து அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.			பொருத்த மற்றது	அந்த நபரிடம் உள்ளது கணிசமான ஆர்வம் உள்ளதோ அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.	பொருத்தமற்றது அவ்வாறான கடனுதவி ஏதும் வழங்கப்படவில்லை.
3.7.v.ஆ	மேலே 3(7)(எ) (அ) பணிப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அக்காலத்தில் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது பரீட்சிக்கப்பட்டு அத்தகைய பணிப்பாளரின் நியமனத்திகதியிலிருந்து பதினெட்டு மாத காலங்கள் காலாவதித் திகதியில் அல்லது கடனுதவி வசதி வழங்கப்பட்ட காலத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எது முன்னையதோ அக்காலப்பிரிவினுள் ஏதாவது கடனுதவி வசதி கணக்கின் மீதான ஏதாவது செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியுடன் மீட்பதற்கு நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கின்றது.			பொருத்த மற்றது	அவ்வாறான கடனுதவி ஏதும் வழங்கப்படவில்லை.	பொருத்தமற்றது

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.7.v.இ	பணிப்பாளர் பதவியில் விலகிச்சென்றுவிட்டார் என கருதப்படக்கூடிய மேற்குறிப்பிட்ட உப பணிப்புரைகளுடன் இயைந்துசெல்லத் தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரையும் அடையாளம் காண்பதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டிருக்கின்றதோடு அந்த விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளது.			பொருத்தமற்றது	ஏதும் நிகழவில்லை	பொருத்தமற்றது
3.7.v.ஈ	வங்கியில் ஊழியர் ஒருவராகக் கடனுதவி வசதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த எந்தவொரு பணிப்பாளருக்கும் பிரயோகிக்கப்பட முடியாத 3(7) (எ) (அ) உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிக்கப்பட்டதோடு அத்தகைய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்ககூடிய திட்ட மொன்றின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டது.			பொருத்தமற்றது	ஏதும் நிகழவில்லை	பொருத்தமற்றது
3.7.vi	ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்க கூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான வட்டியை கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய தரப்புக்கு அல்லது மேலே 3(7) (எ) இன் பணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் நிதிச் சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான பாதுகாப்பினால் பாதுகாக்கப்பட்டவருக்கு கட்டணங்கள் அல்லது தரகுகள் விலக்களிப் பெற்றவர் தொடர்பிலான ஏதாவது கடனுதவி அல்லது “மிகவும் சார்புடைய நடவடிக்கை” ஐ வங்கி வழங்குகின்ற போது அடையாளங் காண்பதற்கான செயன்முறையொன்று இருப்பது பரீட்சிக்கப்பட்டது	இணங்கியது			ஏதும் நிகழவில்லை	வங்கி ஏதும் கடனுதவியை அல்லது தொடர்புடைய தரப்பினருக்கான கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது தகவல் தொழில்நுட்பப் பிரிவிடம் இருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலில் அவதானிக்கப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்கு கின்றது	இணங்க வில்லை	பொருந்த வில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.7.vii.	மேலே பணிப்புரை 3(7)(எ) மற்றும் 3(7) (Vi) என்பவற்றின் கீழ் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு கடனுதவி வசதிக்காக நிதிச் சபையின் முன்அங்கீகாரத்தை பெறுவதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டதா நிதிச் சபையின் முன்அங்கீகாரமின்றி அத்தகைய கடனுதவி வசதியின் ஏதாவது ஒரு பகுதியோ அதன் பேரிலான ஏதாவது வட்டி அனுப்பப்பட்டிருக்கின்றதா அத்துடன் அத்தகைய அங்கீகாரமின்றி எந்தவொரு பண அனுப்புகையும் செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகும்.			பொருத்த மற்றது	ஏதும் நிகழவில்லை	பொருத்தமற்றது
3.8.	**வெளிப்படுத்தல்கள்**					
3.8.i.அ	சபை வெளிப்படுத்தியவை சரிபார்க்கப்பட்டது: கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை அதிகாரங்கள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு தராதரங்களினால் குறித்துரைக்கப்பட்ட அமைப்புகளுடன் இயைந்த வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதோடு அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.	இணங்கியது			வருடாந்த கணக்காய்வுக் கூற்றுக்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களின் தேவைப்பாட்டுக்கு அமைவாகவும் உரிய கணக்கீட்டு நியமங்களுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கூற்றுக்கள் கீழ்வரும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன. 1. டெயிலி நியூஸ் 2. லங்காதீப 3. தினக்குரல் 4. டெயிலி மிரர்	இணங்கியது நிதித் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பிரதி பார்வையிடப்பட்டது.
3.8.i.ஆ	காலாண்டு நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.	இணங்கியது			இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, காலாண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது அவதானிக்கப்பட்டது.	இணங்கியது நிதித் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பிரதி பார்வையிடப்பட்டது.
3.8.ii	வருடாந்த அறிக்கையில் சபை பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்களை மேற் கொண்டிருப்பது பரீட்சிக்கப்பட்டது:					
3.8. ii.அ.	கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்களுடன் தொடர்புடைய கூற்றானது குறிப்பான வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட பொருத்தமான கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்த வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.	இணங்கியது			நிதியில் அறிக்கையில் பணிப்பாளரின் பெறுப்புகளில் இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கியது 2020ஆம் ஆண்டு நிதியியல் கூற்றில் உள்ளடங்கிய கூட்டிணைந்த தகவல்களின் கீழ் உள்ள 1.3 இல் உள்ள விடயம் மூலம் சரிபார்க்கப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.8. ii.ஆ	நம்பகமான நிதிசார் அறிக்கையிடல் தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற நிதிசார் அறிகையிடல் முறைமை வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான சபையின் அறிக்கையை உறுதிப்படுத்துவதோடு வெளியக நோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது	இணங்கியது			வருடாந்த அறிக்கையில் நிதியில் அறிக்கையிடல் முறைமைகளின் வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீதான பணிப்பாளரின் கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணங்கியது 2020ஆம் ஆண்டு நிதியியல் கூற்றில் உள்ளடங்கிய நிதியியல் அறிக்கையில் மேலான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று எனப்படும் அறிக்கை மூலம் சரிபார்க்கப்பட்டது.
3.8. ii.இ	மேலே 3(8)(ii)(b) பணிப்புரையோடு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதி மீதான வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை சபை பரீட்சித்தது	இணங்கியது			வருடாந்த அறிக்கையில் நிதியில் அறிக்கையிடல் முறைமைகளின் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணங்கியது 2020 ஆம் ஆண்டு வரைவு வருடாந்த அறிக்கையில் பார்வையிடப்பட்டது.
3.8. ii.ஈ	பெயர்கள், தகைமைகள், வயது வழிகாட்டல் பொருத்தப்பாடு மற்றும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற அனுபவம் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணம்/ஊதியம் உள்ளிட்ட பணிப்பாளர்களுடன் தொடர்புடைய விபரங்கள	இணங்கியது			வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் விபரத்திரட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் ஊதியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.	இணங்கியது 2020 ஆம் ஆண்டு வரைவு வருடாந்த அறிக்கையில் பார்வையிடப்பட்டது.
3.8. ii.உ	தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3(7) (iii) இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த நிகர கடனுதவி. தொடர்புடைய ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட நிகரக் கடனுதவி வங்கியின் ஒழுங்குறுத்துகை மூலதனத்தின் வீதமொன்றாக வெளிப்படுத்தப்படும்.	இணங்கியது			சார்புடைய தரப்பினருக்கான கொடுக்கல் வாங்கல்கள் ஏதுமில்லை.	இணங்கியது தகவல் திணைக்களம் மற்றும் பணிப்பாளரின் செயலாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.
3.8. ii.ஊ	செலுத்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்பட்ட கடனுதவி வங்கியிலுள்ள முதலீடுகள் போன்ற சபை வகுதியினால் குறிப்பிடப்பட்ட வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் அதனால் வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பெறுமதி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி	இணங்கியது			வருடாந்த அறிக்கையில் பிரதான முகாமைத்துவ நபர்களின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.	இணங்கியது 2020 ஆம் ஆண்டு வரைவு வருடாந்த அறிக்கையில் பார்வையிடப்பட்டது.

கூட்டிணைந்த ஆளுகை தொடர்ச்சி

தொடர். இல.	விபரங்கள்	இணங்குகின்றது	இணங்கவில்லை	பொருந்தவில்லை	குறிப்பீடு	கணக்காய்வு அவதானிப்புகள்
3.8. ii.எ	கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் இயைந்ததாக சபை வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை பெற்றிருந்தமை பரீட்சிக்கப்பட்டது	இணங்கியது			வருடாந்த அறிக்கையில் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணங்கல் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணங்கியது 2020 வருடாந்த அறிக்கையில் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணங்கல் மீதான கணக்காய்வாளரின் அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.
3.8. ii.ஏ	சாதுரியமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடன் இயைந்து செல்லக்கூடிய விபரங்களின் அறிக்கையொன்றை தயாரித்திருப்பதோடு இயைந்து செல்லாத ஏதாவது விடயத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	இணங்கியது			ஆண்டறிக்கையில் பொருண்மையான இணங்குவிப்பின்மை எவற்றையும் சரிப்படுத்துவதற்கு, நிபந்தனைகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் அணுகு முறையும் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளும் குறித்த இணங்குவிப்பு விபரங்களும், புறம்பான அறிக்கையில் தரப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிப்பாளரின் அறிக்கையானது பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் கூற்றை உள்ளடக்கியுள்ளது.	இணங்கியது வரைவு வருடாந்த அறிக்கையில் எந்தவொரு பொருண்மையான இணக்கமின்மைக்கான தனியொரு அறிக்கையும் காணப்படவில்லை
3.8. ii.ஐ	வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை போன்ற ஒழுங்கமைப்பு கூற்றுகள் என்பனவற்றுடன் மேற்பார்வை அக்கறைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இருப்பின், அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் நாணயச் சபையின் பணிப்புரைகளுடன் சேர்த்து, அத்தகைய அக்கறைகள் குறித்து வங்கியினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.	இணங்கியது			2020ஆம் ஆண்டு இணங்காமை தொடர்பாக முனைவுறுத்தி எவ்வித அறிக்கையையும் பணிப்பாளர், வங்கி மேற்பார்வை அனுப்பவில்லை.	இணங்கியது வங்கி மேற்பார்வையின் பணிப்பாளரினால் அவ்வாறான எந்த அறிக்கையும் விநியோகிக்கப்படவில்லை.



பழைமையான அரச வங்கி 1931 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை	65
சபையின் பரிந்துரைக் குழுவின் அறிக்கை	67
சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை	68
சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை	69

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

தலைவரின் கண்ணோட்டம் 2020

அனுமதியளிக்கப்பட்ட வீசேட வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை மீது 2007ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிப்புரையின் பிரிவு 3 (6)(ii)ற்கு இணங்குமாறு சபையின் கணக்காய்வு குழுவானது மூன்று நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளதுடன், பணிப்பாளர் சபையானது கணக்காய்வுப் பட்டயத்தையும் அதனுடன் இணைந்த சபைத் தீர்மானங்களையும் அங்கீகரித்துள்ளது.

வங்கியின் நிறுவன ஆளுமை பிரயோகங்கள் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வது சபை கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீனமான நோக்கத்துடன் மீளாய்வு செய்யப்படுவதை உறுதிப்படுத்தப்படுவதற்காக, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட TOR யை பின்பற்றி உள்ளக மற்றும் வெளியக காரணிகள் இரண்டினாலும் வடிவமைக்கப்பட்ட அதன் நிகழ்ச்சி நிரலுடனும், மத்திய வங்கியின் பணிப்புரையில் தரப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இயைந்ததாகவும் சபையின் கணக்காய்வு குழு மற்றுமொரு போட்டி ஆண்டை பார்வையிட்டது.

குழுவின் அமைப்பு

2020ஆம் ஆண்டு கீழ்வரும் அங்கத்தவர்களை சபையின் கணக்காய்வுக் குழு கொண்டிருந்ததுடன் ஒரு நிறைவேற்றுத் தரமல்லாத மற்றும் பணிப்பாளரும் உள்ளடங்கியிருந்தார்

வருகை

	அங்கத்தவர்	BAC யின் நிலை	சபையின் அங்கத்துவம்		2020 கூட்டங்களுக்கான வருகை எண்ணிக்கை
			இருந்து	வரை	
1	திருமதி.டபில்யூ.சீ.என்.குரே	தலைவர் (NED)	2020 ஏப்பிரல்	இத்திகதி வரை	06
2	திரு.எச்.சீ.திலிப் லால் சில்வா	அங்கத்தவர் (NED)	2020 ஏப்பிரல்	இத்திகதி வரை	06
3	திரு.எஸ்.கே.ஏ.கலப்பதி	அங்கத்தவர் (NED)	2020 ஏப்பிரல்	இத்திகதி வரை	05

குழுவின் அங்கத்தினர்கள் அனைவரும் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் என்பதுடன் அவர்கள் கல்வித் தகைமையுள்ள நிதியியல் முகாமைத்துவமும் பெற்றவர்கள். சட்டம், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் நிதி துறைகளில் ஒவ்வொருவரும் அனுபவம் வாய்ந்தவர்கள். இந்த ஆண்டறிக்கையில் அங்கத்தவர்களின் விபரக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. சபையின் கணக்காய்வு குழுவின் பட்டயத்திற்கு அமைவாக சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வு குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். அழைப்பின் பேரில் கணக்காய்வாளர் நாயகத்தின் (வங்கியின் வெளியக கணக்காய்வாளர்) பிரதிநிதி, பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய சிரேஸ்ட அலுவலர்கள் வழமையாக கூட்டங்களில் கலந்துகொள்வர்.

உள்ளக கணக்காய்வு மற்றும் சபையின் கணக்காய்வுப் பட்டயம்

உள்ளக கணக்காய்வு மற்றும் சபை கணக்காய்வு ஆகியவை திறமையாக மற்றும் சுயாதீனமாக தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு பட்டயம் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பட்டயம், உள்ளக் கணக்காய்வின் பரப்பெல்லை, செயற்பாடுகள், பொறுப்புகள், அதிகாரங்கள், அறிக்கையிடல் நடைமுறைகள், சுயாதீனத்தன்மை மற்றும் நோக்கம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. சபையின் கணக்காய்வு குழுப் பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள நியதிகளினுள் குழு செயற்படுகின்றது. பட்டயத்தின் நியதிகளின்படி பணிப்பாளர் சபையின் கீழ்வரும் பொறுப்புகளை பூர்த்திசெய்வதற்கு, உதவுதல் குழுவின் பரப்பெல்லையாக அமைந்துள்ளது.

(அ) வங்கியின் நிதியியல் கூற்றுகளின் ஒருங்கிணைப்பு

(ஆ) வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் வினைத்திறன்

(இ) சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் வங்கியின் இணக்கம்

(ஈ) வங்கியின் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை

(உ) வங்கியின் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளின் செயலாற்றுகை

அறிக்கையிடல்

குழுவானது கூட்டங்களின் கூட்டறிக்கையுடன் சேர்த்து அதன் செயற்பாடுகள் பற்றி நேரடியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கை அளிக்கிறது. வாரிய கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வு, வெளிப்புற கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் குழுவிற்கு இடையிலான திறந்த தொடர்பிற்கான வழியை வழங்குகிறது. குழுவின் கண்ணோட்டத்தின் படி குழுவின் குறிப்பு விதிமுறைகள் (TOR) யாவும் அனைத்து பொருள் அம்சங்களுக்கும் இணங்கியுள்ளது.

குழுவின் இலக்கு மற்றும் பொறுப்பு

குழுவின் இலக்கு மற்றும் பொறுப்பு வங்கியின் நிதியியல், நிர்வாக மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் பணிப்பாளர் சபைக்கு உதவுவது சபையின் கணக்காய்வு குழுவின் நோக்கமாகும். சபையின் கணக்காய்வுக் குழுவின் நோக்கெல்லையில் உள்ளடங்குபவை.

- வங்கியின் நிதி அறிக்கையிடல் இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளுடன் நேர்மையாகவும் இணங்குவிப்பாகவும் செயற்படுவதை கண்காணிப்பது
- செயற்படுத்தல் மற்றும் நிதிசார்ந்த கட்டுப்பாட்டு முறைகள் உறுதியாக உள்ளதா என்பதை மீளாய்வு செய்வது.
- உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையையும், செயலாற்றல் மதிப்பீட்டையும் கண்காணிப்பது மற்றும் மீளாய்வு செய்வது

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை தொடர்ச்சி

- வங்கியினால் சந்திக்கப்படும், இடர்களை தவிர்ப்பதற்கு/ குறைப்பதற்கு, உள்ள உள்ளக ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமையை மீளாய்வு செய்வது.
- அனைத்து ஒழுங்கமைப்பு விதிகள் தொடர்பாகவும் இணங்குவிப்பாக செயற்படுவதையும் கண்காணிப்பதையும் மீளாய்வு செய்வது.
- வெளியக கணக்காய்வாளர்களுடன், அவர்களின் கணக்காய்வு நோக்கெல்லை மற்றும் அறிக்கைகள் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்துவது

கூட்டங்கள்

2020 ஆண்டின் போது ஆறு (06) தடவைகள் குழு சந்திப்பினை மேற்கொண்டது. சபையின் கணக்காய்வுக் குழுவின் அழைப்பின் பேரில் அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பாக அரசாங்க கணக்காய்வின் அத்தியட்சகர் பிரதிநிதியாக கலந்துகொண்டார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு சபையின் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடுகள்

கீழ்வரும் செயற்பாடுகளில் குழு பங்குபற்றியது

01. சபையின் கணக்காய்வுக் குழுவினால் 2020ஆம் ஆண்டுக்கு அமுல்படுத்தப்பட்ட இடர் அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு காலாண்டு திட்டத்தை மீளாய்வு செய்து அங்கீகரித்தது.

02. 2019ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணை களுக்கான பதிலளிப்பின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தது.

03. கிளைகளின் வரவு செலவு திட்ட இலக்குகள் எய்தப்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தை காலாண்டு அடிப்படையில் குழு மீளாய்வு செய்தது. கிளைகளினால் பேணப்படும் உத்தேச இலக்குகள் மற்றும் தரமான புத்தகங்கள் மற்றும் கிளைகளினால் மேற்கொள்ளப்படும் பதிவுகள் என்பவற்றில் குழு விசேட கவனம் செலுத்தியது

04. 2019 மார்கழி 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான மற்றும் 2020 31 மார்ச், 30 ஜூன், 30 செப்டெம்பர் முடிவடைந்த காலாண்டுக்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வு செய்ததுடன் அதனை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு விதப்புரை வழங்கியது.

05. அனைத்து ஒழுங்குவிதிமுறைத் தேவைகளுடனும் வங்கியின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் ஒழுகுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு காலாண்டு மீளாய்வுகள் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

06. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகைகளுக்கான காலாண்டு மீளாய்வுகளை மேற்கொண்டது.

07. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிரேஸ்ட ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டது.

08. வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கு முகாமைத்துவத்தின் பதில்களை குழு கண்காணித்துள்ளதுடன் மீளாய்வும் செய்துள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றல்களின் திறமையை குழு மீளாய்வு செய்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒத்ததாக, உள்ளக கணக்காய்வு பணிகளின் போதுமை இருப்பதையும் கண்காணித்துள்ளது

வெளியக கணக்காய்வு அறிக்கைகள்

சட்டத்தின்படி, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார், வெளிவாரி கணக்காய்வாளர்கள் குழு கூட்டங்களின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர்களின் கண்டுபிடிப்புகளை விவாதிக்க அழைக்கப்பட்டனர். கணக்காய்வு நோக்கத்திற்காக, வெளிவாரி கணக்காய்வாளருக்கு அவசியமாகும் அனைத்துத் தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதை இக்குழு உறுதிசெய்தது. இறுதியான கணக்காய்வு அறிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ள வெளியக கணக்காய்வு அவதானிப்புகளை குழு மீளாய்வு செய்துள்ளதுடன், வெளியக கணக்காய்வாளர்களின் அவதானிப்புகளுக்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள சரிப்படுத்தல் நடவடிக்கைகளின் போதுமையையும் மீளாய்வு செய்துள்ளது

உள்ளக கட்டுப்பாடுகளின் முறைமை

உள்ளக கட்டுப்பாடுகளின் அமைப்பின் கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் முறையுடன் ஒத்துப் போகத்தக்கதாக வங்கியின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை திறமையானதாக இருப்பதை, பணிப்பாளர் சபையின் சார்பாக, குழு மீளாய்வு செய்தது.



டபில்யு.சீ.என்.குரே
தலைவர் - சபையின் கணக்காய்வுக் குழு /NED

சபையின் பரிந்துரைக் குழுவின் அறிக்கை

குழுவின் அமைப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்றுப் பணிப்பாளரையும் கொண்டு நான்கு பணிப்பாளர்களை உள்ளடக்கி சபையின் பரிந்துரைக் குழு அமைந்திருக்கும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் சபையின் பரிநதுரைக் குழு கீழ்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கி அமைந்திருந்தது.

2020 ஆம் ஆண்டின் அங்கத்தவர்கள்

டாக்டர். கே.டபிள்யூ.ஏ.யு. காரியவசம் – தலைவர்
திரு. எச்.சி.டி.எல். சில்வா – அங்கத்தவர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி – அங்கத்தவர்
திரு. ஏ.ஜே.பீ.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார – மாற்று அங்கத்தவர்

டாக்டர். பிரியத் பி விக்கரம சபையின் பரிந்துரைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் டாக்டர் பிரியத் பி விக்கரமவின் பணிப்பார் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக டாக்டர உதயசிறி காரியவசம் 23.09.2020ஆம் திகதி நடைபெற்றக் கூட்டத்தில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

குழுவின் கூட்டங்கள்

குழுவானது வருடத்திற்கு இரு முறை கூடுதல் வேண்டும். கூட்டத்தின் தேவை எழும் பொழுது கூட்டத்தை கூட்டுவதற்கு முடியும். கூட்டம் நடத்த தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கையானது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் அவர்கள் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக கூட்டம் முழுவதிலும் இருக்க வேண்டும். குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தகவலுக்கும் அனுமதிக்குமாக பணிப்பாளர் தொடர்ச்சியாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. குழுவின் தலைவர் வழிகாட்டுதலின் பேரில் அழைப்பாளர்களாக பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தகவலுக்கும் அனுமதிக்குமாக பணிப்பாளர் தொடர்ச்சியாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. வங்கியைப் பொறுத்தவரை, 2020 ஆம் ஆண்டில் ஒரு குழு கூட்டம் நடைபெற்றது.

செயலாளர்

சபையின் செயலாளர் சபையின் பரிந்துரைக் குழுவின் செலாளராக செயற்படுகின்றார்.

குழுவின் பரப்பெல்லை

பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுக்க-நியமிக்க நடைமுறையை அமுல்படுத்தல், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவியுயர்வு செய்வதற்கு அவசியமான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய இயல்புகளைத் தீர்மானித்தல், உள்ளீர்ப்பு திட்டமிடல் மற்றும் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கியின் விவகாரங்கள் தொடர்பாக பொருத்தமான தொலைநோக்கு உள்ளதென்பதை உறுதிசெய்வதுடன், சந்தையில் வங்கி போட்டியிடுவதற்கு போதியளவு இயலளவைக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் நோக்குடன் பிரதான முகாமைத்துவ நபரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட பங்களிப்பை மீளாய்வு செய்தல்.



கலாநிதி. உதயசிறி காரியவசம்
குழுவின் தலைவர்

கூட்டத்திற்கு குழு அங்கத்தவர்களின் வருகை

பணிப்பாளரின் பெயர்	பரிந்துரைக் குழுவில் பதவி	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை
டாக்டர். கே.டபிள்யூ.ஏ.யு. காரியவசம்	தலைவர்	1	1
டாக்டர். பி.பி. விக்ரம	முன்னாள் தலைவர்	1	0
திரு. எச்.சி.டி.எல். சில்வா	அங்கத்தவர்	1	0
திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி	அங்கத்தவர்	1	1
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	மாற்று அங்கத்தவர்	1	1

சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை

2020ஆம் ஆண்டு சபையின் அமைப்பு மற்றும் கூட்டம் நடத்த தேவையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்று பணிப்பாளரையும் கொண்டு நான்கு பணிப்பாளர்களை உள்ளடக்கி சபையின் மனிதவள மற்றும் ஊதியங்கள் குழு அமைந்திருக்கும். கூட்டம் நடத்த தேவையான அங்கத்தவர்களின் எண்ணிக்கை இரண்டாகும்.

BHRRC 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கீழ்வரும் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கி அமைந்திருந்தது.

2020ஆம் ஆண்டின் அங்கத்தவர்கள்

டாக்டர். உதயசிறி காரியவசம்	- தலைவர்
திரு. ஏ.ஜே.பீ.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	- அங்கத்தவர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி	- அங்கத்தவர்
திருமதி. டபில்யூ.சீ.என். குரே	- மாற்று அங்கத்தவர்

டாக்டர். பிரியத் பி விக்கரம சபையின் பரிந்துரைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். எனினும் டாக்டர் பிரியத் பி விக்கரமவின் பணிப்பார் நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக டாக்டர உதயசிறி காரியவசம் 23.09.2020ஆம் திகதி நடைபெற்றக் கூட்டத்தில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

செயலாளர்

சபையின் செயலாளர் சபையின் மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் செலாளராக செயற்படுகின்றார்.

குழுவின் பரப்பெல்லை

குழு மனித வள கொள்கைகள், உபாயமார்க்கங்கள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்கும் வழிகாட்டி ஆலோசனைகளை வழங்குகின்றது, மனித வளங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கின்றதுடன் வங்கியின் பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதியில் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கின்றது. சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான இலக்குகளை நிர்ணயிக்கின்றதுடன், காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஊதியம், நன்மைகள் மற்றும் செயலாற்றுகை மீதான ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை மீளாய்வு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கான செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றது.

குழுவின் கூட்டங்கள்

மனிதவள மற்றம் ஊதியங்கள் குழுவானது காலாண்டுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும். கூட்டத்தின் தேவை எழும் பொழுது கூட்டத்தை கூட்டுவதற்கு முடியும். 2020ஆம் ஆண்டு இரண்டு குழுக்கூட்டங்கள் நடைபெற்றது.



கலாநிதி. உதயசிறி காரியவசம்
குழுவின் தலைவர்

கூட்டத்திற்கு குழு அங்கத்தவர்களின் வருகை

பணிப்பாளரின் பெயர்	மனிதவள மற்றும் ஊதியக் குழுவில் பதவி	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுவதற்கு தகைமையுடைய கூட்டங்களின் எண்ணிக்கை
டாக்டர். உதயசிறி காரியவசம்	தலைவர்	2	2
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	அங்கத்தவர்	2	2
திரு. எஸ்.கே.ஏ.கலப்பதி	அங்கத்தவர்	2	1
திருமதி. டபில்யூ.சீ.என்.குரே	மாற்று அங்கத்தவர்	2	0
டாக்டர். பிரியத். பி. விக்ரம	முன்னாள் தலைவர்	2	0

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அமைப்பு – 2020

2020ம் ஆண்டு சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு நான்கு நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர், தலைவர் - இடர் முகாமைத்துவம் மற்றும் குழுவுக்கான செயலாளர் என்பவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு அமைந்திருந்தது.

குழுவின் அமைப்பு (1ஆம்,2ஆம்,3ஆம் மற்றும் 4ஆம் கூட்டங்களின் போது) பின்வருமாறு அமைந்திருந்தது

திரு. எச்.சீ.டி.எல். சில்வா	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர் (குழுவுக்குத் தலைவர்)
திருமதி. டபில்யூ.சீ.என். குரே	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பதி	- நிறைவேற்றத்தரமல்லாத பணிப்பாளர்
திரு. டபில்யூ.எம். தயாசிங்க	- பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர்
திரு. எஸ்.ஏ.கே. சூரியராச்சி	- பிரதான முகாமையாளர் - இடர் முகாமைத்துவ அலகு
திருமதி. நிரோஷினி லொகுகே	- உதவிப் பொது முகாமையாளர் - சட்டம் / குழுவுக்கான செயலாளர்

BIRMC யின் பட்டயம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பு வங்கி நிறுவன ஆளுமை மீதான 2007 இன் 12 ஆம் இல. பணிப்புரையின் 3 (6) (ஏ) பிரிவிற்கு இணங்குவிப்பாக, பணிப்பாளர் சபையினால் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டது.

27.03.2012 இல் நடந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம் அங்கீகரிக்கப்பட்டு கிரமமாக செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் அதன் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் பொறுப்புகளை குறிப்பிடுகின்றது.

பட்டயத்திற்கு அமைவாக, சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு

1. வங்கியின் இடர் அவாவை மீளாய்வு செய்வது.

2. நிறுவப்பட்டுள்ள இடர் மட்டங்களுக்கு அமைவாக, வங்கியின் முக்கிய இடர் கொள்கைகளை மீளாய்வு செய்வதும் அங்கீகரிப்பதும், மற்றும் முக்கிய மட்டங்களுக்கு வங்கியின் இணக்கப்பாடு மீதான அறிக்கைகளைப் பெறுவதும்.

3. வங்கி முகங்கொடுக்க வேண்டியுள்ள இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாக முகாமைத்துவத்திடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது, மீளாய்வு செய்வது மற்றும் கருத்துகளை வழங்குவது என்பவற்றுடன், கடன். சந்தை, திரவத்தன்மை செயற்பாட்டு இடர்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வகைப்படுத்தலின் கீழான வெளிப்படுத்தல், குறிப்பிடத்தக்க அவதானிப்புகள் என்பவையும், அத்தகைய இடர் வகைப்படுத்தல்கள் தொடர்பாகவும். மற்றும் வங்கியின் வர்த்தகத்தை செயற்படுத்துவதற்கும் வங்கியினால் கைக்கொள்ளப்படும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் குறித்து புரிந்து கொள்வதற்கும் போதுமைத் தன்மையை அறிந்து கொள்ளுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு உதவுவது. அத்தகைய இடர் வெளிப்படுத்தல்களின் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பொருத்தமானதுமான வெளிப்படுத்தல் கண்காணிப்புகளுக்கு பயன்படுத்தப்பட்ட அளவீடுகளும் முகாமைத்துவக் கருத்துகளும் அவதானிக்கப்பட்டன.

4. வங்கியின், முக்கிய கொள்கைகளும் முகாமைத்துவ இடர் வெளிப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளும் அமைப்பு முறைகளும் உள்ளடங்களாக. வங்கியின் கடன், சந்தை, திரவத் தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்யும் சட்டகம் மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், இடர் முகாமைத்துவ முறைமைகளும் அழுத்த பரிசோதனைகளுக்கான அணுகுமுறைகளும் ஏற்படுத்தப்பட்டன.

5. அனைத்து இடர் வகைகளையும் ஆனால் கடன், சந்தை, பணப்புழக்கம், தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க/மதிப்பு இடர்கள் என்பவை உள்ளடங்களாக, அதற்கு மட்டும் வரையறுக்கப்படாமல் வங்கிக்கு பொருத்தமான ஆபத்துக் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

6. வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்புத் தேவைகளின் அடிப்படையில், குழுவால் அமைக்கப்படும் இடர் சகிப்புத்தன்மைக்கு அப்பால் எடுக்கப்பட்ட இடர்களைத் தீர்மானிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அதிகாரசபைகளுக்கு இணங்க இடர் முடிவுகள் எடுக்கப்பட்டன.

7. இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் இடர் போதுமை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடர் அலுவலர்களின் தகைமைகள் மற்றும் பின்னணி என்பவற்றை மதிப்பீடு செய்தல்.

8. இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரத்தை மீளாய்வு செய்தல்.

9. குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளிட்ட வங்கியின் இடர் மூலதன கட்டமைப்பு (கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்கள்), குறித்த மீளாய்வு

10. வெளிப்படுத்தலை முகாமைத்துவப்படுத்துவதற்கு முகாமைத்துவம் பயன்படுத்தும் குறிப்பிட்ட கொள்கைகள், படிமுறைகள் மற்றும் முறைமைகள் உள்ளடங்களாக வங்கியின் ஐந்தொகை, ஐந்தொகைக் கட்டமைப்பு, மூலதனம், நிதியிடல், வட்டி வீதம் மற்றும் திரவ முகாமைத்துவ கட்டமைப்பை மீளாய்வு செய்தல்.

11. வங்கியின் திரவத்தன்மை, வைப்புத் தொகை மற்றும் நிதியிடல் செயற்பாடுகள் பற்றிய முகாமைத்துவத்தில் இருந்து அறிக்கைகளை மீளாய்வு செய்தல்.

12. வங்கியின் ஒழுங்குமுறை மூலதன நிலை மற்றும் மூலதனக் கட்டமைப்பைப்புபற்றிய முகாமைத்துவ அறிக்கையை மீளாய்வு செய்தல்.

13. அதன் மூலதன இலக்குகள் உட்பட வங்கி மூலதன மதிப்பீட்டு கட்டமைப்பை மீளாய்வு செய்தல்.

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை தொடர்ச்சி

14. இடர் முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான விடயங்களைப் பொறுத்தவரை, உதவி பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம், தலைமை இணக்க அலுவலர், பிரதான கணக்காய்வாளர், பிரதான நிதி அலுவலர், பொருளாளர், முகாமைத்துவத்தில் உள்ள ஏனையவர்கள், சுயாதீன கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் வெளிவாரி நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து தகவலைப் பெறுதல்.

15. நிறைவேற்று ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, மீட்புக் குழு, நிறைவேற்று கடன் குழு மற்றும் கடன் மற்றும் பொறுப்புக்கள் குழு போன்ற குறிப்பிட்ட இடர்களைக் கையாளும் அல்லது இடரின் சில அம்சங்களைக் கையாளும் அனைத்து முகாமைத்துவக் குழுக்களின் குறிப்பு விதிமுறைகளை மீளாய்வு செய்தல்.

16. மேலே குறிப்பிடப்பட்ட அந்தந்த குழுக்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயற்திறனை பரிசோதிக்க தலைமை நிர்வாகத்தால் தொடங்கப்பட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல்.

17. BIRMC ஆல் அமைக்கப்பட்ட தரத்திற்கான மற்றும் அளவீட்டிற்கான அளவுருக்களை கொண்டு மேற்கூறிய குழுக்களின் வருடாந்த பணித் திட்டம், தொடர்புடைய உத்திகள், கொள்கைகள் மற்றும் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்தல், குழுக்கள் அவற்றின் கட்டளை குறித்து நல்ல புரிதலைக் கொண்டிருப்பதை உறுதிசெய்து கொள்ளுதல்.

18. குறிப்பிட்ட இடர்களைக் கையாள்வதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிர்வாகக் குழுக்களுடன் தொடர்ந்து உரையாடலைப் பேணுதல், ஆகவே, அவற்றின் செயற்பாடுகளின் செயற்திறன் மற்றும்/ அல்லது அவர்களின் முடிவுகளை செயற்படுத்துவதில் ஏதேனும் தடைகள், இடையூறுகள், உளச்சோர்வு அல்லது கட்டுப்பாடுகள் குறித்து BIRMC க்கு உடனடியாக அறிவிக்கப்படும்

19. இடர் முகாமைத்துவ குறிக்கோள்களின் நோக்கத்தை பூர்த்தி செய்ய இதுபோன்ற குறிகாட்டிகளின் போதுமைத்தன்மையை தீர்மானிக்கும் விதத்துடன், எந்த நேரத்திலும் குறிப்பிட்ட அபாயங்களின் அளவைக் கண்காணிக்க வடிவமைக்கப்பட்ட இடர் குறிகாட்டிகளை மதிப்பாய்வு செய்தல்.

20. ஒவ்வொரு இடர் குறிகாட்டிக்கும் எதிராக மாதந்தோறும் கணக்கிடப்பட்ட உண்மையான முடிவுகளை மதிப்பாய்வு செய்து, அத்தகைய இடர் பணிப்பாளர்கள் குழுவால் வரையறுக்கப்பட்ட விவேகமான வரம்புகளை மீறினால் குறிப்பிட்ட இடர்களின் விளைவுகளைத் தணிக்க உடனடி திருத்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுதல்.

21. பல்வேறு வகை இடர்களுக்கு எதிராக நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவுருக்கள் மற்றும் வரம்புகளை மதிப்பாய்வு செய்து ஒப்புதல் அளித்தல் மற்றும் அவை தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப உள்ளதா என்பதையும், பணிப்பாளர்கள் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விரும்பிய கொள்கை நிலைகளையும் உறுதிப்படுத்தல்.

22. இடர்களை அடையாளம் காணத் தவறியதற்கும்/ உள்ளகக் கட்டுப்பாடுகளுடன்/வழிகாட்டுதல்களுக்கு இணங்காத மற்றும் குழு பரிந்துரைத்தபடி உடனடியாக சரியான நடவடிக்கைகள், ஒழுக்காற்று நடைமுறைகளை எடுக்கத்தவறிய குறித்த பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

23. வணிக நடவடிக்கைகளின் அனைத்துத் துறைகளிலும் வங்கியின் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் இணங்குவதை மதிப்பிடுவதற்குமான இணக்க செயற்பாட்டின் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல்.

24. வணிக தொடர்ச்சி மற்றும் அனர்த்த மீட்புத் திட்டத்தை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்தல்.

25 வங்கியின் உள் மூலதன போதுமை மதிப்பீட்டு செயல்முறையை மீள்பார்வை செய்து ஒப்புதல் அளித்தல்.

26. வங்கியின் முக்கிய செலவுத் திட்டத்தின் படி வாரியத்திற்கு அறிவிப்பு தேவைப்படும் மூலதன பங்களிப்புகளை மதிப்பாய்வு செய்தல்.

27. ஒரு குறிப்பிடத்தக்க நெருக்கடியான நிகழ்வு ஏற்பட்டால், வணிகசங்கத்தில் அதன் நெருக்கடியின் தாக்கத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து, நிர்வாகத்தால் தொடரப்பட வேண்டிய சாத்தியமான விடயங்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்தல்.

28. கணக்காய்வுக் குழுவுடன் கலந்தாலோசித்து, குறைந்தபட்சம் ஆண்டுதோறும் நிர்வாகத்துடன் மதிப்பாய்வு செய்து விவாதித்தல்:

29. சபை கோரியபடி BIRMC சாசனம் தொடர்பான பிற செயற்பாடுகளைச் செய்தல்..

சாசனத்தின்படி, BIRMC இன் பிற பொறுப்புகள் பின்வருமாறு.

1. கணக்காய்வுக் குழு அதன் சட்டரீதியான, ஒழுங்குமுறை மற்றும் பிற பொறுப்புகளைச் செய்ய அனுமதிக்கப்பட தேவையானதாக மற்றும் பொருத்தமானதாக இருப்பதால் குழுவானது வாரிய கணக்காய்வுச் சபை குழுவுடன் (BCA) தகவல்களைத் தொடர்புகொண்டு பகிர்ந்து கொள்கிறது.

2. குழு மற்றும் நிர்வாகத்தின் பதில்களின் எல்லைக்குள் உள்ள விடயங்கள் தொடர்பான ஒழுங்குமுறை தேர்வு அறிக்கைகளின் நகல்களை குழு பெறுகிறது

சபையின் ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை தொடர்ச்சி

BIRMC இன் கூட்டங்கள்

BIRMC காலாண்டு அடிப்படையில் சந்திக்கிறது மற்றும் BIRMC உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு -

பணிப்பாளரின் பெயர்	கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை/ (கலந்து கொள்ள வேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கை)
திரு. எச்.சீ.டி.எல். சில்வா (குழுவின் தலைவர்)	4/4
திருமதி. டபில்யூ.சீ.என். குரே	4/4
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார (மாற்று அலுவலர்)	3/4
திரு. எஸ். கலபதி	2/4

இந்த ஆண்டில், குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில், வணிக நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் அபாயங்களை நிர்வகித்தல் போன்ற சிரேஸ்ட நிர்வாக பணியாளர்களுடன் BIRMC மிகவும் நெருக்கமாக பணியாற்றியது.

அறிக்கையிடல்

சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் விதப்புரையுடன், சபையின் பார்வைகள், இசைவு மற்றும் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை சபையிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவில் முன்மொழியப்பட்டவை மற்றும் கலந்துரையாடப்பட்டவை சபைக்கு அறிக்கையிடப்பட்டது. குறிப்பிட்ட வருடத்தில் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் பணிப்பாளர் சபை மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. சபைக்கு அவசியமான போது தகவல்களுடன் சபையின் ஒன்றிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் கூட்டக் குறிப்புகள் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.




திரு. எச். சீ. டி. எல். சில்வா
தலைவர்
சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட
இடர் முகாமைத்துவக் குழு



நாங்கள் பெறுமதியை சேர்ப்பது எவ்வாறு

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம்	73
மனித வள முகாமைத்துவம்	85
கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு	87
எங்கள் பண்டங்களும் சேவைகளும்	88

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம்



அரச சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் முழுமையான வங்கி நடவடிக்கைகள் முழுவதிலும் இடர்களை நிர்வகிக்கும் அதேநேரத்தில் செழிப்பை நோக்கிய பயணத்தின் நிலையான உபாயமார்க்க வளர்ச்சியை ஆதரிக்க வலுவான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு அவசியம் என்பதை உறுதியாக நம்புகின்றது.

துரிதமாக மாற்றமடைந்துவரும் நிதியியல் சுற்றாடல்களுடன் கோவிட் - 19 நோய்ப்பரவலின் தாக்கங்கள், பல்வேறு வகையான இடர்களுக்கு வங்கிகளை பாதுகாப்பற்றதாக்குகின்றன. நடவடிக்கை அல்லது நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி நிறுவனமொன்றில் ஏற்படக்கூடிய நிதியியல் இடர்களில் பாதகமான தாக்கங்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளுள்ளன. அத்தகைய விளைவுகளின் காரணமாக வருவாய் வங்கியின் வர்த்தக நோக்கங்களை சந்திப்பதற்கு அதற்குள்ள தகுதியில் கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமையலாம். கோவிட்-19 இன் தாக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தனியாகவும் வேறாகவும் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் இடர் விபரத் திரட்டும் முகாமைத்துவமும் முக்கிய இடர் வகைப்படுத்தல்களான கடன் இடர், சந்தைப்படுத்தல் இடர், திரவ இடர், செயற்பாட்டு இடர், சட்ட இடர் மற்றும் மூலோபாய இடர் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது கட்டுப்பாடற்ற எல்லை வரம்புகள் அனைத்து பொருள் மற்றும் தொடர்புடைய இடர் வகுதிகள் மற்றும் இடர் மூலதன நிலைக்கான வங்கியின் ஆபத்து நிலையை விளக்குகின்றன.

பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட வரையறை வங்கியின் இடர் வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட துறைகளுடன் வங்கியின் வளர்ச்சியடைந்துவரும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளில் இடர்களை அடையாளம் காண்பது அளவிடுவது, கண்காணிப்பது மற்றும் கட்டுப்படுத்துவது என்பவை உட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், வங்கியின் வர்த்தக உத்திகள் மற்றும் நோக்கங்களுடன் ஒத்ததாக, இடர்களை மேற்கொள்ளும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இடர் முகாமைத்துவத்திற்கான வங்கிகளின் அணுகுமுறை மூன்று வகையன பாதுகாப்பு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டது. இது முகாமைத்துவம் மற்றும் இடர் கட்டுப்பாட்டுக்கான நேரடிப் பொறுப்பு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் செயற்திறன் மற்றும் ஒருமைப்பாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பு மற்றும் முதல் மற்றும் இரண்டாவது வரிகளுக்கிடையே சுதந்திரமான உத்தரவாதத்தை வழங்குதல் ஆகியவற்றை வேறுபடுத்த முயல்கின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

கோவிட் - 19 நோய்ப்பரவல் மற்றும் அதன் தாக்கங்கள்

உலக சுகாதார அமைப்பு (WHO) ஜனவரி 2020 இல் கோவிட் - 19 நோய்ப்பரவலை உலகளாவிய சுகாதார அவசரகால நிலையினை அறிவித்தது. இலங்கையில் 2019 ஏப்பிரல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பொருளாதாரத் தாக்கத்தில் இருந்து மீண்டு வருகையில், கோவிட் - 19 நோய்ப்பரவல் தாக்கம் ஏற்பட்டது. இந்தத் தாக்கம் பொது மக்களையும் கூட்டிணைந்த நிறுவனங்களையும் ஒரே தடவையில் தாக்கியதுடன், அதன் வளர்ச்சி மற்றும் நிலைத்திருப்பின் அளவு மட்டத்தை பலவீனமாக்கியது. இந்தச் சுமையினைக் குறைப்பதற்கு, கோவிட் - 19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஆதரவை வழங்குவதற்காகவும் நிலைத்திருப்பை பாதுகாப்பதற்காகவும் சௌபாக்கியா கோவிட் - 19 மறுமலர்ச்சி வசதி மற்றும் கடன் தடைத் திட்டம் போன்ற நிதி உதவிப் பொறிமுறைகளை இலங்கை மத்திய வங்கி பல்வேறுபட்ட நிதியியல் உதவிப் பொறிமுறைகளை அறிமுனப்படுத்தியது.

கோவிட் - 19 நோய்பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நாடு இரண்டு மாதங்கள் முடக்கப்பட்டதால், வரையறுக்கப்பட்ட நேரத்தினுள் வங்கியின் வியாபார தொழிற்பாடுகள், கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார செயற்பாடுகள், பிரதாந்தியங்களுக்கு இடையிலான நடமாடும் தடைகள் போன்றவற்றுடன் வங்கி தொழிற்பாட்டு சவால்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த சவால்கள் மற்றும் வங்கியின் ஊழியருக்குள் கோவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்த வங்கி எடுத்த நடவடிக்கைகளும், வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பரிவர்தனைகளின் அளவு கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியதனால், வங்கி வட்டி வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

சவால்களின் மத்தியிலும், வங்கி இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை செயல்படுத்த விரிவான நடவடிக்கைகளை எடுத்ததுடன் முன்னிருக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகளை அமுல்படுத்தியது. வங்கியின் அணுகுமுறை முக்கியமாக பின்வருவனவற்றில் கவனம் செலுத்தியது

- வங்கி ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு மற்றும் சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகளை வங்கிகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கின்றதுடன் மாற்று வேலை இடத்தை வழங்குவதற்கான வியாபார தொடர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இடர் மீட்பு தளங்களை வலுப்படுத்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு இடையூறு இல்லாத சேவையை வழங்க வியாபார நடவடிக்கைகளைத் தொடரும் போது ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- டிஜிடல் சேவையை வழங்குவதற்கு குறைந்தபட்ச இயலளவினால் கிளை வலையமைப்பின் தொடர்ச்சியான தொழிற்பாடு அத்தியாவசியமானதாகும்.
- நாட்டின் பொருளாதார குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கவனத்தில் கொள்வதற்காக 2020ற்கான உபாயமார்க்கத்திற்கு மீளாய்வு சபை அனுமதிக்காக தொடர்ச்சியான மீளாய்வு.
- வியாபார இலாபம் மற்றும் மூலதனத்தின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட தடை நடவடிக்கைகள் மற்றும் அழுத்த சோதனைகளை உறுதி செய்யும் அதேவேளையில் வங்கியின் செயல்படாத சொத்துகளின் மீட்பு முகாமைத்துவம் மீது கவனத்தை செலுத்துவதன் மூலம் வங்கியின் கடன் தரம் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டது.
- நாட்டின் நிதி அமைப்புக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைக்க இலங்கை மத்திய வங்கியின் நிவாரண நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கு தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தொழில்களைப் புரிந்துகொள்வதற்கும் மீளாய்வு செய்வதற்கும் வங்கி கவனம் செலுத்தியது.
- வங்கிக்கு பணம் செலுத்தும் முறைகளை எளிதாக்குவதற்காக திருப்பிச் செலுத்தும் விருப்பங்கள் வலுப்படுத்தப்பட்டன (அதாவது அரசுக்குச் சொந்தமான பிற வங்கிகள் மூலம் பணம் செலுத்துதல்).

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி


ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகம்

ஒரு நிறுவனத்தின் பரந்த இடர் முகாமைத்துவக் கட்டுப்பாட்டு சட்டகமானது, அனைத்து மட்டங்களிலும் மற்றும் அனைத்து இடர் வகைகளிலும் இடர்களை மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்பு சொல்வதற்கும் உதவுகின்றது. ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ சட்டகத்தின் முக்கியகூறுகள் பின்வருமாறு,

- இடர் ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு
- இடர் நாட்டம்
- இடர் முகாமைத்துவக் கருவிகள்
- இடர் விழிப்புணர்வு பற்றிய கலாச்சாரம்

வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் படிமுறையானது இடர் முகாமைத்துவம், இடர் ஆளுகை, உள்ளகக் கட்டுப்பாடு, இடர் நாட்டம், இடர் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் இடர் சார் கலாச்சாரம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கூறுகளைக் கொண்டுள்ளது.

வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை அடிப்படையிலான கலாச்சாரம் கொண்ட அந்தக் கூறுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன மற்றும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன



அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் உபாயமார்க்க முகாமைத்துவத்தின் மத்திய பகுதியாக இடர் முகாமைத்துவம் உள்ளது. இது அவர்களின் செயல்முறைகளுக்கு பொருந்தக்கூடிய இடர்களை நிறுவனங்கள் முறையாகக் கையாளும் ஒரு வழிமுறையாகும். ஒரு வெற்றிகரமான இடர் முகாமைத்துவ முன்முயற்சியானது நிறுவனத்தில் உள்ள ஆபத்து நிலைக்கு விகிதாசாரமாக இருத்தல் வேண்டும், பெருநிறுவன நடவடிக்கைகளுடன் இணைந்திருத்தல் வேண்டும், அதன் நோக்கத்தில் விரிவானது வழக்கமான சூழ்நிலைகளில் மாற்றம் மற்றும் மாறும் சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கும் வகையில் மாறும். இடர் முகாமைத்துவத்தின் கவனம் குறிப்பிடத்தக்க இடர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பொருத்தமான இடர் பதில்களை நடைமுறைப்படுத்தல் ஆகும். நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளில் இருந்தும் அதிபட்ச நிலையான மதிப்பை அடைய வேண்டும் என்பது தான் குறிக்கோள். இடர் மேலாண்மை ஒரு நிறுவனத்தைப் பாதிக்கும் காரணிகளின் சாத்தியமான தலைகீழ் தன்மை மற்றும் குறைபாடு பற்றிய புரிதலை மேம்படுத்துகின்றது. இது வெற்றி நிகழ்வை அதிகரிக்கின்றது மற்றும் தோல்வியின் நிகழ்தகவு மற்றும் அமைப்பின் குறிக்கோள்களை அடைவதற்கான நிச்சயமற்ற நிலை ஆகிய இரண்டையும் குறைக்கின்றது.


வங்கியின் இடர் ஆளுகை மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பு

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் முகாமைத்துவ கட்டமைப்பு வணிக செயல்பாடு, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு இணக்கம் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. வங்கிக்கு எதிரான ஏற்றுக்கொள்ள முடியாத இடர் வெளிப்பாட்டைத் தடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் இந்த மூன்று வரிசைப் பாதுகாப்பு தொழிற்படுத்தப்படும். பொறிமுறையின் முக்கிய செயற்பாடாக சபை இருப்பதுடன் சிரேஸ்ட முகாமைத்துவம் இடர் முகாமைத்துவம், இடர் அளவீடு மற்றும் கண்காணிப்பு கட்டுப்பாடு என்பற்றுக்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வரையறுப்பதுடன் ஊடாக மேற்கொள்வதுடன் மூன்றாவது நிரலில் சுயாதீன கணக்காய்வின் ஊடாக பாதுகாக்கப்படுகின்றது.

அரச சந்தை மற்றும் செயற்பாட்டு அபாயங்களுக்கு பொறுப்பான இடர் மேலாண்மை கொள்கைகளையும் நடைமுறைகளையும் வரையறுத்துள்ளது. அதன் இணக்கத்தை உறுதிப்படுத்த கொள்கைகள் மற்றும் அமைப்புகள் அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. வங்கியின் நிறுவன அமைப்பானது ஆபத்தை மேற்கொள்ளும் மற்றும் நிர்வகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளை தெளிவாக வரையறுக்கின்றது. திறன் மேம்பாடு மற்றும் மீளாய்வு முறைகள் மூலம் வங்கியில் உள்ள இடர் முகாமைத்துவக் கருத்துகளை உள்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறுபட்ட இடர்கள் தொடர்பு குறைவதால் அல்லது ஆபத்தில் அதிகரிக்கும் என்பதால், வங்கியின் இடர் முகாமைத்துவ செயல்முறை, அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் பொருத்தமானதாக இருப்பதைக் கண்டறிந்து பிரதிபலிக்கின்றது. வங்கியின் ஒருங்கிணைந்த இடர் மேலாண்மை செயற்பாடு, நிறுவனத்திற்கு இடையில் இடர் ஆபத்து தொடர்பாக பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி



சபையினதும் சபையின் உப குழுக்களினதும் வகிபாகங்கள்

வங்கியின் இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வையிடுவதற்கான இறுதிப் பொறுப்பையும், நிர்வாகத்தின் கட்டமைப்பையும், கொள்கை கட்டமைப்பையும், இடர் முகாமைத்துவ செயன்முறையையும், ஒரு வழக்கமான அடிப்படையில் அபாயகரமான ஆபத்தான முகாமைத்துவத்துடன் தொடர்புடைய மற்ற விடயங்களையும் மீளாய்வு செய்வதற்குமான இறுதிப் பொறுப்பை பணிப்பாளர் சபை தன்கையில் கொண்டுள்ளது.

கடன், சந்தை, தொழிற்பாடு மற்றும் வேறு சில இடர்களை நிர்வகிப்பதில் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்களாக வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பைக் கண்காணிப்பதில் சபைக்கு உதவுவதற்கு சபை, ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவை நியமித்துள்ளது.

செயற்பாட்டு கட்டுப்பாடுகள் நடைபெறுகின்றன என்பதையும், சம்பந்தப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சபையின் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது..

சபைக் குழுக்களுக்கு அப்பால், முகாமைத்துவக் குழுக்கள் பல்வேறுபட்ட இடர் பரப்புகளுக்கான வினைத்திறனான இடர் சட்டகங்களையும் கலாச்சாரத்தையும் வடிவமைத்தல், அமுல்படுத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றின் மீதான மேற்பார்வை கண்ணோட்டம் தொடர்பாகவும் பொறுப்பாக உள்ளன. வியாபார வரிசை முகாமையாளர்கள் அவர்கள் பொறுப்பாக உள்ள பரப்புகளில் வரும் இடர்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

இடர் நாட்டம்

வங்கியின் இடர் நாட்டமானது, அதன் மூலோபாய இலக்குகளை அடைவதில் வணிகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள இடர் சராசரி குறைந்தபட்ச தேவையை ஈடுசெய்வதற்கு வங்கியின் விருப்பத்தை வரையறை செய்கின்றது. ஒழுங்குமுறைத் தேவைகள் மூலோபாய இலக்குகள், மூலதனப் போதுமை மற்றும் பிற விவேகமான காரணிகள் ஆகியவை குழுவால் ஆபத்து நாட்ட அறிக்கையை வரையும் போது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

வங்கியின் இடர் நிர்வாகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது. இடர் நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை வரம்புகளை வெளிப்படுத்தும் பொருட்டு குழு தர மற்றும் அளவு நடவடிக்கைகளை உருவாக்கும். சபையினால் உருவாக்கப்பட்ட உபாயமார்க்க வழிகாட்டல்களை கொள்கைகளாகவும் நடைமுறைகளாகவும் உருமாற்றுவதும், அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வினைத்திறனுள்ள படிநிலையை உருவாக்குவதும் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் கடமையாகும்.

வங்கியின் சிரேஸ்ட முகாமைத்துவத்தின் இந்த கொள்கைகள் சரியாக ஒழுங்கை தொடர்புபடுத்தி, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிந்துள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இடர் சகிப்புத்தன்மையானது அளவிடக்கூடிய இடர்களுடன் தொடர்புடையது பொதுவாக வங்கி சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தரமான அபாய இடர் தவிர்ப்பு நடவடிக்கைகள் வழிகாட்டுதல்களாக அறிவிக்கப்பட்டு, இவை நிர்வாக வணிக முடிவுகளிலிருந்து வருகின்றன.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

வங்கியின் இடர் நாட்டம், இடர் முகாமைத்துவ செயற்பாட்டினால் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றதுடன் அது அன்றாடம் பணிப்பாளர் சபைக்கு, கூட்டிணைந்த முகாமைத்துவத்திற்கு மற்றும் உரிய குழுக்களுக்கு அறிக்கையிடும்.

இந்தக் கொள்கைகளை உள் மற்றும் புறச்சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு, பணிப்பாளர் சபை அவ்வப்போது இந்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்து, அதற்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். இந்த இடர் நாட்ட வரம்புகள் மாதாந்தம் மற்றும் காலாண்டுகளில் கண்காணிக்கப்படுவதுடன், வங்கியின் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைப்புக்குறியீடுகளின் இடர் முகாமைத்துவ இயலளவுகள், வியாபார சந்தர்ப்பங்கள், வியாபார உபாயமார்க்கங்களுடன் இணங்கும் வகையில் குறைந்த பட்சம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் சட்டகத்தில் இடர் நாட்ட அறிக்கைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

இடர் முகாமைத்துவ பொறிமுறைகள்

இடர் முகாமைத்துவ பொறிமுறைமைகள் இடர் அடையாளம் காணல், அளவீடுகள், மதிப்பிடல், கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு வசதியளிக்கும். இடர் முகாமைத்துவப் பொறிமுறைமைகள் கொள்கைகள், வரையறைகள் மற்றும் அழுத்தப் பரிசோதனைகளை கொண்டிருக்கும். இடர் முகாமைத்துவ செயற்பாடுகளின் பொறுப்பாக இடர் அளவீடு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதல் அமைந்துள்ளது. முகாமைத்துவக் குழுக்களுக்கும் உபாயமார்க்க தீர்மானங்களை சபை எடுக்கும் பொழுதும் வழமையான மற்றும் தற்காலிக அறிக்கைகள் மீளாய்வுக்காக வழங்கப்படும்



வழங்கிய அறிக்கைகள், அடையாளம் காணப்பட்ட இடர்களின் தொகைகள், வகைகள் மற்றும் உணர்திறனின் தெளிவான வரைபடத்தை வழங்குவதற்கு உடன்பட்ட கொள்கை வரையறைகளுடன் ஒப்பிடப்பட்ட பண்டங்கள் மற்றும் பிரிவைச் சார்ந்த இடர்களின் ஒட்டுமொத்த நடவடிக்கைகள் மீதான தகவல்களை உள்ளடக்கியிருக்கும்.

Basel I, II, III மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஏனைய ஒழுங்குபடுத்தல் சட்டகங்கள் மீதான அடிப்படையில் உருவாக்கப்பட்ட வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகமானது, முகாமைத்துவ இடரின் நோக்கம், படிமுறை மற்றும் வகிபாகங்கள் என்பவற்றை தெளிவாக வரையறுக்கும்.


கடன் இடர் நாட்டம், சந்தை இடர் வரம்புகள், மூலதனம் மற்றும் நிதியில் தேவைகள் பற்றிய முடிவுகளை எடுப்பதற்காக மாறுபட்ட சந்தை நிலைமைகள் மற்றும் பிற இடர் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் வருமானம், மூலதனம் மற்றும் திரவத்தன்மை மீதான தாக்கத்தை மதிப்பீடு செய்ய தனிப்பட்ட இடர் நிலைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் அழுத்த சோதனைகள் செய்யப்படுகின்றது.

ICAAP அறிக்கையினால் மீளாய்வு செய்யப்பட்டதற்கு அமைவாக, பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வங்கியின் இடர் ஆளுகை செயன்முறையைப் பலப்படுத்துவதற்கு முகாமைத்துவ மற்றும் சபை மட்டத்தில் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

* அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் இடர் குறிப்பு பட்டியலை நிறுவுதல்.
* வங்கியின் இடர்களை நிலையாக மதிப்பிடுதல்.
* வங்கியின் இடர் எடுக்கும் செயற்பாடுகளின் பொருளாதார தாக்கத்தை பூர்த்திசெய்யும் பகிர்ந்தளிக்கக்கூடிய மூலதனம்.
* வங்கியின் செயலாற்றுகையை மறைமுகமாக பாதிக்கும் உள்ளக மற்றும் வெளியக காரணிகளின் முன்கூட்டியே அடையாளம் காணல்.
* வங்கியினுள்ள பல்வேறுபட்ட மட்டங்களின் தீர்மானம் எடுத்தலுக்கு உதவல்.

31.12.2020 அன்றுள்ளவாறு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின். இடர் அடுக்கு 1 மூலதன விகிதம் 21.58% ஆகவும் மொத்த மூலதன விகிதம் 22.67% ஆகவும் இருந்தது. இந்த வீதங்கள் வங்கித் தொழிலின் சராசரிக்கு அதிகமானதாகவும், இடர் உறிஞ்சுதலின் வலுவான திறமையையும் சுட்டிக்காட்டுகின்றது.

பின்வரும் வரைபடங்களில் மூலதன முகாமைத்துவ அளவுருக்கள் காட்டப்படுகின்றன



ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

இடர் விழிப்புணர்வுக்கான கலாச்சாரம்

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ள கொள்கைகள் ஒழுங்கான முறையில் தொடர்புபடுத்தப்பட்டு, நிறுவனத்தின் கலாச்சாரத்தில் உட்பொதிக்கப்பட்டன என்பதை வங்கின் சிரேஸ்ட முகாமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அளவுபடுத்தக்கூடிய இடர்களுக்கு தொடர்புடைய இடர் சகிப்புத்தன்மையானது பொதுவாக வங்கியின் சார்பாக இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரம்புகள் அல்லது துணை வரம்புகள் என அறிவுறுத்தப்படும். முகாமைத்துவ வியாபார தீர்மானங்களில் இருந்து ஊகிக்கக்கூடிய மற்றும் வழிகாட்டல்களாக பண்பார்ந்த இடர் நடவடிக்கைகள் அறிவிக்கப்படும். சிரேஸ்ட முகாமைத்துவம் / பணிப்பாளர் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புக்குள் இடர் உள்ளதென்பதை வியாபார வரிசை முகாமையாளர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் சகிப்புத்தன்மைகளுக்கு விதிவிலக்கு எதுவாக இருந்தாலும், சிரேஸ்ட முகாமைத்துவம் - பணிப்பாளர் சபை முறையான திருத்த நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இந்த விதிவிலக்குகள் இடர் முகாமைத்துவம் தொடர்பான முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் தகுதியை மதிப்பிடுவதற்கான ஒரு உள்ளீடுகளாகவும் செயல்படுகின்றன.

வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவச் சட்டகத்தினுள் இடரினை முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களில் பங்குபற்றும் மற்றும் இடர்களை தெளிவாக விளங்கிக்கொண்டு முகாமைத்துவம் செய்யும் ஊழியர்களுக்கு வங்கி இடர் விழிப்புணர்வு தொடர்பான கலாச்சாரத்தை உருவாக்க எண்ணியுள்ளது.

வங்கி இடர்களை எடுத்துக்கொள்ளும் அல்லது முகாமைத்துவம் செய்யும் ஊழியர்களை அதனை தெளிவாக விளங்கிக் கொள்வதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ சட்டகத்தினுள் இடர்களை முகாமைத்துவத்திற்காக தீர்மானங்களை எடுப்பதில் பங்குபற்றுபவர்களுக்கு இடர் விழிப்பணர்வு கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

கூர்ப்படையும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடு

> வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவப் பிரிவு (IRMD) 2012 இல் நிறுவப்பட்டது.

> சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), நிர்வாக ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (EIRMC) மற்றும் வணிக தொடர்ச்சியான வழிநடத்தல் குழு (BCP) ஆகியவை உருவாக்கப்பட்டன, மேலும் ஒவ்வொரு குழுவிற்கும் பொருந்தக்கூடிய குறிப்புகளின் விதிமுறைகள் இறுதித்தேர்வு செய்யப்பட்டன.

> கடன், சந்தை, செயற்பாட்டு, பணப்புழக்கம், வட்டி வீத ஆபத்து, தயாரிப்பு ஆபத்து, மூலோபாய ஆபத்து, இணக்க ஆபத்து ஆகியவற்றை உள்ளடக்கிய இடர் கொள்கை, வாரிய ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, அழுத்த சோதனை கொள்கை, இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு (RCSA) கொள்கை, கடன் மறுஆய்வு பொறிமுறை கொள்கை என்பன அறிமுகப்படுத்தப்பட்டது.

> வாரிய ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு அனைத்து ஆபத்து அடிப்படையிலான நடைமுறைகள் மற்றும் வங்கியின் இடர் ஆர்வ அறிக்கை உள்ளிட்ட ஆவணமாக உருவாக்கப்பட்டுள்ளது. (இடர் ஆர்வம் மற்றும் உள் சகிப்புத்தன்மை எல்லைகள் வாரிய ஒப்புதலுடன் 2019 இல் திருத்தப்படுகின்றன).

> வெவ்வேறு சூழ்நிலைகளின் கீழ் வங்கியின் கடன், மூலதனம் மற்றும் காசுப்பாய்ச்சல் நிலையை மதிப்பிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் அழுத்த பரிசோதனை அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளது.

> தாங்கிக்கொள்ளக்கூடிய வரையறைகள் மற்றும் சபையினால் கையாளக்கூடிய வரையறைகள் கொண்ட முக்கிய இடர் குறிகாட்டிகள், விஞ்ஞாபன உருப்படிகள் மற்றும் ஏனைய பிரதான வீதங்கள் அவ்வப்போது (மாதாந்த அல்லது காலாண்டு) பரிசோதிக்கப்பட்டு, கணக்கிடப்பட்டு, மதிப்பிடப்பட்டு BIRMCக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

கடன் இடர்

வங்கியின் கடன் பெறுனர் ஒருவர் அல்லது எதிர்தரப்பினர், ஒப்புக்கொண்ட விதிமுறைகளுக்கு அமைவாக தனது கடப்பாடுகளை சந்திக்க தவறும் போது உருவாகும் சாத்தியமுள்ள இடர், கடன் இடர் என எளிமையாக வரையறுக்கப்படுகின்றது.

வருமான சொத்துக்களிலிருந்து கடன் இடரின் வெளிப்பாடு 13% வீதத்தினால் அதிகரித்துள்ளது, இது முக்கியமாக, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் இடர் கடனின் பிரதான மூலமான எதிர்தரப்பினருக்கு வேறுபட்ட பண்டங்களின் வழங்கப்படும் கடன்களினால் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மூலம் 2019இல் ரூ.35.5 பில்லியனில் இருந்து 2020இல் ரூ.36.9 பில்லயனாக அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டுள்ளது.

வங்கியின் உழைக்கும் சொத்துகளில் இருந்தான கடன் இடரை வெளிப்படுத்தல்


	2020 (ரூ.மில்)	2019 (ரூ.மில்)	% மாற்றம்
வங்கிகளில் வைப்புகள்	11,812	7,089	67%
நிதியியல் சொத்துகள் - FVPL	21	19	11%
கடன்கள் மற்றும் முற்பணங்கள்	36,857	35,561	4%
கடன் மற்றும் ஏனைய பத்திரங்கள்	2,415	2,615	-8%
நிதியியல் சொத்துகள் - FVOCI	5	5	0%
உழைக்கும் சொத்துக்களின் மொத்த வெளிப்படுத்துகை	51,110	45,289	13%

கடன்கள் மற்றும் முற்பணங்கள் வகை ஈட்டுக் கடன்களின் 5% வீத வளர்ச்சியுடன் இணைந்து 10% வீத வளர்சியைப் பதிவுசெய்து, தனிநபர் கடன்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது என அறிக்கையிடப்பட்டுள்ளது.


ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

எதிர்தரப்பு தவறுகை இடர்

எதிர்தரப்பு தவறுகை இடர் என்பது வங்கிக்கு மிகவும் குறிப்பிடத்தக்க கடன் இடராக இருப்பதென்று ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, எதிர்தரப்புகள் தங்கள் கட்டணக் கடமைகளை நிறைவேற்றத் தவறியதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்பாகும். 2020ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த செயற்படாத சொத்துக்களின் பெறுமதி ரூ.8.4 பில்லியன் ஆகும், இதில் 62.2% வீதத்தை EPF கடன்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. EPF கடன்கள் தனிநபரின் நிலுவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், இலங்கை மத்திய வங்கியின் EPF பிரிவிலிருந்து EPF கடன்களில் இருந்து மீள்வது அதிகமாக உள்ளது, இது மிகக் குறைந்த தவறுகை இடரை உறுதி செய்கின்றது. இந்த செயற்படுத்தப்படாத சொத்துக்களின் உயர்வான பகுதி மீட்பு செயன்முறையின் தாமதத்தைக் காட்டுகின்றனர். கணக்கு அல்லாத செயற்படுத்தப்படாத சொத்துக்கள் 37.8% வீதமாவதுடன், 2020ஆம் ஆண்டுக்கான அதன் வயதுப் பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



செயற்படாத சொத்துக்கள் என்பது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்கு ஏற்படும் முக்கிய இடர்களில் ஒன்றாகும் மற்றும் இடர் குறைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலம் சொத்து தரத்தை மேம்படுத்த வங்கி பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. LRM கண்காணிப்பு கட்டமைப்பின் தரத்தை வங்கி அதிகரித்துள்ளது, அங்கு திருப்பிச் செலுத்தும் திறன் கண்டிப்பாக மதிப்பிடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது. வங்கி தொடர்ந்து செயற்படாத கடன் இலாகாவை பகுப்பாய்வு செய்து, தற்போதுள்ள விபரக் போர்ட்போலியோவின் மீட்பு செயன்முறையை வலுப்படுத்த அதனுடன் இணைக்கப்பட்ட மீட்புத் திட்டத்தைக் கண்காணிக்கின்றது




டிசம்பர் 19 உடன் ஒப்பிடுகையில் மார்ச் 20இல் கோவிட் - 19 நோய்ப்பரவல் காரணமாக இருந்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் செயற்படாத சொத்துகள் அதிகரித்திருந்தாலும், தொற்றுநோயால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை நிர்வகிக்கும் அதே வேளையில், அந்த வரம்பிற்குக் கீழே நிறுவனத்தால் செயற்படாத சொத்துக்களை பராமரிக்க முடிந்தது. கீழே விவாதிக்கப்பட்ட கடன் இடர் குறைப்பு நடவடிக்கைகளுடன், தவறுகை இடர் மற்றும் தீர்வு இடரை மேலும் குறைப்பதை அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

கடன் செறிவு இடர்

இது ஒரு குறிப்பிட்ட கடன் வழங்குபவர்கள், தொழில், தயாரிப்பு, துறை அல்லது புவியியல் ஆகியவற்றுக்கு எதிரான வெளிப்பாட்டின் சீரற்ற விநியோகம் அல்லது பாதகமான வளர்சியின் சாதகமான இடராகும்.

இந்த உப இடர் வகைகளை அளவிடவும் கண்காணிக்கவும் வங்கி பல நாட்ட வரம்புகளைப் பயன்படுத்துகின்றது, அவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு ஏதேனும் பாதகமான தாக்கங்களைக் கட்டுப்படுத்த பரிந்துரைகளுடன் குழுவிற்கு தெரிவிக்கப்படுகின்றன.

மேற்கூறிய வகைகளுக்கான கடன் செறிவு ஹெர்ஃபின்டால் - ஹிர்ஷ்மேன் இன்டெக்ஸ் (HHI) முறையைப் பயன்படுத்திக் கண்காணிக்கப்படுவதுடன் பல்வேறு துறைகள் மற்றும் தொழில்களில் பல்வகைப்படுத்தும் நோக்கமாக கூட்டிணைந்த நிறுவனங்களுக்கான கடன் வகைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மாற்றத்திற்கான சாதகமான கடன்வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் ஊழியர்களின் இயலளவை கட்டியெழுப்பல் உள்ளடங்களாக தற்போதைய செயன்முறை மற்றும் நடைமுறைகள் வலுவூட்டப்பட்டுள்ளது.



ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

கடன் இடர் முகாமைத்துவம்

வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடு, கடன் வாங்குபவர்கள் மற்றும் எதிர்தரப்பினருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய கடன் தர நிலைகளை அமைப்பதில் கவனம் செலுத்துகின்றது, சிறந்த கடன் வகைகள் இடர் முகாமைத்துவம் மற்றும் வங்கியின் எதிர்தரப்பினரின் கடன் நிலையை மோசமடைய வழிவகுக்கும் பொருளாதார போக்குகளின் கீழ் ஏற்படும் மாற்றங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றது.

வங்கியானது கடன் கொள்கை மற்றும் கடன் கையேட்டை உருவாக்கியுள்ளது, இது வாடிக்கையாளர் தேர்வு, உரிய விடாமுயற்சி, சகிப்புத்தன்மை, மீளாய்வு மற்றும் மீட்பு நடைமுறைகள், போர்ட்போலியோ கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகரிக்கப்பட்ட இடர் நாட்டத்தின் நிலைகளை உள்ளடக்கிய கொள்கைகளை வரையறுக்கின்றது. பொருத்தமான கடன் இடர் சூழலை நிறுவுதல், நல்ல கடன் வழங்கும் செயன்முறையின் கீழ் செயற்படுதல், பொருத்தமான கடன் நிர்வாகம், அளவீடு மற்றும் கண்காணிப்பு செயல்முறை மற்றும் கடன் இடர்களின் மீது போதுமான கட்டுப்பாடுகளை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் கடன் இடரை அடையாளம் காணவும், அளவிடவும், கண்காணிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இந்த ஆவணங்கள் வழிகாட்டுகின்றன. கடன் கொள்கை மற்றும் கையேடு ஆகியவை தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, வங்கியின் இடர் நாட்டம் மற்றும் வியாபார உபாயமார்க்கம் ஆகியவற்றுடன் ஒத்துப்போவதை உறுதி செய்யும் வகையில் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்படுகின்றது. கடன் இடர் செயல்திறனின் பொறுப்புக்கூறல் அனைத்து வியாபாரப் பிரிவுகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் வங்கியின் அனைத்து மட்டங்களிலும் அங்கீகார செயற்பாட்டில் அதிகார நிலைகள் வெவ்வேறு நிலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதன் ஊடாக ஆரோக்கியமற்ற போக்குகள் கையாளப்படுகின்றன. கீழ்வரும் பிரதான செயன்முறைகளின் ஊடாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் கடன் இடர் முகாமைத்துவம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது.

- இடர் மதிப்பீட்டு மாதிரிகள் உள்நாட்டு வாடிக்கையாளர்களின் இடர் சுயவிபரத்தின் அடிப்படையில் வசதிகளை வகைப்படுத்தவும் மற்றும் அவர்களின் இடர் புவியீர்ப்பு அடிப்படையில் வசதிகளை வகைப்படுத்தவும் (சந்ததேகத்திற்கு இடமின்றி, குறைந்த, மிதமான, ஏற்றுக்கொள்ளத்தக்க, விளிம்பு, உயர், ஏற்றுக்கொள்ள முடியாத – நிராகரிப்பு) ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

- அரசு அல்லாத விண்ணப்பதாரர்களின் வருமான ஆதாரங்களின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கான அடிப்படை வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் வங்கியின் கடன் இடரைக் குறைக்க வருமான ஆதார சரிபார்ப்பு மாதிரி (ISVM) செயற்படுத்தப்படுகின்றது.

- பிணையின் மதிப்பீட்டிற்காக உள்ளக மதிப்பீட்டு அலகு மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு நிபுணர்கள், இருவரையும், குறிப்பாக அடமானப் பத்திரங்களுக்கு (நிலம், கட்டிடம் போன்றவை) வங்கி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கின்றது.

- ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மேல் உள்ள கடன் இடர் வெளிப்பாடுகள், ஒப்புதலுக்கு முன் இடர் முகாமைத்துவப் பிரிவால் செய்யப்பட்டு, தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பின்தொடர்வதை உறுதிசெய்ய, முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்குகின்றன.

- நிபந்தனைகள் / சட்ட அறிவுறுத்தல்கள், கடன் உடன்படிக்கைகள், நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்பு ஆவணங்களை நிறைவு செய்தல் ஆகியவற்றைக் கவனமாகச் சரிபார்ப்பதன் மூலம் அலட்சியத்தால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்கு முன் - விடுவிப்புப் பிரிவு உறுதி செய்கின்றது.

- வசதிகளை மீளாய்வு செய்வதற்கும், முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை அடையாளம் காண்பதற்கும் கடன் மீளாய்வுப் பொறிமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

- அனைத்து சிக்கல் கடன்கள் மற்றும் செயற்படாத முன்பணங்கள் ஆகியவற்றிற்கான கடந்தகால அனுபவத்தின் மூலம் திறம்பட பின்தொடர்வதை உறுதி செய்வதற்கும் செயல்முறையை மேம்படுத்துவதற்கும் கடன் இடர் மேலாண்மையுடன் மீட்பு துறை தொடர்பு கொள்கிறது. மீட்டெடுக்கப்படாத முன்பணங்கள் சட்டப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, கடைசி முயற்சியாக சட்ட நடவடிக்கையைத் தொடங்கும்.

- மூன்று வரிசை பாதுகாப்புக்குள் ஊழியர்களின் திறனைக் கட்டியெழுப்புவதற்காக, பொருள் விடயப் பரப்பு நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் கடன் மதிப்பீடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் குறித்த பயிற்சியை வழங்குதல்.

- சகிப்புத்தன்மை வரம்புகள் மற்றும் சபையினால் தூண்டப்படும் வரம்புகள், குறிப்பாணை உருப்படிகள் மற்றும் பிற முக்கிய விகிதங்கள் கொண்ட முக்கிய இடர் குறிகாட்டிகள் அவ்வப்போது (மாதாந்த அல்லது காலாண்டுக்கு) சோதிக்கப்பட்டு, கணக்கிடப்பட்டு, மதிப்பிடப்பட்டு, BIRMCக்குத் தெரிவிக்கப்படுகின்றன. எந்தவொரு பாதகமான தாக்கங்களையும் கட்டுப்படுத்த பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

- வங்கியின் போர்ட்போலியோ தரத்தைப் பகுப்பாய்வு செய்வதற்கும் அளவிடுவதற்கும் பின்வரும் முக்கிய கூறுகளை RMD காலாண்டுக்கொருமுறை மதிப்பீடு செய்கின்றது.

  - குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் வகையீடுகளின் மொத்த வெளிப்பாடு மீது அளவு உச்சவரம்புகளை சபை அங்கீகரித்தது
  - கடன் வகைகளின் அமைப்பின் பகுப்பாய்வு
  - கடன் வகைகள் மற்றும் NPL வளர்ச்சிப் பகுப்பாய்வு
  - பிரதான உபாயமார்க்க செயலாற்றுகை

சந்தை இடர்

இது சந்தை விகிதங்கள் அல்லது விலைகளில் ஏற்படும் இயக்கங்களால் உள் மற்றும் வெளி ஐந்தொகை நிலைகளின் மதிப்பு மோசமாக பாதிக்கப்படும் ஆபத்து ஆகும். வங்கியைப் பொறுத்தவரை, சந்தை ஆபத்து என்பது பெரும்பாலும் வட்டி வீதம் மற்றும் திரவத்தன்மை ஆபத்து என்பதாகும். பொதுவாக நிதிச் சந்தைகளின் ஏற்ற இறக்கம் மற்றும் குறிப்பாக வீட்டு நிதிச் சந்தையில் இருந்து ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து வங்கி கூடுதல் கவனம் செலுத்துகிறது

சந்தை ஆபத்து மற்றும் வங்கியின் திரவத்தன்மை இடர் முகாமைத்துவ செயற்பாட்டின் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்திற்கு சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO).

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ALCO வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கட்டமைப்பு/ கலவையை கண்காணிக்கவும், வைப்புத்தொகை மற்றும் முற்பணங்களுக்கான உற்பத்தி விலை குறித்து தீர்மானிக்கவும் பொறுப்பாகும். தேவையான முதிர்வு சுயவிவரம் மற்றும் அதிகரிக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கலவை குறித்து குழு தீர்மானிக்கிறது.

வங்கியின் வட்டி வீத அசைவின் இணைப்பு மற்றும் எதிர்கால வணிக மூல உபாயத்தை முடிவு செய்தல், நிதிக் கொள்கையை மதிப்பாய்வு செய்தல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவை தற்போது குழுவால் செய்யப்படும் சில செயற்பாடுகளாகும். பணப்புழக்க சிக்கல்களைக் கையாள்வதற்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி குழு ஒப்புதல் அளித்த சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மேலாண்மை கொள்கை மற்றும் தற்செயல் நிதி திட்டம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

வட்டி வீத இடர்

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வட்டி வீத சரிசெய்தலுக்கு உட்பட்ட பதவிகளுக்கு இடையில் பொருந்தாத தன்மை இருக்கும்போது வட்டி வீத இடர் ஏற்படுகின்றது. வங்கியின் கடன், நிதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் வட்டி வீத இடருக்கு வழிவகுக்கும்.

இது வங்கியின் சந்தை அபாயத்தின் முக்கிய பகுதியாகும், ஏனெனில் அதன் முதன்மை நிதி ஆதாரம் வைப்புத்தொகை மூலம் ஆகும். இவை இயற்கையில் குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கு ஏற்படுகின்றது, அதே சமயம் வங்கியின் முக்கிய வணிகமான வீட்டுவசதி நிதி பொதுவாக நீண்ட கால கடனை உள்ளடக்கியது. வங்கி முக்கியமாக நிலையான-விகித கடன் வழங்கும் சூழலில் இயங்குகிறது, அதே நேரத்தில் அதன் பெரும்பான்மையான கடன்கள் அடிக்கடி மறு விலை நிர்ணயம் செய்யப்படுகின்றன. வருடத்தில் அதிகரித்த வட்டி செலவு விளிம்பை கணிசமாக பாதித்துள்ளது மற்றும் இந்த பொருந்தாத தன்மையை நிவர்த்தி செய்வதற்கான உத்திகளை வங்கி பரிசீலித்து வருகிறது. பொருந்தாத விடயங்களைப் பொருத்துவதற்கும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் சந்தை நிலைமைகளுடன் ஒத்துப்போகவும் பல புதிய சொத்துக்கள் மற்றும் பொறுப்பு தயாரிப்புகள் இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

வட்டி வீத இடர் முகாமைத்துவம்

பங்குகளின் பொருளாதார மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்வதற்கான மாற்றியமைக்கப்பட்ட கால இடைவெளி அணுகுமுறையை வங்கி ஏற்றுக்கொண்டது, இது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அவற்றின் மிகுதியுள்ள முதிர்ச்சியின் அடிப்படையில் வெவ்வேறு நேர நிலைகளில் வரைபடமாக்கப்பட வேண்டும். இந்த அணுகுமுறை மாறுபட்ட வட்டி வீதக் காட்சிகளுக்கு பதிலளிப்பதன் மூலம் பங்குகளின் பொருளாதார மதிப்பின் மாறும் நடத்தை பகுப்பாய்வு செய்கிறது. பரவலாக, வட்டி விகிதத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு பதிலளிக்கும் விதமாக சொத்துக்களின் பொருளாதார மதிப்பு மற்றும் கடன்களின் பொருளாதார மதிப்பு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு என EVE வரையறுக்கப்படுகிறது. இருவருக்கும் இடையிலான தொடர்பு விகித உணர்திறன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மாற்றியமைக்கப்பட்ட காலத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. வங்கி புத்தகத்தில் வட்டி வீத அபாயத்தின் முடிவுகள் - IRRIBB வட்டி வீத ஆபத்து - வெளியீட்டு அட்டவணை இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுவாக, நிகர வட்டி வருமானத்தில் எதிர்மறையான தாக்கத்தை குறைக்க சந்தை வீத ஏற்ற இறக்கம் மற்றும் விளைச்சல் வளைவு மாற்றங்களின் சாத்தியமான தாக்கத்தை ALCO நிர்வகிக்கிறது.

திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது ஒரு நிறுவனத்திற்கு அதன் கடமைகளை பூர்த்தி செய்ய இயலாமையால் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத செலவு அல்லது இழப்புகள் ஏற்படாமல் வீழ்ச்சியடையும் போது சொத்துக்களின் அதிகரிப்புக்கு நிதியளிப்பதன் மூலம் ஏற்படும் இழப்புக்கான சாத்தியமாகும். திரவத்தன்மை இடர்நேர்வை தனிமைப்படுத்தி பார்க்க முடியாது, ஏனென்றால் கடன் ஆபத்து மற்றும் சந்தை ஆபத்து போன்ற பிற நிதி அபாயங்களின் விளைவாக இது பெரும்பாலும் தூண்டப்படுகிறது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்கு அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சுயவிவரத்தின் தன்மை காரணமாக பணப்புழக்க முகாமைத்துவம் மிகவும் முக்கியமானது. அடையாளம் காணப்பட்ட விகிதங்கள் மூலம் வங்கியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கலவை, பொறுப்புக்களின் பல்வகைப்படுத்தல் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றைக் கண்காணிக்கிறது, அதே நேரத்தில் கடன் தரத்தை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகிறது.

வங்கி வழங்கிய நியாயமான மற்றும் போட்டியான வைப்பு விகிதங்கள் மூலம் வைப்பாளர்களின் நம்பிக்கையையும் வென்றது மற்றும் அதிகரித்த கிளை வலையமைப்பின் மூலம் சில்லறை வைப்புகளுக்கான அணுகல் அதிகரித்துள்ளது. எனவே மொத்த வைப்புத்தொகையை நம்புவது குறைந்துள்ளது. மலிவு விலையில் நீண்டகால கடன் வாங்கும் கருவிகளின் பற்றாக்குறையானது சொத்து புத்தகத்தில் முதிர்ச்சி பொருந்தாத தன்மையை ஏற்படுத்துகிறது மற்றும் முதிர்வு பொருந்தாத தன்மையைக் குறைக்க புதுமையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவது குறித்து வங்கி ஆராய்ச்சி செய்து வருகிறது

திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்

- ALCO மற்றும் வாரிய ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவில் விவாதிக்கப்பட்ட CBSL இடர் பணிப்பின்படி வங்கி பல திரவத்தன்மை விகிதங்களை கண்காணிக்கிறது,

- அழுத்தப் பரிசோதனை மற்றும் சந்தர்ப்பப் பகுப்பாய்வு

  > அழுத்தப் பரீட்சிப்பு என்பது வங்கியின் இடர் முகாமைத்துவ அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது, மேலும் சில சாத்தியமற்ற ஆனால் நம்பத்தகுந்த நிகழ்வுகள் அல்லது நிதி மாறுபாடுகளில் அதன் அசைவுகளுக்கு அதன் சாத்தியமான பாதிப்பை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

  > கடன், சந்தை மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைகள் மற்றும் வங்கியின் மூலதன நிலையை ஈட்டுதல் ஆகியவற்றில் சிறிய மிதமான, பெரிய மற்றும் நெருக்கடி நிலைகள் மூலம் பல்வேறு எதிர்பாராத நிதி அழுத்த சூழ்நிலைகளில் வங்கியின் பாதிப்பை மதிப்பிடுவதற்காக வங்கியின் அழுத்த சந்தர்ப்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி


> காலாண்டு அறிக்கைகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கு தேவையான முகாமைத்துவ மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளின் அபாயத்தைக் கணிக்க உபாயமார்க்க நடவடிக்கைகளுடன் முன்னெச்சரிக்கை மேம்பாடுகளுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன. பொதுவாக, நிகர வட்டி வருவாயில் எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்க சந்தை மாற்றங்களின் சாத்தியமான தாக்கத்தை ALCO நிர்வகிக்கின்றது.

- திரவத்தன்மை தொடர்பான விகிதங்கள்


வழக்கமான திரவத்தன்மை முன்னறிவிப்புகள், திரவத்தன்மை விகிதம் மற்றும் முதிர்வு இடைவெளிப் பகுப்பாய்வு மூலம் வங்கி அதன் சொந்த காசுப்பாய்ச்சலை கண்காணிக்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் இடர் பணிப்புரை ALCO மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவில் விவாதிக்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்ட மட்டங்களுக்கு மேல் திரவத்தன்மை சொத்து விகிதத்தை பராமரிப்பற்கு திறைசேரித் திணைக்களம் பொறுப்பாக உள்ளது.

திரவத்தன்மை விகிதங்கள்	31 டிசம்பர் 2020 அன்று
முதலீடு / வைப்புகள்	31%
கடன்கள் / வைப்புகள்	81%
கடன்கள் / சொத்துகள்	70%
கடன்கள் / மூலதனம்	612%
தேறிய பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் / மூலதனம்	5.78%
நிறுவன வைப்புகள் மீது நம்பிக்கை	23%
திரவச் சொத்துகள் / மொத்த சொத்துகள்	29%
கிடைக்கப் பெறும் கடன் வரிசை பில்.ரூ.	2.8

போர்ட்போலியோ அமைப்பு 2020



பொறுப்புக் கலவை 2020



- மேலும், வங்கி திரவத்தன்மை நெருக்கடி மற்றும் அழுத்த சோதனையின் போது திரவத்தன்மை தற்செயல் நிதித்திட்டம் உள்ளது மற்றும் தற்செயல் நிதியின் போதுமான தன்மையை அடையாளம் காண சொத்து மற்றும் பொறுப்பு விபரத்தில் செய்யப்படுகின்றது

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

தொழிற்பாட்டு இடர்

மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது வெளியக நிகழ்வுகளிலிருந்தான அழுத்தங்களின் காரணமாக பற்றாக்குறை அல்லது உள்ளக ரீதியாக தோல்வியடைந்த செயன்முறைகளின் விளைவால் ஏற்படுகின்ற நட்டம் தொழிற்பாட்டு இடராகும். மனிதர்களின் தவறுகள், முறைமையின் கோளாறுகள் மற்றும் முழுமையற்ற ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொழிற்பாட்டு இடர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துகின்றன.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம்

கொள்கைகள், தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உரிய ஒழுங்குக்கு கொண்டு வருவதன் ஊடாக தொழிற்பாட்டு இடரினை வங்கி குறைக்கின்றது. இடரை அடையாளம் காணல், மதிப்பீடு, அமுல்படுத்தல் கட்டுப்பாடுகள், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை என்பவற்றை உள்ளடக்கிய விரிவான தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையை அரச வங்கியானது தனது முறைமை அபிவிருத்திச் செயன்முறை மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்பம், இடர் தவிர்ப்பு மேற்பார்வை, ஊழியர்களின் திறன் அபிவிருத்தி, ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் உரிய நேர அறிமுகம் நடைமுறைகள் மற்றும் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் இடர்களை பரிவர்த்தனை செய்யும் செயற்பாடுகளின் பயன்பாடு போன்றவற்றின் ஊடாக கட்டுப்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் தொடங்கியுள்ளது. தொழிற்பாடுகள் மற்றும் பணிகளின் மீளாய்வுகள் கிரமமாக கூட்டங்களின் போது கவனத்திற்கு கொள்ளப்படுகின்றன.

ஊழியர்கள் தங்களுடைய தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய சரியான தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகளை பெற்றுக் கொள்வதற்கும் அக் கொள்கைகளுடன் தொடர்புபடுவதற்கான தங்களுடைய பொறுப்புக்களை எந்த நேரத்திலும் மேன்மைப்படுத்தும் நோக்கத்துடனும் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. இடர் முகாமைத்துவ நடவடிக்கையினால் மேற்கொள்ளப்படும் அடிப்படை மாதிரிகளிலமைந்த மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வு கண்டு பிடிப்புகள், கணக்காய்வு செயன்முறைகள் கிளைகளுக்கான விஜயங்கள் என்பனவும் இடர் அடையாளம் காணும் செயன்முறைக்கு தகவல்களை அளிக்கின்றன.

வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில், நட்ட நிகழ்வுகளை சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், நட்டங்களை தேடித் தரவுத் தளம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்றுக் கொண்ட பாடங்களின் மீது தடைகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.

செயன் முறையில் ஏதும் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்படும் போது ஏற்கனவே செய்யப்பட்ட வேலை மீண்டும் தொடரப்படுவதை தவிர்த்துக் கொள்வதற்காக உடனடி முறைசார் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமுகமான மற்றும் சிறந்த தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தி வியாபாரச் செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகளில் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வங்கி ஏற்புடைய உரிய கொள்கைகளுடன் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் இணக்கப்பாட்டு மட்டத்தை உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்கள் கண்காணிக்கின்றனர்.

திறமையான சேவை வழங்குதல் மற்றும் சரியான தீர்மானங்கள் எடுக்க உதவுவது எனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பலப்படுத்தவதற்காக தகவல் முறைமையையும் முகாமைத்துவ தகவல் முறைமையையும் தரமுயர்த்துவதற்கு, முதலீடு செய்யும் நடவடிக்கைகளை வங்கி ஆரம்பித்துள்ளது.

மாற்று பங்கீட்டு துறையூடாக சந்தை பங்குகளை ஊடுறுவுவதையும், மக்கள், கட்டமைப்பு, மற்றும் முறைமைகளினூடாக போட்டிகளில் வாய்ப்பான சூழ்நிலைகளை உறுதி செய்வதற்கு அவசியமான முதலீடுகளை செய்வதையும் வங்கி தனது கடப்பாடாகக் கொண்டுள்ளது. மேலும், எதிர்பாராத பேரழிவுகளை சாத்தியமான குறைந்த நட்டத்துடன் மீட்டுக்கொள்வதற்காக தொழிற்பாட்டு இடரை இல்லாது செய்வதற்காக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதற்கமைவாக கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் வியாபார தொடர்ச்சித் திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் BC வழிகாட்டல் குழுக்களின் விதிமுறைக் குறிப்புகளை நிறுவுதல்.
- BCP குழுக்களின் நியமனம்
- தலைமைக் காரியாலயக் கட்டிடத்தின் ஒவ்வொரு மாடியிலும் தீயணைப்பு வார்டனை நியமித்தல்.
- ஆவண முகாமைத்துவ முறைமையை வாங்குவதற்கான செயன்முறையை விரைவுபடுத்தல் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மதிப்பீடுகளை வழங்குதல்.
- தலைமையகத்தில் பொருத்தமான நியான BCP மீட்பு வளாகத்தை ஒழுங்குபடுத்தல்.
- தலைமைக் காரியாலயத்தில் நெருப்பு அலாரத்தை நிறுவுதல்.
- தலைமையகத்திலும் அதன் பிரதான பதினொரு கிளைகளிலும் இடர் மீட்பு பயிற்சியை நடாத்துதல் மற்றும் BCP வழிகாட்டல் குழுவிற்கும் BIRMCக்கும் அதன் பின்னூட்டலை அறிக்கையிடுதல்.

பல நெருக்கடி முகாமைத்துவ CMT கூட்டங்கள், ஊழியர்கள் மற்றும் பெரும்பாலும் பொது மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தரங்களை நிலைநிறுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆண்டு முழுவதிலும் நடாத்தப்பட்டது. சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்படும் நியமங்கள் வங்கியினால் கடுமையாக பின்பற்றப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்ச்சி

உபாயமார்க்க இடர் முகாமைத்துவம்

மோசமான வியாபாரத் தீர்மானங்கள், தீர்மானங்களின் முறையற்ற அமுலாக்கம் அல்லது கைத்தொழில் மாற்றங்கள் தொடர்பாக குறைவான பிரதிபலிப்பு என்பவற்றின் ஊடாக எழுகின்ற மூலதன உருவாக்கம் அல்லது உழைப்புக்கள் தொடர்பான நடைமுறை மற்றும் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களின் சாத்தியத் தன்மை என்பன உபாய இடர் முகாமைத்துவத்திற்கு காரணமாகின்றது

நிறுவன முகாமைத்துவத்துடன் இணைந்து பணிப்பாளர் சபை மற்றும் பொது முகாமையாளர் உபாயத் திட்டங்களை நடாத்துவதுடன் அவற்றின் உரிய அமுலாக்கத்திற்காக தொடர்பாடல்களையும் மேற்கொள்கின்றது. தீர்மானங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் இடர்களைத் தவிர்த்துக் கொள்வதற்காவும் ஒழுங்குவிதிகள் தொடர்பான தேவைப்பாடுகள், பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள், கூட்டாண்மை ஆட்சித் தேவைகள், ஒழுக்கம் மற்றும் கைத்தொழில் துறையின் சிறந்த படிமுறைகள் தொடர்பாக உரிய அவதானத்தை சபையும் நிறுவன முகாமைத்துவமும் எடுக்கும் போது சகல உபாயத் தீர்மானங்களுக்கும் முன்னுரிமை வழங்குகின்றது

சட்ட இடர் மற்றும் இணக்க இடர் முகாமைத்துவம்

நீதிமன்ற கட்டளையின் படியான நெருக்குதல் செய்ய முடியாத கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வங்கிக்கு எதிராக ஆக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக தவிர்த்துக் கொள்வதில் தோல்வியடைதல் போன்றவற்றின் காரணமாக சட்ட இடரானது எழுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளின் போது வங்கியின் தற்போதைய சட்டக் குழு தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமல்லாது இவ்வாறான இடர்களை வெளிப்படுத்துவதற்கும் அவற்றுக்கான தீர்வு காணல் தொடர்பாகவும் வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுக்கின்றது. வங்கி முகங்கொடுக்கக் கூடிய சட்ட இடர்களிலிருந்து விடுபடும் பொருட்டு தேவையாயின் வங்கி வெளியக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும்.

பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டங்கள், ஒழுங்கமைப்புகள், நடத்தை விதிகள் மற்றும் நற்பிரயோகத்தின் தரங்களுடன் இணங்கிச் செயற்படாமையினால், வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டமாக இது உள்ளது அரச வர்த்தகம் மற்றும் செயற்பாட்டு அலகுகளுடன் இணங்குவிப்பு நடவடிக்கைகள் நெருக்கமாகப் பணியாற்றுகின்றன. 2020இல் மேற்கொள்ளப்பட்ட இணக்க இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து வருடாந்த அறிக்கையின் கூட்டிணைந்த ஆளுகைப் பகுதியை உசாவவும்.

உள்ளக மூலதன போதுமை செயன்முறை (ICAAP)

உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (LCB) மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (LSB)க்கான பாசல் III (பில்லர் II மேற்பார்வை மறுஆய்வு செயல்முறை (SRP) இன் கீழ் மூலதன தேவைகள் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புகளின் பிரிவு 4.2 மற்றும் 4.3ன் படி ICAAP அறிக்கை தயாரிக்கப்பட்டு CBSLக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவே, ICAAP பின்வரும் அபாயங்களை நிவர்த்தி செய்யும் எனவே, ICAAP பின்வரும் அபாயங்களை நிவர்த்தி செய்யும்.

அ) தூண் 1 இன் கீழ் உள்ளடக்கப்பட்ட அபாயங்கள்: கடன், சந்தை மற்றும் செயற்பாட்டு அபாயங்கள்

ஆ) தூண் 1 இன் கீழ் முழுமையாகப் உள்ளடக்கப்படாத அபாயங்கள்: செறிவு ஆபத்து (கடன் ஆபத்து), வங்கி புத்தகத்தில் வட்டி வீதம்/ வருவாய் ஆபத்து விகிதம் (சந்தை ஆபத்து) மற்றும்

இ) தூண் 1 ஆல் அடங்காத ஆபத்து வகைகள் : தூண் 1 இன் கீழ் குறிப்பாக கவனிக்கப்படாத அபாயங்கள், இதில் திரவத்தன்மை ஆபத்து, செறிவு ஆபத்து, நற்பெயர் ஆபத்து, இணக்க ஆபத்து, மூலோபாய மற்றும் வணிக ஆபத்து, மீதமுள்ள ஆபத்து மற்றும் இருப்புநிலை வெளிப்பாடுகள் மற்றும் பத்திரமயமாக்கல் ஆபத்து ஆகியவை அடங்கும்.

ICAAP மேம்பாட்டு செயல்முறை பல்வேறு ஆபத்து வகைகளுக்கான அழுத்த சோதனை மற்றும் காட்சி பகுப்பாய்வு போன்ற பல அளவு வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இடர் மதிப்பீட்டு மாதிரிகள் மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வு ஆகியவை வங்கி மதிப்பீடுகளின் தூணின் இரண்டு ஆபத்தை மதிப்பிடுவதற்காக RMD ஆல் உருவாக்கப்பட்டது. மூலதனத்தின் தாக்கம் மற்றும் இடர் எடையிடப்பட்ட சொத்துக்கள் கணக்கிடப்பட்டன, எனவே ஒவ்வொரு சூழ்நிலையிலும் CAR இன் மாறுபாடு மதிப்பிடப்படுகிறது

மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவம் நிறுவனத்தின் இலாபங்களுக்கும் மதிப்பிற்கும் முக்கிய பங்களிப்பாளர்கள் ஊழியர்கள் ஆவர். ஊழியர்கள் ஐந்தொகை அல்லது ஒரு நிறுவனத்தின் கணக்குகளின் புத்தகங்களில் "சொத்து" என்பதன் கீழ் தோன்றக்கூடும், இருப்பினும், அவர்கள் அதிகம் எந்தவொரு பண மதிப்பும் வழங்க முடியாத பெறுமதிமிக்க சொத்துக்கள் ஆவர்.

எங்கள் ஊழியர்கள்தான் எங்கள் தொலைநோக்கினை உறுதியான விளைவுகளாக மாற்றுகிறார்கள், இதனால் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கிறது. எனவே, நாங்கள் அவர்கள் சிறந்து விளங்க எல்லாவற்றையும் உள்ளடக்கிய மற்றும் ஊக்கமளிக்கும் பணியிடத்தை வழங்குவதை உறுதிசெய்கிறோம், அதே நேரத்தில் எங்கள் முதலீடுகளை பயிற்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பணியாளர் மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றோம். இதனூடாக சிறந்த மக்கள் பணியிடத்தை உருவாக்க மற்றும் பிரகாசிக்க முடிந்துள்ளது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் நாங்கள் தொடர்ந்து நிறுவனத்தின் வளர்ச்சியை வளர்ப்பது மற்றும் தக்கவைத்துக்கொள்வதில் கவனம் செலுத்துகிறோம்.

ஊழியர்களின் பலம்

இந்த ஆண்டிற்கான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 369 ஆக இருந்தது ஒப்பீட்டளவில் சிறியது ஆனால் அவை வங்கியின் செயற்திறனுக்கு அதிக அளவில் பங்களித்தன. இந்த ஆண்டில் 12 பேர் வங்கியில் இருந்து ஓய்வு பெற்றனர் அதில் 03 ஊழியர்கள் வங்கியை விட்டு வெளியேறினர், மற்றும் 01 ஊழியர் வேறு காரணங்களுக்காக வங்கியை விட்டு வெளியேறினார். ஆண்டுக்கு 07 புதிய ஊழியர்களை வங்கியில் இணைத்துக்கொண்டோம். எங்கள் ஆட்சேர்ப்புக் கொள்கையின்படி உள் மற்றும் வெளிப்புற வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட்டது

பணியாட் தொகுதியின் வேறுபாடு

முகாமைத்துவ மட்டம்	வேறுபாடுகள்		
	ஓய்வு பெறல்	இராஜினாமா/ வேறு	வெளிவாரி ஆட்சேர்ப்பு
கூட்டியைந்த முகாமைத்துவம்	2		2
சிரேஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம்	2	1	
நிறைவேற்றுத் தரம்	3	1	5
நிறைவேற்றுத் தரம்	5	2	
மொத்தம்	12	4	7

ஊழியர் பலம் அடுக்கு ரீதியாக

முகாமைத்துவ மட்டம்	31.12.2020ம் திகதியன்று ஊழியர்களின் எண்ணிக்கை
கூட்டியைந்த முகாமைத்துவம்	9
சிரேஸ்ட நிறைவேற்று முகாமைத்துவம்	7
நிறைவேற்றுத் தரம்	106
நிறைவேற்றுத் தரம்	247
மொத்தம்	369

பாலின ரீதியான விபரத்திரட்டு

வங்கித்துறையில் ஆண்கள் மற்றம் பெண்கள் இருவருக்கும், தொழில் வழங்குனராக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி இருக்கின்றறது. 2020ஆம் ஆண்டில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பாலின விபரத்திட்டுக்கு அமைவாக ஆண்கள் 50% வீதமும் பெண்கள் 50% வீதமும் காணப்பட்டனர்

பணியாளர் வயது விபரத்திரட்டு

வங்கி அனுபவம் வாய்ந்த மற்றும் சிரேஸ்ட பணியாளர்களின் திறனைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளது. வங்கி 40 வயதிற்கும் அதிகமான 49% பணியாளர்களை கொண்டுள்ளது

வயது வகுதி	31.12.2020ம் திகதியன்று ஊழியர்களின்
50 அல்லது அதற்கு மேல்	78
40 - 49	102
30 - 39	102
29 அல்லது அதற்கு கீழ்	87
மொத்தம்	369

திறன் ஈர்ப்பு மற்றும் கையப்படுத்தல்

புதிய திறமை கையகப்படுத்தல் வங்கியின் ஆட்சேர்ப்பு நடைமுறை மூலம் செயற்படுத்தப்படுகிறது, இது எங்கள் வணிகத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான ஊழியரைத் தேர்ந்தெடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நமது கலாச்சாரத்திற்கு ஏற்ற மற்றும் வளர்கத் தேவையான திறன்கள், அறிவு, மற்றும் மிக முக்கியமான நடத்தைகள் கொண்ட திறமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. உள்ளகத் திறமைகளுக்கு உடனடிக் கவனம் செலுத்தப்படும் அதே வேளையில், வெற்றிடங்கள் ஏற்படும் போதெல்லாம், உள்ளகத் திறமை கிடைக்கவில்லை என்றால், சிறப்புத் திறன்கள் தேவையான மட்டங்களில் கொண்டு வரப்படுகின்றன

மனித வள முகாமைத்துவம் தொடர்ச்சி

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஒரு பணியாளரின் அறிவு, திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவது பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் ஒரு முக்கிய கருவியாகும், இதன் மூலம் SMIB வளர்ச்சியை அடைகிறது. எங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட வியாபாரக்குறியை பலப்படுத்தும் அதே வேளையில் அவர்களின் திறன்களையும் அறிவையும் மேம்படுத்த பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை வெவ்வேறு செயற்பாடுகளில் பயிற்சியளிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வங்கி முயற்சிக்கிறது, இது அவர்கள் தங்கள் கடமைகளை சிறப்பாகச் செய்ய உதவுவதோடு எதிர்கால பொறுப்புகளுக்கும் அவர்களைத் தயார்படுத்துகின்றது.

தலைமைத்துவ வரிசையை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, வங்கியின் தகுதிவாய்ந்த இளம் ஊழியர்களின் குழுவிற்கு தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் அதிக திறன் வாய்ந்த பணியாளர்களைக் கண்டறிந்து, தொழில் மேம்பாட்டு மற்றும் வாரிசு திட்டமிடல் மூலம் அவர்களை வழிநடத்தவும் தலைவர்கள் மற்றும் வழிகாட்டிகளாகவும் மிகவும் வெற்றிகரமானவர்களாக இருக்க அவர்களைப் பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டம் அவர்களுக்கு அதிக உற்பத்தித்திறன், மாற்றங்களை நிர்வகிக்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் பெரு நிறுவன இலக்குகளை அடைவதில் ஒத்துழைப்புடன் கூடிய பணிச்சூழலை உருவாக்க உதவுகின்றது. தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டம், தலைமைத்துவத் திறன், பேச்சுவார்த்தை திறன், விளக்கப்படுத்தும் திறன், பயனுள்ள எழுதும் திறன், மேலாண்மை திறன் மற்றும் வெற்றிகரமான வழிகாட்டுதல் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை வளர்ப்பதற்கான திறன்களை கவனத்தில் கொள்கின்றது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி வணிக அளவை விரிவுபடுத்தவும் மற்றும் தொழில்துறையில் மைற்கற்களை அடையவும் எதிர்பார்க்கின்றது, அதே நேரத்தில் அறிவு மற்றும் அனுபவத்துடன் நன்கு பொருத்தப்பட்ட ஒரு திறமையான உள்ளகப் பணியாளர்களை உருவாக்குகின்றது.

2020ஆம் ஆண்டில் கோவிட் - 19 இன் உலகளாவிய நோய்த்தொற்று நிலமை காரணமாக பயிற்சித்திட்டங்களை வழங்குவதும் கலந்துகொள்வதும் சவாலானதாக இருந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சித்திட்டங்களை வழங்க நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். மீளாய்வாண்டில், எங்கள் ஊழியர்களுக்கு 06 உள்ளக பயிற்சித் திட்டங்களும் 15 வெளியக பயிற்சித்திட்டங்களும் வழங்கப்பட்டன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கைத்தொழிற்துறை புத்தாக்கங்களையும் அபிவிருத்தியையும் அறிந்துகொள்வதற்காக ஊழியர்களுக்கு வெளிவாரிப் பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கியது.

2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பல்வேறு வகை பயிற்சிகளில் ஊழியர்களின் பங்கேற்பை கீழே உள்ள அட்டவணை சுருக்கமாகக் கூறுகிறது

முக்கிய பகுதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
அறிவு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி	37
அணுகுமுறை மேம்பாட்டு பயிற்சி/ உந்துதல் பயிற்சி	77
கருத்தரங்குகள், பட்டறைகள், உறுப்பினர் கட்டணம், வினாடி வினா போட்டிகள்	9

பணியாளர் சேவை

சேவை வகை(ஆண்டுகள்)	31.12.2020 திகதியின்படி ஊழியர்களின்
0-4	58
5-9	155
10-14	52
15-19	9
20 இற்கு மேல்	95
மொத்தம்	369

42% ஊழியர்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக வங்கியில் பணிபுரிந்துள்ளதுடன் வங்கியின் அபிவிருத்திக்கு தமது சேவைகளை வழங்கியும் உள்ளனர். நிதி சார்ந்த நன்மைகளை மட்டுமன்றி நிதி சாராத நன்மைகளையும் பணியாட் தொகுதியினருக்கு வழங்கியதன் ஊடாக அவர்களின் தொழில் திருப்தி அதிகரித்துள்ளது

நாம் இன்றுள்ள நிலைக்கு வருவது இலகுவான காரியமல்ல. ஆனால் ஊழியர்களின் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக வங்கி அனைத்தையும் அடைந்துள்ளது.

எதிர்கால விடயங்கள்

வரும் ஆண்டில் எங்களது மனிதவளத்தை சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் எங்கள் பணியாளர்களை தொடர்ந்து பலப்படுத்துவோம். பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் தேவைகள் பற்றிய முழுமையான பகுப்பாய்வு எமது குழுவின் திட்டத்தில் உள்ளது, மேலும் இந்த புதிய பகுப்பாய்வின் மூலம், மேலும் ஊழியர்களின் தொழில்நுட்பம் மற்றும் மென்மையான திறன் அம்சங்களை உள்ளடக்கிய விரிவான மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சி திட்டம் பலவற்றை உருவாக்க விரும்புகிறோம். முக்கியமாக ஊழியர்கள் தங்கள் திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொள்வதில் விரும்பிய அளவை அடைவதில் கவனம் செலுத்துவதன் மூலம் அடுத்தடுத்த திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துவது குறித்தும் அடுத்த ஆண்டு கவனம் செலுத்தப்படும். சுருக்கமாக, ஒரு சிறந்த பணியிடத்தையும் அதிக திருப்திகரமான பணியாளர்களையும் உருவாக்க முயற்சிப்போம்.

கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு

எந்தவொரு நாட்டிலும் சமூகத்தின் பிரதான அலகாக குடிமகன் உள்ளான். இந்த குடிமக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக அரச இயந்திரமும் செயற்படுகின்றது. இதற்காக இந்த சங்கங்களில் விரிவான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பௌதீக அபிவிருத்தி மற்றும் ஆன்மீக வளர்ச்சி முக்கிய இலட்சியமாகும். இருப்பினும், இந்த அனைத்து நடவடிக்கைகளின் இறுதி விளைவாக பௌதீக வளர்ச்சி மற்றும் ஆன்மீக வளர்ச்சி முக்கிய அபிலாஷையாகும். ஒரு வளர்ந்த சமுதாயத்தை உருவாக்குவதும், திருப்தியான குடிமக்களை உருவாக்குவதுமாகும். இரு ஒரு முக்கிய அவசியத் தேவையாகும்.

"நிலையான வளர்ச்சி" என்ற கருத்து இன்று உலகில் முக்கிய அபிவிருத்தி தலைப்புகளில் ஒன்றாகும். முறையான அரசாங்கங்களும் அமைப்புகளும் இதற்கு பல்வேறு தலையீடுகளையும் பங்களிப்புகளையும் செய்கின்றன. தன்னார்வப் பணி மற்றும் பொறுப்பான பங்களிப்புகள் இதில் அடங்கும். ஆரோக்கியமான மற்றும் திருப்தியான சமூகத்தை உருவாக்குவதே நோக்கமாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பின் கீழ் சமூகத்துடன் தொடர்புகொள்ளும் எந்தவொரு கட்டமைப்பின் இருப்பைத் தீர்மானிப்பதில் அத்தகைய திருப்திகரமான சமூகத்தின் இன்றியமையாத காரணியாகும். மனிதனை மையமாகக் கொண்ட சமூகங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது அந்த சமூகத்தின் கட்டமைப்பு அமைப்பை நேரடியாக பாதிக்கின்றது என்பதே இதன் பொருள்.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி ஒரு முன்னணி பொது நிதி நிறுவனமாகும், இது சமூகப் பொறுப்பில் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றது. அவர்களின் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் பொது சமூக மேம்பாடு ஒரு அத்தியாவசிய காரணியாக நாங்கள் கண்டுகொண்டுள்ளோம். ஒரு முறையான கட்டமைக்கப்பட்ட பொது நிதி நிறுவனம் என்பது பொறுப்பான நடத்தை முறையைக் கொண்டதாகும். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் ஒன்பது தசாப்தகால நினைவுகள் இதற்கு ஒரு சான்றாகும், தேசத்தின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வளவொரு அர்பணிப்பைச் செய்த வேறெந்தவொரு நிறுவனமும் இல்லை. அந்தப் பணி இன்றுவரை தொடர்கின்றது, அத்துடன் வணிக வங்கியின் நோக்கங்களை நிறைவேற்றுவதுடன், மேற்கூறிய தேசிய பொறுப்பையும் பூர்த்திசெய்கின்றது.

வணிக நோக்கங்கள் திருப்தியடையுமளவிற்கு, நிறுவனம் தனது சமூகத்திற்கு சாதகமான பங்களிப்பையும் செய்கின்றது. இது சுற்றுச்சூழல் மேம்பாடு, கலாச்சார அடையாளப் பாதுகாப்பு, உள்ளூர் கல்வியின் மறுமலர்ச்சி, கலை மற்றும் கைவினைகளை வளர்ப்பது, விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய நல்லிணக்கம் போன்ற முக்கிய தேசிய நலன்களுக்கு பங்களிக்கின்றது.

2020ஆம் ஆண்டு பொதுவாக அனைவருக்கும் உலகளாவிய சவால்களின் காலமாகும். இது வரை நாம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எதிர்கொண்டுள்ளோம். இவ்வாறனதொரு சூழலில், எமது நிதி நிறுவனம் தனது முழு ஆதரவையும் சமூகத்திற்கு வழங்குவதே நோக்கமாகும். பங்களிப்பு கூட்டிணைந்த நிறுவனங்களின் சமூகப் பொறுப்பின் பரந்த மேற்கோளுக்கு இந்த நிதி நிறுவனம் அளவிட முயடியாதது.

அதன் மைற்கல்களில் ஒன்றாக, நாட்டின் நிதிக் கல்வியறிவு விழிப்புணர்வைக் கட்டியெழுப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. இந்தத் தருணம் வரை இந்த விடயத்தில் அதிகபட்ச பங்களிப்பு செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக தேசிய அளவில் முறையான வலையமைப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது நிறுவனத்தின் இலாபத்திற்கான தலையீடு அல்ல, சமுதாயத்தின் எதிர்கால வளர்சிக்கு இது ஒரு இன்றியமையாத தலையீடு மட்டுமேயாகும்.

ஒரு நாடாக, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதன் அதிகபட்ச பொறுப்புகள் மற்றும் முன்னோக்கி நகர்த்துவதற்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்து பொறுப்பாக இருக்கும்.

எங்கள் பண்டங்களும் சேவைகளும்

நாங்கள் வங்கியின் ஒவ்வொரு முயற்சியும் குடிமக்களுடனா நட்புடன் இருக்க வேண்டும் என்று நம்புகின்றோம். அனைத்து சேவைகளின் இறுதிப் பயனாளிகள் பொதுமக்களேயாவர். வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் போது ஒரே இடத்தில் சேவையை வழங்குதல் முக்கியமானதாகும். பல்வேறு நிதித்தேவைகளுடன் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்துவது எளிதான காரியம் அல்லது. எங்கள் வெளியீடும் நாங்கள் வழங்கும் சேவைகளும் உயர்ந்த தரத்தில் இருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர் திருப்திக்கு வழிவகுக்கும்.

இந்த கொள்கைகையை கடைப்பிடிக்க ஊழியர்கள் ஆர்வமாக இருப்பதை அவதானிக்க முடியும். 2020ஆம் ஆண்டில் எங்கள் வங்கி அமைந்த முன்னேற்றம் இந்த உண்மையை நிரூபிப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். நாடு முழுவதிலும் சேவையை வழங்குவதற்காக இயங்கி வரும் கிளை வலையமைப்பு அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

தொழில்சார்துறையினர் தொடக்கம் சாதாரண மனிதர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற பல வகையான வங்கி வசதிகளை எங்களால் அறிமுகப்படுத்த முடிந்தது. ஒவ்வொரு வீட்டு நிதித் தேவையை பூர்த்திசெய்வற்கான சாத்தியக்கூற்றினை நாம் கொண்டுள்ளோம். மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியல் அதிக சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாயத்துறையில் முக்கிய பங்களிப்பாளராகிவிட்டோம். பாரம்பரிய இரத்தினக்கற்கள் துறையையும் ஏனைய துறைகளையும் இலக்காக் கொண்டு பலவகையான நிதிச் சேவைகள் அமுல்படுத்தப்பட்டள்ளது.

நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியினர் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றனர். அரசாங்கத்திற்கு சொந்தமான உருவகமாக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது, பொருளாதாரத்தை மேம்படுத்த நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையை ஊக்குவிப்பது என்ற அரசாங்கத்தின் கொள்கையை கூட்டாண்மை மூலம் நிதியை வழங்குவதன் ஊடாக பலப்படுத்துவத்கு அடையாளம் கண்டுள்ளது.

அரச சேவையில் உள்ள அதிகாரிகளை இலக்காக் கொண்டு மிகப்பெரிய சேவைப் பல்வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 பணியின் திட்டமிடல் ஆண்டாகும், மேலும், எங்களிடம் நம்பிக்கையுடன் வரும் வாடிக்கையாளர்களின் வாக்குறிதிகளை நாங்கள் 100% வீதம் காப்பாற்றியுள்ளோம், இது அரச வங்கியாக நாங்கள் சம்பாதித்த சொத்தாகும். 2020ஆம் ஆண்டு அந்த வாடிக்கையாளர்களுக்கு கவர்சிகரதான வட்டியை அறிமுகப்படுத்தியுள்ளோம். அது மட்டுமல்லாது சிறுவர்களுக்கும் சிரேஸ்டப் பிரஜைகளுக்கும் பல்வேறுபட்ட சேமிப்புத்திட்டங்களை எங்களால் அறிமுகப்படுத்த முடிந்தது.

உரிய விளம்பர பிரசாரங்களை மேற்கொள்ளுவதன் ஊடாக அதன் நேரடி மற்றும் மறைமுக வாடிக்கையாளர்களுக்கு அதன் சேவைகளை மக்கள் அறிந்துகொள்வதற்கு வழிவகுத்ததன் ஊடாக வங்கி மக்களின் இதயங்களை 87 ஆண்டுகளுக்கு மேலாக வென்றுள்ளது. அரச பொறிமுறையுடன் உரிய உறவுமுறையின் ஊடாகவும் தனிப்பட்ட தொடர்புகளின் ஊடாகவும் பல்வேறுபட்ட சந்தைப்படுத்தல் தொழில்நுட்பம் வாடிக்கையாளர்களை வெற்றிகொள்வதற்காக பிரயோகிக்கப்பட்டது. பல ஆண்டுகள் வங்கியின் தொடர்ச்சியான நிதியியல் சாத்தியக்கூறுகளானது வங்கியினால் சர்வவல்லமையுள்ள சந்தைப்படுத்தல் பொறிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கின்றது.

2020ம் ஆண்டு அதிகூடிய கடன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் தொகை பில்லியன்களாகும். மற்றொரு வகையில், கடன்களுக்கான வட்டி ஊடான இலாபமானது பாரியளவில் அதிகரித்துள்ளது. எட்டு தசாப்த கால அரச வங்கியானது ஒரு பில்லினுக்கும் அதிகமான குறுகிய கால மற்றும் நீண்ட கால வைப்புகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் பெற்றுக்கொண்டது.

இலங்கை நிதியியல் துறையினருக்கு நன்கு அறிமுகமான 1922 தொலைபேசி இலக்கத்தை பெற்றுக்கொண்டமையானது அதன் ஒரு வெற்றியாகும். இதனூடாக அலுவலர்கள் வாடிக்கையாளர்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் நவீன உலகிற்கு நிதியில் தகவல்களை வழங் குவதற்கு வெப்தளமும் பயன் படுத்தப்படுகின்றது. மேற்கூறிய வசதிகளுடன் அரச



நிதியியல் தகவல்கள்

பணிப்பாளர்களின் அறிக்கை	90
நிதியியல் அறிக்கையின் மீதுள்ள உள்ளக கட்டுப்பாடு மீதான பணிப்பாளரின் அறிக்கை	94
வங்கியின் உள்ளக் கட்டுப்பாடு மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	96
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு	98
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	100
நிதி நிலமைக் கூற்று	104
இலாபம் அல்லது நட்டக் கூற்று	105
உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று	106
காசுபாய்ச்சல் கூற்று	107
நிதியியல் கூற்றுகள்	108
நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்	126
பெறுமதி கூட்டப்பட்ட கூற்று	163
பத்து வருட புள்ளிவிபரவியல் சுருக்கம்	164

பணிப்பாளர்களின் அறிக்கை

பொது

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி 1988ம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஒரு அனுமதியளிக்கப்பட்ட வங்கியாவதுடன், 1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு சட்டத்தினதும் அதன் திருத்தங்களின் கீழ் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியாகும்.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 1975ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட 13 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்ட தேவைகளை உறுதிப்படுத்தும் விதமாக, வங்கியின் 2020 மார்கழி 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை கூற்றுக்கள் மற்றும் அந்த நிதிநிலை கூற்றுக்கள் குறித்த கணக்காய்வாளர் தலைமையின் அறிக்கையுடன் வங்கியின் விவகாரங்கள் மீதான அறிக்கையை வழங்குவதில் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் சபை பெரு மகிழ்ச்சியடைகின்றது.

வங்கியின் பிரதான செயற்பாடுகள்

வீடமைப்பு, விவசாயம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி நிதி, மற்றும் சேமிப்பு திரட்டல்கள் என்பவற்றை மேம்படுத்துவதும் வங்கியின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளன. மீளாய்வு ஆண்டில் முக்கிய நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை. நாட்டின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முரணான எந்தவொரு செயலிலும் வங்கி ஈடுபடவில்லை.

பணிப்பாளர்கள்

1975ம் ஆண்டு 13ம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாகவும், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாகவும் தலைவர் உள்ளடங்களாக ஒன்பது நிறைவேற்றுத்தரமில்லாத பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்கள். வங்கியில் நிறைவேற்றுத்தரமுள்ள எந்த பணிபாளர்களும் இல்லை.

இவர்களில் மூன்று பணிப்பாளர்கள் கீழ் வரும் அமைச்சுகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் கீழ்வரும் அமைச்சர்களினால் நியமிக்கப்படுவார்கள்.

(அ) நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினால்,

(ஆ) வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினால், மற்றும்

(இ) கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்குப் பொறுப்பான ஒரு அமைச்சரினால்,

ஒரு பணிப்பாளர் திறைசேரி பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

சபையின் குறைவெண் வரம்பாக ஒன்பது அங்கத்தவர்களில் மூன்று அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமூகமளித்தல் வேண்டும். வங்கிச் சட்டம் மற்றும் ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்திற்கமைவாக குறைந்தபட்சம் மாதத்திற்கொருமுறை அல்லது தலைவர் அவசியம் எனக் கருதும் போது பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். 2020ஆம் ஆண்டு பதினொரு கூட்டங்கள் நடைபெற்றதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சபைக் கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை:

பணிப்பாளரின் பெயர்	வருகை தருவதற்கு தகைமையுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை	வருகை தந்த கூட்டங்களின் எண்ணிக்கை
டாக்டர். உதயசிறி காரியவசம் (தலைவர்)	11	11
திருமதி. டபில்யூ.சி.என். குரே	11	10
திரு. ஏ.ஜே.பி.எச்.பி.எம்.ஆர்.எஸ். பண்டார	11	11
திரு. எஸ். கலபதி	11	10
திரு. எச்.சீ.எல். சில்வா	11	11
டாக்டர். பீ.பி. விக்ரம	11	04

ஒப்பந்தங்கள் தொடர்பாக பணிபாளர்களின் ஈடுபாடுகள்

தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைக் கொள்கையின் நோக்கமானது, வங்கிக்கும் அதனுடன் தொடர்புடைய தரப்பினருக்கும் இடையிலான பரிவர்த்தனைகள், வெளிப்படைத்தன்மை மற்றும் கைக்கெட்டிய விலைக்கையிடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருப்பதை உறுதி செய்வதாகும்.

இந்த கொள்கையானது தொடர்புடைய தரப்பினரின் பரிவர்த்தனைகளின் பொருட்தன்மை தீர்மானிக்கப்படும் அடிப்படையையும், வங்கியால் தொடர்புடைய தரப்பினரின் பரிவர்த்தனைகளை கையாளும் முறையையும் கோடிட்டுக்காட்டுகிறது. வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி வழங்கிய உத்தரவுகளுக்கு இணங்க வங்கியின் தொடர்புடைய தரப்பினர் பரிவர்த்தனைக் கொள்கையை வங்கி பின்பற்றியது.

வங்கியுடன் எந்தவொரு பணிப்பாளரும் அல்லது பணிப்பாளரின் மனைவி அல்லது தங்கியிருக்கும் பிள்ளை அல்லது பிள்ளைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டிருக்கவில்லை. பணிப்பாளர்கள் தாங்கள் வகிக்கும் ஏனைய பணிப்பாளர் பதவிகள் மற்றும் தொடர்புகள் பற்றி சபைக் கூட்டத்தின் போது வெளிப்படுத்துவதனூடாக அவ்வாறான விடயங்கள் தொடர்பான வாக்கெடுப்புகளில் அவர்களது ஈடுபாடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். 2020ம் ஆண்டு எவ்விதமான தொடர்புடைய தரப்பினரின் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படவில்லை.

பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்ச்சி

தொழிற்பாட்டு மீளாய்வு மற்றும் எதிர்கால அபிவிருத்திகள்

2019 ஆம் நிதியாண்டில் வங்கியின் நிதி மற்றும் தொழிற்பாட்டு செயல்திறன், எதிர்கால முன்னேற்றங்கள் பற்றிய கண்ணோட்டம் மற்றும் அந்த நடவடிக்கைகளின் முடிவுகள் இந்த ஆண்டு அறிக்கையில் முறையே 11 முதல் 17 பக்கங்களில் உள்ள தலைவர் அறிக்கை, பொது முகாமையாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி அறிக்கை மற்றும் நிதி மதிப்பாய்வு ஆகியவற்றில் உள்ளன. இந்த அறிக்கைகள் இந்த ஆண்டு அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர்

வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக பொது முகாமையாளராக இருப்பதுடன், அவர் வங்கியின் உயர் மட்ட தரத்தில் உள்ள நபராக இருப்பார். அவர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கவும்படுகின்றார். வங்கியின் நிலையான வளர்ச்சியை அடைவதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்கள், கூட்டிணைந்த பெறுமதிகள் மற்றும் முழுமையான இடர் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பவற்றை வங்கியின் வியாபாரத்துடன் இணைந்த நாளாந்த நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார். .

தொலைநோக்கு, செயற்பணி மற்றும் பெறுமதிகள்

வங்கியில் நடைபெறும் ஒவ்வொன்றுக்கும் தொலைநோக்கு, செயற்பணி, மற்றும் பெறுமதி கூற்றுக்கள் வழிகாட்டல்களை வழங்குகின்றன. ஒவ்வொரு நபரும் வங்கி எங்கு செல்கின்றது மற்றும் எதனை அடைய முயலுகின்றது என்பது தொடர்பாக கவனம் செலுத்துகின்றனர். அத்துடன் அவை வங்கியின் பிரதான பெறுமதிகள் மற்றும் எவ்வாறு மக்கள் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றனர் என வரையறுக்கின்றனர். அதனுடைய தொலைநோக்கினை அடைவதற்கு நன்நெறி நியமத்தின் உயர் மட்டத்தில் அதன் வியாபார நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளுகின்றது.

தொலை நோக்கு, செயற்பணி, பெறுமதிகள் இந்த ஆண்டறிக்கையின் 03 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

கூட்டிணைந்த ஆளுகை

கூட்டிணைந்த ஆளுமை பயனுறுதியுள்ள கூட்டிணைந்த ஆளுமை கட்டமைப்பு ஒன்றையும் அதன் செயலாற்றலையும் பேணுவதில் பணிப்பாளர் சபை கடப்பாட்டுடன் செயற்படுகின்றது. வங்கியின் நிதி, செயற்பாடுகள், மற்றும் இணங்குவிப்பு நடவடிக்கைகளை கூட்டிணைந்த ஆளுமை பிரயோகங்களுக்கு அமைவாக நெறிப்படுத்தியும் செயற்படுத்துகின்றது. கூட்டிணைந்த ஆளுமை அறிக்கையானது வருடாந்த அறிக்கையின் பக்கம் 25 இருந்து 65 வரை வழங்கப்பட்டுள்ளது.

o சபையின் கணக்காய்வுக் குழு

வங்கியின் கணக்காய்வு குழு (BAC) வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், அதன் ஆண்டு அறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தத் தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவல்களை மதிப்பாய்வு செய்கிறது மற்றும் வங்கியின் சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குதல், வங்கியின் வெளிப்புற கணக்காய்வு செயல்பாடுகளின் வருடாந்த வேலைத் திட்டம் மற்றும் வங்கியின் உட்புற கணக்காய்வு செயல்பாடுகள் மற்றும் நிதி அறிக்கை, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு விடயங்கள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவை குழுவின் கீழ் வருகின்றன.

சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். பொது முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர்-, நிதி உதவிப் பொது முகாமையாளர் இடர் முகாமைத்துவம் உதவிப் பொது முகாமையாளர் - கடன் ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தந்தனர். அதேவேளை கணக்காய்வாளர் நாயகத்தின் அத்தியட்சகர் அவதானிப்பாளராக அனைத்து கூட்டங்களிலும் பங்குபற்றினார்.

ஆறு சபை கணக்காய்வுக் கூட்டங்கள் 2020ம் ஆண்டு நடாத்தப்பட்டன.

சபையின் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை இந்த ஆண்டு அறிக்கையின் பக்கம் 65 இருந்து 66 வரை கொடுக்கப்பட்டள்ளது.

o சபையின் மனிதவள மற்றும் ஊதியங்கள் குழு

வங்கியின் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது வங்கி சார்பாக மனிதவளக் கொள்கைகள், உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குகிறது. வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பணியாளர்கள் தொடர்பான அனைத்து ஊதியக் கொள்கை, முன்முயற்சிகள், சம்பள கட்டமைப்புகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்கிறது மற்றும் அனைத்து பணியாளர்கள் தொடர்பான விடயங்கள் உட்பட அனைத்து மனிதவள பிரச்சினைகள் தொடர்பான பிற சபையின் துணைக் குழுக்களுடன் ஒரு ஆலோசனைப் பங்கைப் பேணுதல், இவை வங்கியின் சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் உள்ள முதன்மை பொறுப்புகளில் ஒன்றாகும்.

இக்குழு நான்கு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன், ஒரு பணிப்பாளர் பதிலீட்டு அங்கத்தவராக நியமிக்கப்படுவார். சபையின் செயலாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் தொடர்புடைய விடயங்கள் அல்லாத விடத்து பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

தேவைக்கு அமைவாக காலாண்டுக்கொருமுறை கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2020ம் ஆண்டு 2 மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன.

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 68இல் வழங்கப்பட்டுள்ளது

o சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அனைத்து இடர்கள் அதாவது கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு மற்றும் உபாயமார்க்க

பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்ச்சி

இடர்கள் என்பவற்றை இடர் காட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களின் ஊடாக மதிப்பீடு செய்யும். சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, குறித்துரைக்கப்பட்ட இடர்களை தீர்ப்பதற்கும் அளவு மற்றும் தர இடர் வரையறைக்குள் இந்த இடர்களை முகாமைத்தவம் செய்வதற்கு கடன் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்தது. குழு வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகளின் அடிப்படையில் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விவேகமான அளவுக்கு அப்பால் அபாயங்கள் இருக்கும் போது, இந்த குறித்துரைக்கப்பட்ட இடர்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு, சபையின் கண்ணோட்டம், இணக்கம் மற்றும் அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளைப் பெற்றுக்கொள்வதன் நோக்கத்துடன் சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தலை உறுதி செய்கின்றது. அனைத்து வியாபார செயற்பாடுகளின் மீது உள்ளக கட்டுப்பாடு மற்றும் அனுமதிக்கப்பட்ட கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பவற்றுடன் வங்கியின் இணக்கத்தை மதிப்பீடு செய்தவற்கு சுயாதீன இணக்கச் செயற்பாட்டிற்கு குழு நியமிக்கப்பட்டள்ளது.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு நான்கு நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அதில் ஒருவர் மாற்று உறுப்பினர் ஆவார், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் இடர் முகாமைத்துவ தலைவர் ஆகியோர் பரந்த இடர் வகைகளைக் கவனிக்கின்றனர். சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் செயலாளராக சபையின் செயலாளர் செயல்படுகிறார். நான்கு சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை ஆண்டறிக்கையின் பக்கம் 69 - 91இல் வழங்கப்பட்டுள்ளது.

o சபையின் பரிந்துரைக் குழு

சபையின் பரிந்துரைக் குழுவானது பொது முகாமையாளர்ஃ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுத்தல்/ நியமித்தலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களை நியமிப்பற்கு அல்லது பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகளை என்பவற்றை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. சபையின் பரிந்துரைக் குழுவானது அதன் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்

சபையின் பரிந்துரைக் குழு நான்கு நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அதில் ஒருவர் மாற்று உறுப்பினராக இருக்கிறார். பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர், உதவி பொது முகாமையாளர்- (HR&L), குழுவின் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் அழைப்பாளர்களாக கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். சபையின் செயலாளர சபையின் பரிந்துரைக் குழுவின் செயலாளராக செயல்படுகிறார்.

சபையின் பரிந்துரைக் குழுக் கூட்டங்கள் வருடத்திற்கு இரண்டு முறையாவது நடத்தப்படுகின்றன, இருப்பினும் தேவைகளின் அடிப்படையில், கூட்டங்கள் சரி செய்யப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ஒரு குழு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆண்டு அறிக்கையின் 67 ஆம் பக்கத்தில் சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது

மூலதனப் போதுமை விகிதம்

சபையின் பரிந்துரைக் குழுவானது பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தேர்ந்தெடுத்தல்/ நியமித்தலுக்கான நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றம் பிரதான முகாமைத்துவ நபர்களை நியமிப்பற்கு அல்லது பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அவசியமான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகளை என்பவற்றை நிர்ணயிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. சபையின் பரிந்துரைக் குழுவானது அதன் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்

சபையின் பரிந்துரைக் குழு நான்கு நிர்வாகமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, அதில் ஒருவர் மாற்று உறுப்பினராக இருக்கிறார். பொது முகாமையாளர்ஃ பிரதான நிறைவேற்று அலுவலர் , உதவி பொது முகாமையாளர்- (ர்சுரூடு), குழுவின் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் அழைப்பாளர்களாக கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். சபையின் செயலாளர சபையின் பரிந்துரைக் குழுவின் செயலாளராக செயல்படுகிறார்.

சபையின் பரிந்துரைக் குழுக் கூட்டங்கள் வருடத்திற்கு இரண்டு முறையாவது நடத்தப்படுகின்றன, இருப்பினும் தேவைகளின் அடிப்படையில், கூட்டங்கள் சரி செய்யப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ஒரு குழு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆண்டு அறிக்கையின் 67 ஆம் பக்கத்தில் சபையின் பரிந்துரைக் குழு அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

மூலதனப் போதுமை விகிதம்

மூலதன போதுமை விகிதம் என்பது வங்கியின் கிடைக்கக்கூடிய மூலதனத்தின் ஒரு அளவீடாகும், இது வங்கியின் இடர்- எடை கடன் வெளிப்பாடுகளின் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது. குறைந்தபட்ச மூலதன போதுமை கேள்வியை வங்கி எப்போதும் பராமரித்து வருகிறது.

